உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# காஞ்சி - சரவணதேசிகர்

அருளிச்செய்த

# ஒருபாவுண்மையுபதேசமூலமும்,

காஞ்சி-சிதம்பரமுனிவரருளிய

விருத்தியுரையும்.

காஞ்சி-முருகேசமுதலியாரவர்கள்விருப்பத்தின்படி

அஷ்டாவதானம்

**பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்**

மாணாக்கர்

**காஞ்சி - நாகலிங்கமுதலியாரால்**

பார்வையிடப்பட்டு,

**பிரமநகர்-வீராசாமிமுதலியாரால்**

சென்னை

ஆதிகலாநிதி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டன.

ஸர்வதாரிஞு மீனரவி.

இதன்விலை அணா-8.

*Registered Copy-right,*

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பரிசோதகர்வேண்டுகோள்.

பண்டையநல்வினையாற் பரதகண்டத்துச் சித்தாந்த வைதிக சைவமரபில்வந்து சிவஞானபோதமாதி சித்தாந்த சாத்திரங்களையோதத்தக்க வியல்பைப்பெற்ற சற்பாத்திரவான்களுக்கு இந்நூல் பெரும பிரயோசனத்தை விளக்கு மெனக்கருதி, எமது தீட்சாகுருவாகிய உபயவேதாந்த பிரவர்த்தகாசாரியரும, சிவாகமசித்தாந்த ஞானநிஷ்டருமாய் ஸ்ரீகாமகோடிபீடத்திலெழுந்தருளியிருந்த **ஸ்ரீமதுமுத்துக் கச்சபேசுவர சிவாசாரியசுவாமிகள்** உதவிய மூலப் பிரதிக்கு, இந்நூலாசிரியர் மரபினர் ம-௱-௱-ஸ்ரீ காஞ்சி-ம. சண்முகமுதலியாரவர்களிடத்திலிருந் துரையுடன்கூடிய வோர் சுத்தப்பிரதியைப்பெற்று, மற்றுஞ்சில பிரதிகளைக் கொண்டெமதாப்தர் ம-௱-௱-ஸ்ரீ பி. வீராசாமிமுதலியாரவர்களாலேட்டினின்றுஞ் செவ்வனே யெழுதுவித்து, எமக்குத் தமிழ் செவ்வறிவுறுத்திய அஷ்டாவதானம், **பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்கள்** முன்னிலையில் ஒருவாறு பரிசோதித்து அச்சிட்டு நிறைவேற்றினம். இந்நூலிலெவ்விடத்தாயினுஞ் சித்தாந்தமுரணேனும், வேறெவ்விதமுரணேனுங் காணின் புறங்கூறாது நேரே யெமக்குந் தெரிவிக்கின், நன்றியறிவுடனதனை சிரசாகவகித்து அத்திருத்தத்தையுந்தழுவி இரண்டாம்பதிப்பில் திருத்தி யச்சிட நிச்சயித்திருக்கின்றனம். நிற்க;—

அநாதிமுத்தனாகிய பெருமான் அநாதிபெத்தர்களாகிய ஆன்மாக்களின் அநாதிமலத்தை நீக்குவான் அநாதியிலேயே திருவாய்மலர்ந்தருளிய வேதாகமங்களின் இரகசியார்த்தங்களைக் கரதலாமலகமென வெடுத்துக்காட்டுந் தருக்க நியாயங்களால் வச்சிரலேபமாக நாட்டும் கிரியாகாரகங்களினுண்மையை விளக்கும ஞானசாத்திரங்களாகிய சித்தாந்தசாத்திரங்களு ளிதுகாறும அச்சிட்டவை நீங்க: அடியிற்குறித்தமற்றவை, அவரவர் அப்போதைக்கப்போது வாசித்துப் பயனுணர்ந்து செய்வகைசெய்து உய்வதற்குப் பத்துப்பாரங்கொண்ட ஒவ்வொரு சஞ்சிகை, சென்னை அண்ணாபிள்ளை வீதி ௩௦௨-வது கதவிலக்கமுள்ள கிரகத்தில் ஸ்தாபிதமாயிருக்கும நமது **இந்து தியலாஜிகல் அச்சியந்திரசாலையில்** மாதந்தோறும அச்சிட்டு அந்நாளுக்குக் கொடுத்துவருகிறனம.

சைவநெறிநிற்கும சிவப்பெருஞ்செல்வர்கள் யாமகொண்டமுயற்சி இடையூறின்றி முடியுமவண்ணம் ஆசீர்வதிப்பாராக. அடியிற்குறித்த பிரதிகள் ஒவ்வொன்றிலும மூன்றுக்குக்குறையாதிருக்கினும் இன்னும சிலவுளவேல் மேலும் பேருதவியாமாகலின், பிரதிகளுடையார் உதவிசெய்ய விரும்புவரேல் மிகுதியும் சிவபுண்ணியமுண்டாம அங்ஙனம் உபகரிப்பவர்க்குச் சஞ்சிகைகள் இலவசமாய்க் கொடுத்துவரப்படும.

| | | |
|---|---|---|
| ஞானாமிர்தம் உரை. | சித்தாந்தவசனபூஷணம். | சித்தாந்தபரிபாஷை. |
| தத்துவப்பிரகாசம். | சைவபூஷணம. | தருக்கபரிபாஷை. |
| பரமதிமிரபானு. | சித்தாந்தவிலக்கணம். | சைவபரிபாஷை. |

சென்னை.
சர்வதாரிஸு }

கா - நா.

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

வாக்குமனக்கெட்டாத வான்பொருளேயென்பவத்தை
நீக்கியருள்சுரக்க வேநினைந்து-பார்க்குட்
சரவணனென்றோர்நாமந் தாங்கிவந்துவீட்டை
விரவுமருளால் விளக்கிற்றால்.

## நிலைமண்டிலவாசிரியப்பா.

காமருநலஞ்செறி கல்வியுஞ்செல்வமு-மாமிருபொருளுமிக் கமை
ந்தோளிர்காஞ்சியி, லெங்குந்தமதுசீ ரொய்தியவறம்வளர் - செங்குந்தர்
குலத்திடைத் திருத்தகவுதித்தோன், றிருவாவடுதுறைச் சிவஞானதே
சிக-னருளாலொருமொழி யரும்பொருளறிந்தோன், புகலுமத்தேசிகன்
பொற்பதமுடிபுனைந்-தகமகிழ்கச்சி யப்பவாரியனாற்,பதிபசுபாசப்பண
பினைத்தெளிந்தோன்-றுதிபெறுசிறப்பொடு சுவர்க்கபுரத்துறை, தவப்
பிரகாச சற்குருவருளா - லுவப்புறுபஞ்சாக் கரநிலையுணர்ந்தோன், றிரு
ப்போரூர்வரு*சிதம்பரதேவன்-றரப்பெறுமுத்தி முடிவுதேர்தவத்தோ
ன், மாநந்தனமண மல்குமக்காஞ்சியி-லாநந்தருத்திரோ சற்காலயஞ்செய்,
தக்கச்சியப்ப வையனுலணிவளந் - தொக்கவண்டுவிடு தூதும்பதிற்றுப்,
பத்தந்தாதியும் பகர்கழிநெடிலும்-புத்தமிழ்தெனச்சுவை யுறப்புகல்வி
த்தோன், வலைத்தலைமானென மாழாந்திடுமெனை-யலைத்தலைச்செயும்பவ
வரந்தைதீர்தர, வுன்னருந்தத்துவ வுணர்வுதந்தாண்டோன்-பன்னுசீர்ச்
சரவண பவதேசிகன்சீர், செறிதருவீட்டு நெறியுண்மையுமுயர், வண்
மைசேரொருபா வுண்மையுபதேசமுந், துரிசறுபஞ்சாக் கரவநுபூதியு,
மாசறுநயவுப தேசசித்தாந்தமுஞ், சித்தநிலைதரு முத்திமுடிவுங், கருவே
றரச்செயு மொருபாவொருபதும், தன்னநுபவத்திற் சார-வுன்னுமிப்பு
வியினோ ருயவருளினனே.

இந்நூலாசிரியர்மாணாக்கருள்

**காஞ்சி-ஸ்ரீகச்சபாலயமுதலியாரியற்றியது.**

---

* சிதம்பரதேவரென்றது - திருப்போரியின்கண் எழுந்தருளியிருந்த சுத்தாத்வைத சித்தாந்த சைவாசாரியராகிய ஆதிசைவரை.

# நூலாசிரியர்வணக்கம்.

ஆரணமுறைசெயுங்காரணன்பசுபதி
பூரணன்புனிதன்புராதனனிருமல
னுயிர்க்குயிராய்நின்றுணர்த்துங்கடவு
ளனாதிமுத்திச்சிவனாலடிக்கீ
ழமர்ந்தறநால்வர்க்கோதியவர்களுக்
கஞ்செவிநிறையவருளியபெரியோன்
றன்னுருவாக்கவெண்ணுருக்கொண்டு
கௌரிதவஞ்செயுங்கம்பாநதிசூழ்
காஞ்சியம்பதியிற்கண்ணுற்றமர்ந்த
சரவணனானசாமியெம்பெருமான்
பொறிபுலன்கரணம்புல்லியவிடயப்
புலால்கவர்நாயெனும்பொல்லாப்புலையேன்
கண்டனக்கொடியேன்கள்வனென்றெண்ணாது
பரிசம்பாவனைபார்வையிம்மூன்றிற்
சிந்திததீக்கையாற்றிருவடிசூட்டி
யுனற்கருமொருபாவுண்மைப்பொரு
ளெனக்கருள்செய்தயியல்பினையெண்ணின்
முத்தியில்நித்தங்கண்டாசையுற்று
முதற்குருவானமுனர்ச்சமையநடையொடு
தருக்கம்விட்டுத்தத்துவமாணவங்
கழன்றுநானேதலைவனென்றோத
வருட்டெரிவாற்பினுந்தலைவனானென்னல்
மேலும்பிரமமென்னலுமொரீஇ
விளங்கறிவொன்றிச்செயல்ற்றின்பப்
பெருக்கொத்ததுவாய்நீயறவாழென்
றரிறபத்தெரித்திங்காண்டருளற்புத
மறவாவெனவுள்ளதிசயந்தருமே.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஒருபாவுண்மை

## உபதேசவுரை.

உரையாசிரியரருளிய உரைப்பாயிரம்.

எனையொழித்தொளிர்பேரின்பவீடுதவிடு
முனைவனைக்குஞ்சரமுகவனையிறைஞ்சுவாம்.

நூற்பயன்.

ஒருபாவுண்மையுபதேசமெனும்பாவினுக்கீதுரையிதனைத்
தெரிவாரின்பவீட்டினையேசெறிவாரிதனைத்தெரியாதார்
கருவாயினிற்பட்டொழியாமற்கறங்குபோலமூவுலகுந்
திரிவாரிதற்கோரையமிலைத்தெரிந்துதெளிமின்றவத்தீரோ.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஒருபாவுண்மை

## உபதேசவுரை.

முத்திதனித்தியங்கண்டாசையுற்றோன்
முதற்குருவாற்சமயநடைதருக்கம்விட்டுத்
தத்துவமுமாணவமுங்கழன்றானே
தலைவனெனலருட்டெரிவாற்றலைவனென்னல்
மெத்துமமதையிற்பிரமமென்னனீங்கி
விளங்கறிவினொன்றி * செயலற்றோங்கின்பத்
தொத்ததுவாய்த்தானறவாழ்ந்திருப்பனீதிங்
கொளிரொருபாவுண்மையுபதேசமாமால்.

என்பது இவ்வுலகத்தின்கண் மேன்மைபொருந்திய பக்குவத்தினாலே பலவகைப்பட்டிருக்கின்ற தேகாதிப்பிரபஞ்சத்தை யனித்தியமென்று கண்டு, நித்தியமாயுள்ள மோக்ஷத்தினிடத்திலே யதிமோகமுற்றிருக்கின்றோன் சர்வத்திற்கு முதன்மையாயுள்ள ஞானாசாரியரைத் தேடிக் கண்டு, அவரை வணங்கித்துதித்து, மெய்ப்பொருள் வினவி, ஞானதீக்ஷையைப்பெற்று, அவரநுக்கிரகத்தினாலே தானடைந்து நிற்கின்ற சமயநடையினையும் அச்சமயவாசனையா னவின்றுகொண்

* வினையற்றோங்கியென்பதும் பாடபேதம்.

டிருக்கின்ற தருக்கங்களையும் விட்டு, அதற்குமேற் பிருதிவிமுதனாத மீமுகிய தத்துவங்களையுந் தன்னைப் பேரந்தகாரமாய் மறைத்துநிற்கின்ற வாணவமலத்தினையுங்கழன்று, அவைகளைக்கழன்று நிற்கின்றவனேயென்னு மபிமானத்தா லவைகளைனத்தினுக்கு நானே தலைவனென்கின்றது மதற்குமே லருட்டெரிசனத்தானானே தலைவனென்கின்றது மதற்குமேல் முன்ன நீங்கிய வாணவத்தின் வாசனுபலத்தான் மிருந்த மமதையினுல் நானே பிரமமென்கின்றது நீங்கி,அவைகளை நீங்கியவிடத்து விளங்கிநிற்கின்ற பேரறிவாகிய திருவருளைத்தெரிசித்து, அதிலிரண்டறப் பொருந்தித் தற்செயலற்று நின்ற தற்செயலறுதியில் ஓங்கிநிற்கின்ற பேரின்பமாகிய மோக்ஷானந்தத்திற் கலந்தழுந்தி, அம் மோக்ஷானந்தமேயாய்த் தானென்னும் போத மோரணுவளவுந் தோன்றும லானந்தாதீதமாய் வாழ்ந்துகொண்டிருப்பன். இங்ஙனங்கூறிய விப்பாட்டொன்று மிவ்வுலகத்தின்கண் பிரகாசிக்கின்ற ஒருபாவுண்மையுபதேசமென்னும் பெயரதாம்.

ஆல்-ஈற்றசை. இதிலாசையுற்றேனென்றதை முத்திதனிலென்றதனேடும், நானேயென்றதை யருட்டெரிவாலென்றதனேடு மெத்து மமதையிலென்றதனேடுங்கூட்டிப் பொருளுரைத்ததெனவறிக. முதற்குருவாலென்றதை ஓங்கின்பத் தொத்ததுவாய்த்தானறவாழ்ந்திருப்பனென்ற திறாய் ஆங்காங்குமொட்டிப் பொருளுரைத்துக்கொள்க.

## மேல்விதப்பு.

மேன்மைபொருந்திய பக்குவத்தினாலே பலவகைப்பட்டிருக்கின்ற தேகாதிப்பிரபஞ்சத்தை யநித்தியமென்று கண்டு என்று முதலிலே தோன்றுப் பொருடோற்றுவித்துரைத்த தென்னையென்னில்:—

சோதிநிஷ்களமாய் நிற்கின்ற பரமசிவ மான்மாக்களிடத்துவைத்த பெருங்கருணையாற் பாசங்களை நீக்கி முத்தியடைவிக்கும்பொருட்டனாதிகேவலத்திற் களிம்புதோய்ந்த செம்புபோ லறிவின்றி மூழ்கிக்கிடக்கு மான்மாக்களைச் சகலத்தில் வருவித்து, தனுவாதியைக்கூட்டி,

இருவினைவழித்தா யின்பதுன்பங்களைத் துய்ப்பித்து, தானுந் தலந் தீர் ந்தமூர்த்தியாகச்சகளீகரித்துநின்று,புத்திபூர்வத்தினாலு மபுத்திபூர்வத்தி னாலுஞ் சரியை கிரியை யோக ஞானங்களாகிய வுபாயவுண்மைகளினா லுஞ் சிவபுண்ணியங்களை வருத்துவிக்க, அச்சிவபுண்ணியங்களின்மிகு தியான் மலபரிபாகமெய்திச் சத்திநிபாதம் பதிந் திருவினை யொப்புறு தன் முதலிய மேன்மைபொருந்திய பக்குவமெய்தினர்க்கன்றி யசுத்த துக்கமாயுள்ள தேகமு மதனைச்சார்ந்த விந்திரியாதி கரணங்களு மத்தேகத்துக்கிடமாய் நிற்கின்ற புவனங்களு மவைகளினின்று புசிக் குஞ் சத்தாதி விடயங்களாகிய போகங்களு மவைகளைப் புசித்தற் குதவியாய் நிற்கு மிளமையுஞ் செல்வமு முயிர்ச்சார்பாயுள்ள குடும்பங் களுமாகிய பலவகைப்பட்டிருக்கின்ற தேகாதிப்பிரபஞ்ச வாழ்வுகள் அனைத்தையு மநித்தியமெனக் காணப்பட்டதாகையான் முதலிலே மேன்மைபொருந்திய பக்குவத்தினாலே பலவகைப்பட்டிருக்கின்ற தேகாதிபபிரபஞ்சத்தை யநித்தியமென்று கண்டென்று தோன்றுப பொருடோற்றுவித் துரைத்ததெனக்கொள்க.

இதனான் மேன்மைபொருந்திய பக்குவமெய்தினரோ தேகாதிப் பிரபஞ்சவாழ்வுக ளனைத்தையு மநித்தியமென்று கண்டு நிற்பரொன்ப தாயிற்று.

இதில் சோதிநிஷ்களமாய் நிற்கின்ற பரமசிவ மான்மாக்களிடத்து வைத்த பெருங்கருணையாற் பாசங்களை நீக்கி முத்தியையடைவிக்கும் பொருட்டுச் சகளீகரித்து நின்றதென்றதற்குப் பிரமாணம்—

தணிகைப்புராணம்.

ஆதலாலாணிறுறுமவ்வாறுமருளியபொருள்களுந்தழுவிச்
சோதிநிட்களமாய்நின்றிடினுயிரின்றுரிசறுதெனக்கருணையினன்
மாதர்சேர்சகளவடிவுகொண்டிருந்தவரதனைவழிபடப்பெற்றோர்
கோதறுவினைகண்முழுவதுந்துமித்துக்குறுகுவர்சிவபுரத்தவன்பால்,

## ஆனந்தருத்திரோசர் பதிற்றுப்பத்தந்தாதி.

குறியேதுமில்லானென்குறிமாற்றக்குறியேற்று
னறிவாளனானந்தருத்திரோசம்பதியா
யுறைவானென்பதியெனக்கிங்கொழிக்கிற்பவிளமாவின்
முறிமேனிதரித்தானென்முடைமேனிகழிப்பவே.

செய்யபொன்னுருவானென்றும்வெண்பொடிதிமிர்ந்தானென்று
மையனையாண்டானென்றுமானந்தருத்திரோசத்
துய்யவேநின்றனென்றுமோதிடப்படாதேலெந்தாய்
பொய்யிருள்கழுவியாரோநின்னடிப்போதுகாண்பார்.

## ஷைவண்டுவிடுதூது.

வானமுதற் - பூதமுதற்காரணமாய்ப்பூத்தபவுதிகமாய்ப்
பேதமுமானபெருஞ்சோதி - கோதகன்ற
சிற்றறிவுக்குள்ளேசெறிந்துதிருமேனி
முற்றுமெடுத்தமுறைமையான்.

அனாதிகேவலத்திற் களிம்புதோய்ந்த செம்புபோலறிவின்றி மூழ்கிக்கிடக்கு மான்மாக்களைச் சகலத்தில் வருவித்துத் தனுவாதியைக் கூட்டி யிருவினை வழித்தா யின்பதுன்பங்களைத் துய்ப்பிக்குமென்றதற்குப் பிரமாணம்—

## குமாரச்சுவாமிகள்தோத்திரம்.

உன்பெருங்கருணையைமறந்துமலமயமாகியொளியிழந்தறிவுமாழ்கி-யுமிமூடுநெல்லெனக்களிம்புதோய்செம்பென்னயுவருடையளக்கொன்ன, வன்பெரும்பாந்தள்வாய்மணியென்னநீயுண்டவல்லிரும்பென்னநாளு-மறைவுண்டிருந்தவெனைக்கருணையாற்சகலத்தில் வருவித்துவினைவயத்தா, யின்பதுன்பங்களைத்துய்ப்பித்துமலபாகமெய்துமாறறிந்துகுருவா-யெழுந்தருளிவந்துதிரு வடிசூட்டிஞானநிலை யிதுவென்றுகாட்டியாண்

ட, நின்பெருங்கருணையினையென்னென்றுசொல்லுகேனெல்லைக்குமார சாமி-நித்தபரிபூரணவகண்டவடிவாய்நின்றநின்மலானந்தகுருவே.

## கச்சியப்பசுவாமிகள்தோத்திரம்.

தானெனைமுன்னிருளழுந்துநாளருட்கைகொடுவெடுத்துத்தனுமுன்னோ
னமில்சிற்றொளியுதவியிருவினைகாண்பித்தருத்தியிருட்பாகத்தி [ன
லானவருட்பதிவிலருட்குருவடிவாயெழுந்தருளியடிசேர்வித்தா
னீனமிலாவடுதுறைக்கச்சியப்பதேசிகன்மெய்யெழிலுளானே.

தானுந் தலந் தீர்த்த மூர்த்தியாகச் சகளீகரித்துநின்று அபுத்திபூர் வமுதலாயுள்ள சிவபுண்ணியங்களை வருத்துவிக்குமென்றதற்கு பிர மாணம்—

## ஆனந்தருத்திரேசர்கழினெடில்விருத்தம்.

மூர்த்தியுந்தலமுந்தீர்த்தமுமாகிமூடனேற்கறிவுருவண்ண மொய்த் தெழுமருளாற்புண்ணியமாக்கிமுன்னறிவுறப்பலவிளைத்துச், சேர்த்தக ச்சரியைநான்குமேலாகத்திகழுமந்நான்கையுஞ்செறித்துத் திருத்துநின் விரகையுள்கியுள்ளுருகாச்சிறியனேன்றனையுமாண்டருளாய், பார்த்தலை நாதமிறுதியாக்கிடந்தபலவகைத்தத்துவங்கடந்து பகையுறவிறந்தவுயிர் நிலைகடந்துபணிகொளுங்கருத்தினைவாட்டி, யார்த்தபேரிசையினருளை யுங்கடந்திட்டறிபவர்க்கறிவுறுஞ்சுகமே யழகிடைகிடக்குங்காஞ்சிவீற் றிருந்தவானந்தருத்திரேசுரனே.

## சித்தாந்த தெரிசனம்.

மூர்த்திகள்சேவித்தத்துந்தீர்த்தத்துண்மூழ்கியத்துஞ்
சேத்திரத்திற்சென்மித்தத்தும்.

அபுத்திபுத்திபூருவத்தாலாங்கிருநாலெய்திச்
சுபுத்திவருமாவிதுலங்கும்.

தெய்வஞ்சிவமென்னுஞ்சித்தமுண்டாமக்கணமே
யுய்யுநெறியுண்டாமுயிர்க்கு.

ஈசனடியார்க்காணிலென்புருகிக்கைகுவித்து
மாசில்சரிதைக்குள்வரும்.

சென்றாலயந்தோறுந்தீபமலகிட்டுருகி
நன்றாமலர்தொடுக்குநாடு.

பருப்பதங்கேதாரம்பகர்காசிகாஞ்சி
திருப்பதிநற்காளத்திரி.

ஈசனிருக்குமிடமீதெல்லாஞ்சென்றிறைஞ்சிப
பாசமறுக்கும்பசு.

முன்னோன்சரிதைமுற்றிமுற்கிரியைவந்தணைந்திட்
டுன்னுசத்தியைந்தினையுற்று.

மிருத்திகைலிங்கத்தின்விதிப்படியற்சிக்கின்
மரித்தல்பிறப்பகற்றுமால்.

மன்னும்படிகத்தின்வாணலிங்கமேயதிகம்
பன்னுசுயம்பாதலினாற்பண்.

## ஔவைக்குறள்.

உள்ளத்தினுள்ளேயுறப்பார்த்தங்கொண்சுடரை
மெள்ளத்தானற்சிக்குமாறு.

பேராக்கருத்தினாற்பிண்டத்தினுண்ணினைந்
தாராதனைசெய்யுமாறு.

பத்தியாலுள்ளேபரிந்தரனைத்தானோக்கில்
முத்திக்குமூலமது.

## சித்தாந்த தெரிசனம்.

அந்தரியாகப்பூசையாலுமகந்தெளிந்து
சிந்திதயோகத்திற்செலும்.

ஆதாரமாறுங்கண்டப்பாற்பரவெளியி
னாதாந்தவின்பத்தைநாடி.
ஊனமிலாயோகத்தைச்சின்னாளுழக்கியோரீஇ
ஞானத்தைத்தாவுமுயிர்நாடு.
ஈசனருணாலையெஞ்ஞான்றுகாண்பமெனு
மாசைபெருகுமது.

## சிற்றம்பலநாடிசெல்காலத்திரங்கல்.

ஊனொழித்திட்டென்றுமொழியாதவீடுதரு
ஞானகுருவேணுமென்றுநாடாதிருந்தனமே.

அங்கமலர்த்தாளிரண்டுமென்றேதலைக்கொண்டு
பொங்குமலம்போக்காமல்புலன்வழியேபோக்கினமே.

பூதவுடலம்பொருளல்லவென்றுணர்ந்த
போதந்தனைமுன்னேபொருந்தியிடப்பெற்றிலமே.

## திருவண்ணாமலையையாதசகாரியம்.

அபுத்தியாற்புத்திதன்னாலகச்சரியாதிநான்காற்
சுபுத்தியோடந்தநான்காற்றோன்றுமேசிவதன்மங்க
ளுபத்திரமின்றிப்பத்துமொன்றன்பின்னொன்றுதோன்றுஞ்
சுபத்தினன்மலங்களெல்லாந்துடைத்துயிர்தோன்றுமன்றே.

அச்சிவபுண்ணியங்களின் மிகுதியால் மலபரிபாகமெய்திச் சத்தினிபாதம்பதிந் திருவினை யொப்புறுதன்முதலிய மேன்மைபொருந்திய பக்குவமெய்தினர்க்கென்றதற்குப் பிரமாணம்—

## பஞ்சாக்கரப்பஃறொடை.

**வந்தபெரும்புண்ணியத்தால்வாய்த்தமலபாகத்தாற்
றந்தசத்திசேர்வினைதாமொப்ப.**

## ஆனந்தருத்திரேசர் பதிற்றுப்பத்தந்தாதி.

தானேவல்லிருட்கிடந்தளாட்பிறக்கைதந்துமனமாதியாற்றழைத்தகன்ம, மாறுறுபொருத்திமலபாகமாக்கியருட்பதித்துக்கன்மநோக்கியாண்ட, வானேயுமானந்தருத்திரேசவரதனேமாவடிமூளைத்தமாணிக்கத்தைக், கானேயுமலர்தூவிக்கருணைநோக்கிக்கரைந்துருகிப்பணிகடப்பாடுறுவதென்றே.

## திருவண்ணுமலையயா தசகாரியம.

பக்குவந்தன்மமூலம்பரிபாகம்பாதமொப்பு
சற்குணக்குரவன்சாற்றுஞ்சத்தியசத்தமெல்லா
மிக்கிரமத்திஞலேயிடரிலாதறிந்தசீவ
னக்கணம்பிறவிநீத்தேயளவிலாசுகமாரும்மே.

## சித்தாந்த தெரிசனம்.

வினையொப்புபாகம்வியன்சத்திபாதந்
தனையெய்துமெய்துந்தரம்.

கூத்தியைப்போற்பாவங்குலக்கொடிபோற்புண்ணியங்க
ணீத்தார்க்கிரண்டுநெருப்பு.

நாடுவினையொப்புவந்தநாதாந்தயோகருக்கிங்
கோடுந்திரவியமுமொன்று.

இருவினையொப்புற்றவுயிரிதயத்தானந்
திருவம்பலமிறைக்குத்தேர்.

## காஞ்சிப்புராணம்.

இருவினையொப்புவாய்ந்தபருவம்வந்தெய்தலாலே
மருவருந்துறக்கவைப்பினரசியல்வாழ்க்கைதன்னை
யருவருத்துவர்த்துக்காவற்சிறையிடையகப்பட்டோரின்
வெருவரும்பதைக்குமஞ்சும்வேறிவைகருத்திட்கொள்வான்.

அழியுமிவ்விடயவாழ்விற்களித்திருந்தந்தோகெட்டேன்
பழிபவக்கடலிற்காலப்பாந்தள்வாய்கிடந்துநாணேன்
வழிமுறையறியாமாயவல்லிருட்படுகேர்ச்சேற்று
ளிழியுமூர்ப்பன்றியேபோலுழந்தவென்னறிவுநன்றால்.

## மகாவாக்கியதசகாரியம்.

சற்குருவினருளாலுந்தவமுடிவின்பயனுலுஞ்சனனநீங்கிச்
சிற்கனவாழ்வடைவதற்கேசிந்தைசெயுந்திறமுடையசீலராகி
நிற்குநிலேசாதனங்களொருநான்குமறைநான்குநீந்தியோக
வற்கமொடுசகலகலேயுந்தெரிந்துஞானநெறிவருவராமால்.

மேன்மைபொருந்திய பக்குவமெய்தினரே யசுத்ததுக்கமாயுள்ள தேகமு மனித்தியமெனக் காண்பரென்று கூறியதற்குள் தேகமசுதத மென்றதற்குப் பிரமாணம்—

## திருக்கடைக்காப்பு.

என்பிளுற்கழிநிணைத்திறைச்சிமண்சுவரெறிந்திதுநம்மில்லம்
புன்புலாளுறுதோல்போர்த்துப்பொல்லாமையான்முகடுகொண்டு
முன்பெலாமொன்பதுவாய்தலார்குரம்பையின்மூழ்கிடாதே
யன்பனூரர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே.

நிணங்குடர்தோனரம்பென்புசேராக்கைதானிலாயதன்றூற்
குணங்களார்க்கல்லதுகுற்றநீங்காதெனக்குலுங்கினூயே
வணங்குவார்வானவர்தானவர்வைகலுமணங்கொடேத்து
ம[illegible]ங்களூரர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே.

## தேவாரம்.

கால்கொடுத்திருகையேற்றிக்கழிநிணைத்திறைச்சிமேய்ந்து
தோல்படுத்துதிரநீராற்சுவரொடுத்திரண்டுவாச
லேல்வுடைத்தாவமைத்தங்கேழுசாலேகம்பண்ணி
மால்கொடுத்தாவிவைத்தார்மாமறைக்காடனூரே.

## திருவாசகம்.

பொத்தையூன்சுவர்புழுப்பொதிந்துளுத்தசும்பொழுகியபொய்க்கூரை
யித்தைமெய்யெனக்கருதிநின்றிடர்க்கடற்சுழித்தலைப்படுவேனை
முத்தமாமணிமாணிக்கவயிரத்தபவளத்தின்முழுச்சோதி
யுத்தனுண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே.

புறந்தோல்போர்த்தெங்கும்புழுவழுக்குமூடி
மலஞ்சோருமொன்பதுவாயிற்குடிலை
மலங்கப்புலனைந்தும்வஞ்சனையைச்செய்ய.

## நாலடியார்.

தோற்போர்வைமேலுந்துளைபலவாய்ப்பொய்ம்மறைககு
மீப்போர்வைமாட்சித்துடம்பானுன் - மீப்போர்வை
பொய்ம்மறையாக்காமம்புகலாகுமற்றதனைப்
பைம்மறியாப்பார்க்கப்படும்.

## உலகாம்பிகைதுதி.

ஒன்றுமலச்செடிலொன்பதுபீறலவ்வொன்பதிலு
நின்றுமலச்செடில்வீசுமெந்நேரமுநீர்வட்டனைறைக்
கன்றுதுடைப்பினும்போகாதுபாழ்த்தவருவருப்பை
யென்றுதுடைப்பனுலகேசுரகமிதிலுநன்றே.

## திராவிடமாபாடியமுனிவரர்.

பந்தவுடல் வீண்பாடு பட்டவுடல் சீசீதுற்
கந்தவுட லொன்றுக்கா காதவுட - லிந்தவுடல்
வைத்துப்பார்த் தென்ன வலியவுயிர் மாய்த்துச்
செத்துப்போ னுலுநல்ல தே.

## இளசையந்தாதி.

தவறுமிக்கிழைத்தோன்கழுத்தினிலிறைவன்சாற்றெுணப்புழுத் தலைநாயை, யவமுறப்பிணித்தால்முகஞ்சுளித்தழுங்கி யருவருத்தரை யனையிரந்து, நவில்பிணிப்பகற்றவிழைவரோயல்லானன்கெனமதிப்ப ரோவதுவே, புவமையென்றுணர்ந்தோருடலையோம்புவரோவிளசை வாழொருவனைமறந்தே.

## தணிகைப்புராணம்.

சமனியககடமேயாயினும்பவ்வீத்தங்குறின்விழைஞரும்பற்று
ரமிழ்தமேயானுந்துய்ப்புறிற்பவ்வீயாக்குமிவ்வுடற்புகரறிந்து
மிமிழ்தரப்பற்றுமடவருக்குரைத்துமென்பயன்றீர்த்தமாடிடினு
முமிழ்முடையாக்கைசுசியுறுதிறைவனுண்மைதேர்ந்துயிர்சுத்தியுறுமே

தேகந் துக்கமென்றதற்குப் பிரமாணம்—

## திருக்கடைக்காப்பு.

செடிகொணோயாக்கையைம்பாம்பின்வாய்த்தேரைவாய்ச்சிறுபறவைக்
கடிகொள்பூந்தேன்சுவைத்தின்புறலாமென்றுகருதினயே
முடிகளால்வானவர்முன்பணிந்தன்பராயேத்துமுக்க
ணடிகளாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே.

நீதியால்வாழ்கிலைநாள்செலாநின்றனநித்தநோய்கள்
வாதியாவாதலானாளுநாளின்பமேமருவினயே
சாதியார்கின்னரர்தருமனும்வருணர்களேத்துமுக்க
ணாதியாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே.

## சித்தாந்ததெரிசனம்.

அன்னையகட்டில்லனேகதுயரொன்சொல்கே
னென்னைப்பிறவியிது.

பிறக்கும்பொழுதமிகும்பேரிடும்பைபின்னுந்
துறக்கமுடியாத்துயர்.
குழந்தைபருவத்துங்குமாரபருவத்
தழுந்துந்துயருக்கணு.

ஞானவிளக்கம்.

காமாதியாலுங்கடுவெம்பசியாலுஞ்
சாமாறுந்துன்பமதைச்சாற்றகிலேன்-கோமானே
யெண்சாணுடம்பாலேபட்டதுயரொன்சொல்கேன்
புண்பாலில்வேனுழைந்தாற்போல்.

தணிகைப்புராணம்.

கருவினின்மழவிற்கற்குங்காலையிற்பருவமாறிற்
பெருகியபொழுதினோயிற்பிரிவினிற்பகையினீட்டும்
பொருள்வயின்வேட்டதெய்தாப்புன்மையின்முதுமைதன்னின்
மருவியவிழப்பிற்சாவின்வன்றுயர்மனிதர்க்குண்டே.

வேதகிரியீஸ்வரர்தோத்திரம்.

ஆயுதரந்தனிலேயும்பொழுதனைமம்பேரிடராகுமகி லத்துறுசிறுகு ழவிப்பருவத்தறியாமையினிடரா.மேயகுமாரத்திடர்காமத்தாலெழின்ம னைசுதரொனவே யேயும்பொழுதுமிடர்பிணியாலிடரிலதாமிடிவந்தாற், காயும்பசியாலிடர்பின்னரைதிரைகாணுறுபோதுமிடர் காலனுதித்திடு போதுறுமிடரைக்கடவுண்ணீயறிவாய், மேயவிடர்க்கடன்மூழ்குமெ னைச்சுகவேலையினீவைப்பாய் வேதகிரிப்பவரோகவயித்தியவேணிமு டிக்கனியே.

சிவதருமோத்திரம்.

காலையின்மலத்தினுற்கடிதுதுன்பமே
சாலவும்பசியினுற்றளர்வருச்சியின்
மாலையிற்காமநோய்மலியவாடுவோர்
வேலைகடோறுமிடர்வினையும்விஞ்சியே.

## ஆனந்தருத்திரோசர்பதிற்றுப்பத்தந்தாதி.

காலையின்மலநோயுச்சிக்கடும்பசியுடற்றுந்துன்ப
மாலையிற்காமபீழையிடையிடைமற்றனந்த
மாலையிற்கரும்புபோன்றேனனந்தருத்திரோச
மேலைவல்வினையேருமைவிழுத்தருகலப்புவையே.

இன்னலேயாக்கையென்னப்பட்டனவெவையுமாவிக்
கன்னதுதெரிதராமையானந்தருத்திரோசன்
றன்னை நன்றடுத்தும்போகத்தனுக்கனையிரத்திநெஞ்சே
பொன்னடிப்போதேவேண்டத்தக்கதுபுகழ்ந்துவேண்டே.

## வைராக்கியதீபம்.

உடலிதுற்பவத்தோனைம்பெருந்துயர் மாய்ந்துறுகணத்துயரினெண், மடங்காலிடையுளதிதிக்கட்டுயர்மூப்பறிவோங்கிளமையிற்பிணியுறுவிடத்தும், விடலரும்பசிநோய்காமநோய்தணிப்பான்மிகுபொருடேடுதறுயரீண், டடையினுமதனைக்காக்குதறுயர்வேந்தாயினுமிகுநராற்றுயரோ.

இளமையிற்பிணியற்றொருகுடைகீழ்க்கிழிருநிலம்முழுவதும்புரக்கும், வளமைபெற்றுடையமகற்குமெப்பொழுதும்வருங்கொல்கூற்றெனும்பயத்தானு, முளமிகப்பறைநின்றறையுமேபுவிமீதுடையரோமற்றையரின்பங், களிமிகுத்திடுவர்தெளிவிலாமையின்மேற்காரியங்கருதுூர்நரரே.

## தணிகைப்புராணம்.

இத்திறத்தினர்கள்மாந்தரேனையவுயிர்களெல்லாந்
தத்தமக்கனந்தகோடிப்பகைவராய்த்தாக்கப்பட்டும்
பொத்தியபசியிற்பட்டும்பொழுதிருதுடற்றப்பட்டு
மெத்தியதுயரத்தாழ்ந்துவிளிவனபல்லாற்றானும்.

### தேகத்தை அநித்தியமென்று கண்டுநிற்றற்குப் பிரமாணம்—

### திருப்பாட்டு.

பரிந்தசுற்றமுமற்றும்வன்றுணையும்பலருங்கண்டழுதெழவுயிருட
லைப், பிரிந்துபோமிதுநிச்சயமறிந்தாற்பேதைவாழ்வெனும்பிணக்கிலை
த்தவிர்ந்து, கருந்தடங்கண்ணிபங்கனையுமைக்காலகாலனைக்கடவுளை
விரும்பிச், செருந்திபொன்மலர்திருத்தினைநகருட்சிவக்கொழுந்தினைச
சென்றடைமனனே.

### திருக்கடைக்காப்பு.

தந்தையார்போயினார்தாயரும்போயினார்தாமும்போவார் வா
கொந்தவேல்கொண்டொருகூற்றத்தார்பார்க்கின்றார்கொண்டுபோ
ரெந்தநாள்வாழ்வதற்கேமனம்வைத்தியாலேழைநெஞ்சே
யந்தணூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே.

### தேவாரம.

நடலைவாழ்வுகொண்டென்செய்திர்நாணிலீர்
சுடலைசேர்வதுசொற்பிரமாணமே
கடலினஞ்சமுதுண்டவர்கைவிட்டா
லுடலினார்கிடந்தூர்முனிபண்டமே.

### திருவள்ளுவர்.

நெருநலுளனொருவனின்றில்லையென்னும்
*பெருமையுடைத்திவ்வுலகு.
குடம்பைதனித்தொழியப்புட்பறந்தற்றே
யுடம்போடுயிரிடைநட்பு.

### நாலடியார்.

மலைமிசைத்தோன்றுமதியம்போல்யானைத்
தலைமிசைக்கொண்டகுடையர் - நிலமிசைத்
துஞ்சினாரென்றெடுத்தூற்றப்பட்டாரல்லா
லெஞ்சினாரிவ்வுலகத்தில்.

யாக்கையையாப்புடைத்தாப்பெற்றவர்தாம்பெற்ற
யாக்கையாலாயபயன்கொள்க - யாக்கை
மலைபாடுமெஞ்சுபோற்றோன்றிமற்றாங்கே
நிலையாது நீத்துவிடும்.

புன்னுனிமேனீர்போனிலையாமையென்றெண்ணி
யின்னினியேசெய்கவறவினை - யின்னினியே
நின்றானிருந்தான்கிடந்தான்றன்கேளலறச்
சென்றானெனப்படுதலான்.

ஆனந்தத்திரட்டு.

பிறந்தாரிறத்தல்பிழையாதெனவறிந்தா
லுறுந்துயரொழிந்தினியதுண்ணநினைவாரோ
மறந்துவிடயத்துமயலுற்றிடுதல்வானத்
திறந்தவரையுச்சிவிழுவோனிடைகொளின்பம்.

சிவஞானசித்தியார்.

கருவினுளழிவதாயுங்கழிந்திடாதழிவதாயும்
பரிணமித்தழிவதாயும்பாலனாயழிவதாயுந்
தருணனாயழிவதாயுந்தானரைத்தழிவதாயும்
முருவவேயழிவேயானாலுன்னபோதேபாருய்ய.

பாடுதுறை.

நெஞ்சிலேகட்டையடுக்கியிட்டுநீட்டிநிமிர்த்துக்கிடத்துதன்முன்ன
மஞ்சையுமுள்ளேயடக்கிக்கொண்டிங்கானந்தமாயறிவாகவல்லீரோ.

அம்மையுமப்பனுங்கண்டிருக்கவந்தகனாருயிர்கொள்வதன்முன்ன
மும்மையுமுனையும்வேறதாகவுள்ளபொழுதேவுணரவல்லீரோ.

மக்களுங்கத்தமனைவிகத்தமாயவுடலெரிகொள்வதன்முன்ன
நிட்களமானவறிவுதன்னைநின்வடிவாகநினையவல்லீரோ.

## கருவைவெண்பாவந்தாதி.

சென்றதுகாலஞ்சிதைந்ததிளமைநல
நின்றதுசாவென்றுநினைந்துருகி - மன்றி
னடிக்கின்றபால்வண்ணர்நாமமெண்ணுமாந்தர்
படிக்கின்றநூலெல்லாம்பாழ்.

நலனழிந்துமூப்படைந்துநாணழிந்துநோயாற்
புலனழிந்துகண்புதையும்போதி - லுலக
விறைவியொடும்பால்வண்ணாவென்றென்றுனையே
மறுகியழைப்பேனோடிவா.

## பட்டினத்தடிகள்.

வினைப்போகமேயுறுதேகங்கண்டாய்வினைதானொழிந்தாற்
றினைப்போதளவுநில்லாதுகண்டாய்சிவன்பாதந்தனை
நினைப்போரைமேவுநினையாரைநீங்கினன்னிலையினின்று
னுனைப்போலொருவருண்டோமனமேயெனக்குற்றவரே.

## பதிபசுபாசவிளக்கம்.

எந்நாளிருப்பினுமிறப்பதுநிச்சயம்
பொன்னாட்டிலிந்திரனாயினும்பொன்றுவ
னன்னாட்கழியுமுன்ஞானத்தினாலே
தன்னாலறிவதுசற்குருபாதமே.

## சித்தாந்ததெரிசனம்.

நீர்க்குமிழிமின்னற்குமுண்டுநிலையில்லை
யாக்கைக்கென்றெண்ணியறிந்து.

## தணிகையாற்றுப்படை.

பலவகைத்தொழிலும்பண்புறநவின்று
சிந்தைவழிச்செலுமைந்துநிலைபெறீஇ
யாள்வினைத்திறத்தினயராயாக்கையு
நீடின்றிரியுநிலைமைநாடி.

தேகத்தைச்சார்ந்த விந்திரியாதி கரணங்களு மநித்தியமென்று கண்டு நிற்றற்குப் பிரமாணம்—

பிரபுலிங்கலீலை.

இந்தியமோரொன்றாய்விட்டிடின்மற்றையொன்றுசாரு
முந்தியமனமழிப்பமுற்றும்போமணியபாம்பி
னைந்தலைகளினுளொன்றையரிந்திடின்மற்றொன்றாலஞ்
சிந்திடுமிடறரிந்தாற்றீர்ந்திடுமொருங்குமாதோ.

சிவப்பிரகாசம்.

காட்டிடுங்கரணமொன்றுமில்லையேற்காணொணாதா
நாட்டியவிவற்றான்ஞானநணுகவுமொண்ணாமுன்ன
மீட்டியதவத்தினாலேயிறையருளுருவாய்வந்து
கூட்டிடுமிவற்றைநீக்கிக்குரைகழல்குறுகுமாறே.

சொக்கநாதர்வெண்பா.

எக்காலமெய்க்கேயிளையிடுதலிற்றிடுமோ
வெக்காலமிக்கரணமிற்றிடுமோ-வெக்காலம்
பேசானுபூதிபிறந்திடுமோவென்னுளத்தி
லாசானேசொக்கநாதா.

துகளறுபோதம்.

மண்முதலாய்நாதாந்தமாய்வந்ததத்துவத்தி
னுண்மையறிந்தெல்லாமொழிந்தாயே-யெண்ணிலிது
தத்துவாதீதமெனச்சாற்றுங்காண்சைவமறை
யத்துவாவெல்லாமற.

தேகத்திற் கிடமாய்நிற்கின்ற புவனங்களு மநித்தியமென்று கண்டு நிற்றற்குப் பிரமாணம்—

### சிவஞானசித்தியார்.

மண்டனில்வாழ்வும்வானத்தரசயன்மாலார்வாழ்வு
மெண்டருபூதபேதயோனிகளியாவுமெல்லாங்
கண்டவிந்திரமாசாலங்கனாக்கழுதிரதங்காட்டி
யுண்டுபோலின்றாம்பண்பினுலகினையசத்துமென்பர்.

### ஞானசாகரவெண்பா.

மன்னகர்மன்றுமனைவாவிகூடபங்கழனி
யென்னதெனவந்தவர்களெல்லையிலை - யின்னமது
சொல்லவருவாருந்துலைவரியவொன்றறிந்து
நில்லதனைவேறாகநீ.

### சிவபோகசாரம்.

எத்திசையுமெவ்வுலகுமெத்தொழிலுமெப்பயனு
நித்தியமென்றென்றுநினையாதே - புத்தியினாற்
கண்ணாடியிற்றோன்றிமாய்ந்துவிடுங்காணிவற்றைக்
கண்ணாடியிற்கனவிற்காண்.

புவனங்களினின்று புசிக்குஞ் சத்தாதிவிடயங்களாகிய போகங் களு மநித்தியமென்று கண்டுநிற்றற்குப் பிரமாணம்—

### சிவஞானசித்தியார்.

ஒருபுலனுகரும்போதங்கொன்றிலையொன்றின்பாலும்
வருபயன்மாறிமாறிவந்திடுமெல்லாமாறு
மொருபொழுதுணரினுண்டாமல்லதிவ்வல்லல்வாழ்க்கை
மருள்கனவதுவும்போலமாயும்பின்மாயுமன்றே.

### ஒழிவிலொடுக்கம்.

சத்தாதிதத்துவம்போய்த்தானுமெதிருங்கழன்றால்
சித்தாந்தவேதாந்தச்சீர்மையிலே - முத்தி
யவிர்வசனமின்பவநீதமெனினாங்கே
பினமிடுதல்கன்மம்பினாய்.

## சிவபோகசாரம்.

காண்பதும்பொய்கேட்பதும்பொய்காரியம்போலேயிதமாய்ப்
பூண்பதும்பொய்யெவ்விடத்துப்போகமும்பொய்-மாண்பாகத்
தோற்றியின்பவெள்ளமாய்த்தன்னியென்னுட்சம்பந்தன்
வீற்றிருப்பதொன்றுமேமெய்.

போகங்களைப் புசித்தற்குதவியாய் நிற்கு மிளமையு மநித்தியமென்று கண்டுநிற்றற்குப் பிரமாணம்—

## நாலடியார்.

நரைவருமென்றெண்ணிநல்லறிவாளர்
குழவியிடத்தேதுறந்தார் - புரைதீரா
மன்றுவிளமைமகிழ்ந்தாரேகோலூன்றி
யின்றுங்கெழுந்திருப்பார்.

பனிபடுசோலைப்பயன்மரமெல்லாங்
கனியுதிர்ந்துவீழ்ந்தற்றிளமை - நனிபெரிதும்
வேற்கண்ணளென்றிவளைவெஃகன்மின்மற்றிவளுங்
கோற்கண்ணளாகுங்குனிந்து.

## பிரமோத்திரகாண்டம்.

கூனிமூத்தக்குரங்கெனக்கோல்பிடித்
தேனையோருமிகழவிருமலர்
தானையோடுஞ்சரிந்துறச்சாவது
மானிடர்க்கிநல்லாயொருவண்ணமே.

## அருணைகிரியந்தாதி.

காதுநெகிழாமுன்கண்ணிருளாமுன்
வாயிலுள்ளபல்லும்விழாமுன் - காயம்பார்த்
தோடுகமன்வாசமுன்னுள்ளமேசோணகிரி
நாடுகமவென்றேநட.

### சித்தாந்ததெரிசனம்.

நல்வினைமைகாலத்திறுதனைச்சற்றுன்றாது
கொல்லூப்பாலாவிகுலையும்.

### கருவைக்கலித்துறையந்தாதி.

புகுவதுமூப்புவனப்போடிளமையும்போயதினி
மிகுவதுநோயுந்துயருமென்றூலடன்மேவலரூர்
நகுவதன்முன்னெரித்தோர்களவீசனைநாம்பணியத்
தருவதுகாணெஞ்சமேயிதுபோலுஞ்சதுரில்லையே.

### தணிகையாற்றுப்படை.

ஊன்றுவிரலழுந்தாதுடறசைதிணிந்து
கான்றதேன்றெரியற்கருங்குழன்மகளிர்க்
கணங்கொளகிறீஇயாருயிர்கவர்க்கும்
வளங்கவின்கொழிக்கும்விளங்குசீரிளமையு
நீடின்றிரியுநிலைமைநாடி.

போகங்களைப் புசித்தற்குதவியாய்நிற்குஞ் செல்வமு மநித்தியமென்று கண்டுநிற்றற்குப் பிரமாணம்—

### திருக்குறள்.

கூத்தாட்டவைக்குழாத்தற்றேபெருஞ்செல்வம்
போக்குமதுவிளிந்தற்று.

### நாலடியார்.

துகடீர்பெருஞ்செல்வந்தோன்றியக்காற்றொட்டுப்
பகடுநடந்தகூழ்பல்லாரோடுண்க
வகடுறயார்மாட்டுநில்லாதுசெல்வஞ்
சகடக்காற்போலவரும்.

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.


செல்வர்யாமென்றுசெல்வுழியெண்ணாத
புல்லறிவாளர்பெருஞ்செல்வ - மெல்லிற்
கருங்கொண்மூவாய்திறந்தமின்னுப்போற்றோன்றி
மருங்கறக்கெட்டுவிடும்.

### வயிராக்கியசதகம்.

கெடுவதாம்பொருட்செல்வமேபல்வகைக்கிலேசமற்றதுதன்னை
விடுவதேசுகமெனவுமோர்க்கிலைமுனம்விடுத்துளோர்க்குனைப்போலு
நெடியயூகமதில்லையோசொல்லுதிநெஞ்சமேயினிப்பற்றற்
றடைதுமேலரனருளையேபொருளெனவருஞ்செல்வமதுதானே.

### தணிகையாற்றுப்படை.

அளகைக்கோமானுளமழுக்கறுப்ப
நிலந்தினக்கிடந்தநெடுநிதிச்செல்வமு
நீடின்றிரியுநிலைமைநாடி.

உயிர்ச்சார்பாயுள்ள குடும்பமுதலாகிய பல்வகைப்பட்டிருக்கின்ற தேகாதிப் பிரபஞ்சவாழ்வுகளனைத்து மநித்தியமென்று கண்டுநிற்றற்குப் பிரமாணம்—

### நாலடியார்.

கேளாதேவந்துகிளைகளாயிற்றோன்றி
வாளாதேபோவரான்மாந்தர்கள் - வாளாதே
சேக்கைமரனொழியசேணீங்குபுட்போல
யாக்கைதமர்க்கொழியநீத்து.

### உபதேசமாலை.

தாயனையுந்தந்தையையுந்தற்சார்ந்தகேளிரையு
மாயுமயல்காட்டுமனைவியையுஞ் - சீயென்று
சொற்பனம்போற்கண்டெட்டாத்தூரப்போயோகநிலை
நிற்பவனேஞானியெனநேர்.

சிந்தாமணி.

தொல்லைநம்பிறவியெண்ணிற்றொடுகடன்மணலுமாற்ற
வெல்லையிலவற்றினுள்ளுமேதிலம்பிறந்திறந்து
செல்லுமக்கதிகடம்மிற்சேர்கிலஞ்சேர்ந்தவிந்த
வில்லிடையிரண்டுநாளைச்சுற்றமேயிரங்கல்வேண்டாம்.

உபதேசகாண்டம்.

மக்களைநிதியைப்பேதைதமகளிரைமருங்குசூழ்ந்த
ஒக்கலைநோக்கியேமாந்துறுகதிநோற்கலாராய்
மிக்கிழிநரகத்தாழ்வர்மென்சிறுபறவைகண்டந்தோ
கக்கவெஞ்சுழனுக்கண்டைகொண்டுவிண்டியலாதன்றே.

சித்தாந்ததெரிசனம்.

உயிர்ச்சார்வாலாவியுணர்வழிந்துகாகங்
குயிற்சார்வையொக்குங்குறி.

ஞானசாகரவெண்பா.

ஒழிந்தபிறப்பெல்லாமுடனுகிவேறாய்க்
கழிந்தவர்களெல்லையில்லைகண்டாய் - மொழிந்துலகிற்
றந்தைதாய்தம்பிதமையன்புதல்வனென
வந்ததாலுள்ளவழக்கு.

ஏற்கும்புவியிடத்திலிந்திரசாலங்கனவு
நீர்க்குமிழிபேய்த்தேர்நினைப்புமறப் - பார்க்குமது
போலநிலைநில்லாதபொய்வாழ்வைமெய்வாழ்வென்
றேலநிலைநில்லாவாறென்.

பட்டணத்தடிகள்.

முடிசார்ந்தமன்னருமற்றுமுள்ளோருமுடிவிலொரு
பிடிசாம்பராய்வெந்துமண்ணாவதுங்கண்டபின்னுமிந்தப்
படிசார்ந்தவாழ்வைநினைவதல்லாற்பொன்னினம்பலத்தா
னடிசார்ந்துநாமுய்யவேணுமென்றேயறிவாரில்லையே.

## திருப்பாட்டு.

வாழ்வாவதுமாயம்மிதுமண்ணாவதுதிண்ணம்
பாழ்போவதுபிறவிக்கடல்பசிநோய்செய்தபறிதான்
றாழாதறஞ்செய்ம்மின்றடங்கண்ணான்மலரோனுங்
கீழ்மேலுறநின்றான்றிருக்கேதாரமெனீரோ.

## பதிபசுபாசவிளக்கம்.

மாயையேயுடலமாகுமாயையேகரணமாகு
மாயையேபுவனமாகுமாயையேபோகமாகு
மாயையேபொறிகளாகுமாயையேபுலன்களாகு
மாயையேயண்டபிண்டம்யாவையுமாயையாமே.

## சிவபோகசாரம்.

மின்போலத்தோன்றிவிடுமுலகவாழ்வனைத்து
மென்போலிகடிரமென்றெண்ணுவார் - தன்போத
மில்லார்சிவபோகமென்றுமருந்திடுவார்
நல்லார்திரமிதுவென்றார்.

எத்தனைதான்கற்றாலுமெத்தனைதான்கேட்டாலு
மெத்தனைசாதித்தாலுமின்புறா-சித்தமே
மெய்யாகத்தோன்றியிடுமுலகவாழ்வனைத்தும்
பொய்யாகத்தோன்றாதபோது.

இங்ஙனம் பல்வகைப்பட்டிருக்கின்றதேகாதிப் பிரபஞ்சங்களனைத்தையு மநித்தியமெனக்காண்டல், பிரத்தியட்சப் பிரமாணமாயிருக்கவவைகட்கு வாக்கியப்பிரமாணங்காட்டிக்கூறியதென்னையெனின், முன்னஞ்சமைய புராதனர்முதலியோர் பெத்தான்மாக்களைக்குறித்து வாக்கியப்பிரமாணமுங்காட்டிக் கூறியிருக்கையால், அப்பெத்தான்மாக்கட்கு மீண்டும்படும்படிக்காக வதனையேயெடுத்துக்காட்டிக்கூறியதெனவறிக. மேலுமிங்ஙனம் வருமிடந்தோறுமிதுவேகருத்தெனக்கொள்க. மேல்முத்தியென்றதற்கு நித்தியமாயுள்ள மோட்சமென்று,நித்தியத்துவ

மொட்டிப் பொருட்கூறியதென்னையெனில், தேகாதிப்பிரபஞ்சங்களையநித்தியமெனக்கண்டிருக்கின்ற பக்குவனுக்கு, மோட்சமேநித்தியமெனக் காணப்படுமாகையா லங்ஙனம் நித்தியத்துவமொட்டிப் பொருட்கூறியதெனக்கொள்க. இங்ஙனம் நித்தியமாயுள்ள மோட்சமென்றதற்குப் பிரமாணம்—

### வயிராக்கியதீபம்.

அரியபெற்றிடினும்பெற்றதின்விருப்பமறப்பெறுதனவிரும்புயிர்க
டெரியகிற்கிலமீதெனைமுனமடையாச்செல்வமாய்ச்சொலபவுத்திரமா
யுரியசிற்சுகமாயநித்தியமாயொருவீடுளதெனக்கேட்டுமற்றதனிற்
பிரியமற்றினமுமுனமுறும்பொல்லாப்பிறவியேபெறவிரும்புதலே.

### உண்மைநிலையம்.

சிறுபுலைக்கிருங்குலப்பேர்செப்பலின்மெய்ப்பேர்கொண்டிங்
கிறுமுடல்குறைபார்த்தஞ்சியெதார்த்தமாயிருத்தலாலே
பொறுமொருமெய்ப்பேர்கொண்டபேரின்பவீடுகொண்பான்
குறைவறத்தேர்ந்துஞானக்குரவர்தாளடைந்துய்வானால்.

### தேவிகாலோத்திரம்.

ஒருபொருளெக்காலத்துமுளதாகிச்சிறப்புடைத்தா
யிருவினையின்றிமேலாமின்பத்தையளிப்பதாகும்
பொருவிலாவிதன்மேலன்புபொருந்திடாதாருமுண்டே
திருவுலாவகன்றகல்விச்சிறந்தசான்றோர்கடாமே.

மேலாசையுற்றோ னென்றதற்கு மோட்சத்தினிடத்திலே யதிமோகமுற்றிருக்கின்றோனென்று மிகுதியொட்டிப் பொருட்கூறியதென்னையெனில், இருளினைத்துன்பமென்று கண்டஞ்சினோனொளியினையின்ப மென்று கண்டவ்வொளியினையே பெறமிகவுமாசைபடுமாறுபோல, தேகாதிப்பிரபஞ்சகளாகிய நெருப்பினை வெப்பமென்று கண்டவ்வெப்பத்திற்கஞ்சியபக்குவனானவன் ஞானசாகரமாகிய மோட்சத்தி

னையே தட்பமென்றுகண்டத்தட்பத்துக்குண்மூழ்க மிகவு மாசைப்படு வனுகையா லங்ஙனமிருதியொட்டிப் பொருட்கூறியதெனக்கொள்க. இங்ஙனமோட்சத்தினிடத்திலே யதிமோக முற்றிருக்கின்றேனென்ற தற்குப் பிரமாணம்—

தமிழ்வேதம்.

நாடகத்தாலுன்னடியார்போனடித்து நானடுவே
வீடகத்தேபுகுந்திடுவான்மிகப்பெரிதும்விரைகின்றே
னாடகச்சீர்மணிக்குன்றேயிடையறுவன்புனக்கென்
னூடகத்தேநின்றுருகத்தந்தருளெம்முடையானே.

கருடக்கொடியோன்காணமாட்டாக்கழற்சேவடியென்னும்
பொருளைத்தந்திங்கென்னையாண்டபொல்லாமணியேயோ
விருளைத்துரந்திட்டிங்கேவாவென்றங்கேகூவு
மருளைப்பெறுவானுசைப்பட்டேன்கண்டாயம்மானே.

பசுபதிபாசவிளக்கம்.

உலகநெருப்பைக்கடந்தொழியாஞானவுததிமடுப்பேனோ
விலகுகுடும்பத்துயர்க்கடந்திட்டெந்நாட்டுறவியாவேனோ
திலகமறையின்பொருளிதெனத்தேற்றுங்குரவன்கிடைக்குமோ
கலகவுடலப்பிணிதணந்துகடவுளையான்காண்பேனோ.

தேவாரம்.

கருத்தனைக்கழிப்பாலையுண்மேவிய
வொருத்தனையுமையாளொருபங்கனை
யருத்தியாற்சென்றுகண்டிடவேண்டுமென்
றெருத்தியாருளமூசலதாடுமே.

கர்நாமிர்தம்.

ஆகாமல்லவிந்தவைம்பொறிநாமேயல்ல
வேகமேநாமென்றுன்னுமிருடிகளிதயத்துன்னாய்ப்
பாகமாமுமைமணாளபசுபதிபிறவிவேண்டேன்
சேகறுமுத்திவேண்டேன்திருப்புலிவனத்துளானே.

மேல்முதற் குருவாலென்றதற்குச், சர்வத்திற்கு முதன்மையாயுள்ள ஞானாசாரியரைத் தேடிக்கண்டு அவரைவணங்கித்துதித்து மெய்ப்பொருள்வினாவிஞான தீட்சையைப்பெற்று அவர் அனுக்கிரகத்தினாலே யென்று, பலபிரகாரமாய்ப்பொருட் கூறியதென்னையெனின்? முத்திதனிலாசையுற்று உலகவெறுப்பும் உடல்வெறுப்பும் வந்து இருவினை யொப்புமலபரிபாகமெய்திச் சத்திநிபாதம் பதிந்திருக்கின்றபக்குவனுக் கனுக்கிரகிக்கும்பொருட்டுத் தானொன்றாய்ச் சருவலோகங்களுந்தானாய் அவைகட்கு தான்றானே தலைவனுமாய் உயிர்க்குயிராய் அகண்டாகார பரிபூரணமுமாகிய சர்வ முதன்மையுங்கொண்டிருக்கின்ற பரமசிவம் தானேஞானமேதிருமேனியாகக்கொண்டு ஆசாரியமூர்த்தமாயெழுந்தருளிவருகையால், அங்ஙனஞ் சர்வத்திற்குமுதன்மையாயுள்ள ஞானாசாரியரென்றும், அங்ஙனமாயுள்ள ஞானாசாரியர் திரிலோக்யதுர்லபமாய் அவரை நாடுகள் நகர்கள் நந்தனவனங்கள் காடுகள் மலைகள் கங்கைக்கரைகள் தனியிடஞ்சோலைதடாகங்கள் முதலிய தானங்கடோறுந் தேனிரம்பிய மலரினைத்தேடுமளியினைப்போலத் தேடிக்காண வேண்டியிருக்கையால் தேடிக்கண்டென்றும், அப் பக்குவனானவன் ஒருகாலத்தும் பெற்றறியாதவுண்மைச் செல்வத்தைப் பெறவேண்டுகையால் அவரை வணங்கித்துதித்தென்றும், அவ்வுண்மைச்செல்வமாகிய மோட்சநிலையைத்தனக்கனுக்கிரகிக்க வேண்டுமென்று இரந்து இரங்கி வினாவிநிற்கையால் மெய்ப்பொருள் வினாவியென்றும், அவர் அவனுக்கு அவ்வுண்மையுபதேசத்தையனுக்கிரகிக்கும் பொருட்டு அவனைத்துல்லியனாக்க வேண்டிப், பரிசம் பாவனை பார்வைமுதலிய ஞான தீட்சைகள்செய்து அருளுகையால் ஞான தீட்சையைப் பெற்றென்றும், அங்ஙனம் தீட்சையால் துல்லியப்பட்டவனுக்குக் காட்டுங்குறியுங் கடந்து சுருதிகளுக்குமெட்டாததாயுள்ள வுண்மை நிலையினைத்தானறிந்து கூட்டினாலன்றி, அவனையறிந்து கூட்டமாட்டானென்று திருவுளஞ்செய்து பெருங்கருணையால் அனுக்கிரகிக்கத்தொடங்குகையால் அவர் அனுக்கிரகத்தினாலே யென்றும், இங்ஙனம்பலபிரகாரமாய்ப்பொருள்கூறப்பட்டதெனவறிக.

இவைகளின் முதலிலே முத்திதனிலாசையுற்று உலகவெறுப்பும் உடல் வெறுப்பும் வந்து இருவினையொப்பு மலபரிபாகமெய்திச் சத்திநிபாதம் பதிந்திருக்கின்ற பக்குவனுக்கு, அனுக்கிரகிக்கும்பொருட்டுத் தாநென்றாய்ச்சர்வலோகங்களுந்தானாய் அவைகட்குத் தான்றானே தலைவனுமாய்ச் உயிர்க்குயிராய் அகண்டாகார பரிபூரணமுமாகிய சர்வமுதன்மையுங் கொண்டிருக்கின்ற பரமசிவம் தானேஞானமே திருமேனியாகக்கொண்டு ஆசாரியமூர்த்தமா யெழுந்தருளிவருகையால். அங்ஙனஞ் சர்வத்திற்கு முதன்மையாயுள்ள ஞானசாரியனொன்றதற்குப் பிரமாணம்—

பதிபசுபாசவிளக்கம்.

மருவியவுடல்வெறும்பும்வையகவெறுப்பும்வந்தா
லிருவினையொப்புமங்கணெய்திடுமெய்துங்காலங்
கருமலபாகமுண்டாம்பாகத்தாற்கடிதிற்சேருந்
திருவருட்சத்திபாதஞ்செறிந்திடுங்குருவுமன்றே.

சத்தியஞானபோதம்.

இருவினையொப்பாலிருண்மலபாகம்
மலபாகத்தின்மருவும்பாதம்
பாதப்பதிவாற்பயிலுங்குரவன்
குரவன்வரலுங்கொடும்பவமேழுந்
தனித்தனியோடுந்தலைகெட்டன்றே.

சிவானுபூதிவிளக்கம்.

பருவங்குறித்துப்பரமவொளிவந்திங்
குருவந்தரித்தாலொருதவங்கள்வேண்டுமோ.
செய்தற்கரியதவஞ்செய்தற்பின்னல்லவோ
வெய்தற்கரியபிரானெம்போலவந்ததுவே.

## தணிகையாற்றுப்படை.

கட்காண்குருமுதற்கடவுளாகி
யுயிரோயவத்தையுணர்த்துந்தன்மை
யருளினியல்பேயாங்கதன்பயனே
பெரும்பெயர்த்திறனேபெற்றவர்முறையென்

றனைவகையேழுமரிறபத்தெரிப்பத்
தாழாதுகேட்டுவீழாதுசிந்தித்
தங்கைககொண்டவமிழ்தெனத்தெளிந்து
பொங்குபேரின்பம்புணராதுபுணரும்.

## தேவாரம்.

ஒன்றாயுலகனைத்துமானார்தாமேயூழிதோறூழியுயர்ந்தார்தாமே
நின்றாகியெங்குநிமிர்ந்தார்தாமேநீர்வளிதியாகாசமானார்தாமே
கொன்றாடுங்கூற்றையுதைத்தார்தாமேகோலப்பழனையுடையார்தாமே
சென்றாடுதீர்த்தங்களானார்தாமேதிருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே

ஓசையொலியெலாமானாய்நீயேயுலகுக்கொருவனாய்நின்றாய்நீயே
வாசமலலொலாமானாய்நீயேமலையான்மருகனாய்நின்றாய்நீயே
பேசப்பெரிதுமினியாய்நீயேபிரானாயடியென்மேல்வைத்தாய்நீயே
தேசவிளக்கெலாமானாய்நீயேதிருவையாறகலாதசெம்பொற்சோதீ.

## பெரியபுராணம்.

ஆயினும்பெரியாரவரென்பது
மேயவிவ்வியல்பேயன்றிவிண்முதற்
பாயபூதங்கள்பல்லுயிரண்டங்க
ளேயுமியாவுமிவர்வடிவென்பதாம்.

### ஆனந்தருத்திரேசர்பதிற்றுப்பத்தந்தாதி.

கடலாய்விரிந்தான்மழையானான்கதிர்த்தமணிக்குன்றுகளானா
னிடனாரடவிமுழுதானானெல்லாமானான்காஞ்சிநகர்
மடலார்சோலையானந்தருத்திரேசம்வதிவள்ளல்
படமாவளியேனுளம்புகுந்துபயின்றானீங்காப்பரிசினனே.

### சிற்றம்பலநாடிநிகழ்காலத்திரங்கல்.

என்றுமருவுருவாயெங்குநிறைந்தவர்தா
மின்றெமக்குத்தேசிகராயெய்ந்ததிசயமே.

போக்குவரவற்றிருக்கும்பூரணர்தாமண்மிசையி
லாக்கையுடன்வந்ததறவுமதிசயமே.

எங்குநிறைந்தவர்தாமேகவுருவாகிச்
செங்கமலத்தாள்வழங்கச்சேர்ந்ததிசயமே.

### திருமந்திரம்.

தானேதிசையொடுதேவருமாய்நிற்குந்
தானேயுடலுயிர்தத்துவமாய்நிற்குந்
தானேகடன்மலையாதியுமாய்நிற்குந்
தானேயுலகிற்றலைவனுமாமே.

குருவேசிவமெனக்கூறினனந்தி
குருவேசிவமென்பதுகுறித்தோரார்
குருவேசிவனுமாய்கோனுமாய்நிற்குங்
குருவேயுரையுணர்வற்றதோர்கோவே.

### துகளறுபோதம்.

அன்றுமுதலாகவேயாருயிர்கட்காருயிராய்
நின்றுவருந்தம்பிரானீங்காம - லென்றுங்
கருவாம்பிறப்பைக்கழற்றினரோதாமே
குருவாயருளாமற்கூறு.

## சிவப்பிரகாசம்.

நாடியசத்திநிபாதநாலுபாதநண்ணும்வகையெண்ணரியஞானபாதங், கூடுமவர்தமக்குணர்வாய்நின்றஞானக்கூத்தனொருமூர்த்திகொடுறுகிமோக, நீடியகேவலசகலநிகழாவாறுநிறுத்திமலமறுக்குமிதுநிலையார்சுத்தங், கேடில்புகழ்தருஞ்சரியைகிரியாயோகக்கேண்மையரோவிவையுணர்த்தக்கிளக்குறாலே.

## சிற்றம்பலநாடிதாலாட்டு.

கண்ணொருமூன்றுங்கனற்கரமுமைம்முகமு
மண்ணவர்க்குக்காணாவகையொளித்துவந்தானே.
எங்கெங்குந்தானாகியென்போலுருக்கொண்டு
மங்கும்பிறவிதனைமாற்றவந்தவள்ளலோ.

## நிகழ்காலத்திரங்கல்.

தேனடருமானந்தச்செங்கமலத்தாளருள
மானிடர்போல்மண்மிசையில்வந்ததிசயமே.

## சிவஞானப்பிரகாசவெண்பா.

குருவேதிருமாலாங்கோகனத்தானுங்
குருவேயுமையிறந்தகோவாங் - குருவேயிங்
கெல்லாமாயல்லவுமாயெங்குநிறைவானும்
வல்லாளன்றானுமதி.

## அஞ்ஞைவதைப்பரணி.

ஞானமேதிருவாபரணங்களு
ஞானமேதிருமாலையுஞ்சாந்தமு
ஞானமேதிருவானவக்கோலமு
ஞானமேயருண்மேனியுஞானமே.

### நிகழ்காலத்திரங்கல்.

உன்னரியஞானமுருவாகவந்தருள
வென்னதவஞ்செய்தோமுன்யாமென்றறிந்திலமே.

### திருவுந்தியார்.

அகளமாயாருமறிவரிதப்பொருள்
சகளமாய்வந்ததென்றுந்தீபற
தானாகத்தந்ததென்றுந்தீபற.

### அவிரோதவுந்தியார்

எல்லாமுடையான்குருவாகியிங்கெம
தல்லலறுத்தானென்றுந்தீபற
வவன்றொடொழுவாமென்றுந்தீபற.

### திருவாசகம்.

புவனியிற்சேவடிதீண்டினன்காண்க
சிவனெனயானுந்தேறினன்காண்க
வவனெனையாட்கொண்டருளினன்காண்க.

அருபரத்தொருவனவனியில்வந்து
குருபரனாகியருளியபெருமையைச்
சிறுமையென்றிகழாதே.

### திருவருட்பயன்.

ஆரறிவாரெல்லாமகன்றநெறியருளும்
பேரறிவான்வாராதபின்.

### பதிபசுபாசவிளக்கம்.

மன்னர்முன்காலன்முன்னுமகிழ்ச்சியைப்பிரிக்கவந்த
தன்னிகர்நோயின்முன்னுந்தானடங்கிடுவார்போல
மின்னமர்கயிலைநீத்துமெய்யுடையார்போல்வந்த
கொன்னமர்குரவன்முன்னரடங்குவான்குலமாணாக்கன்.

## சிந்தனைவெண்பா.

ஐயந்திரிவகற்றியான்மாவைக்காட்டியதற்
கையனருளையறிவித்து - மெய்யன்
திருவடியைக்காட்டிச்சிவோகம்பாவிக்க
வருள்செய்வோன்ஞானகுருவாம்.

அங்ஙனமாயுள்ள ஞானாசாரியர் திரிலோகதுல்லபமாய் அவரை நாடுகள் நகரங்கள் நந்தனவனங்கள் காடுகள் மலைகள் கங்கைக்கரைகள் தனியிடஞ் சோலை தடாகதீரங்கள் முதலியதானங்கடோறுந் தேனிரம்பிய மலரினைத் தேடுமளியினைப்போலுந் தேடிக்காணவேண்டுமென்பதற்குப் பிரமாணம்—

## ஞானவிளக்கம்.

நெருப்புவழிநடப்பினீர்தேடுவார்போற்
கருப்பிலனந்தேடுங்கதைபோல் - விருப்புற்றுப்
பக்குவத்திஞயகனைத்தேடுகின்றபைந்தொடிபோற்
சற்குருவைத்தேடுந்தரம்.

## பதிபசுபாசவிளக்கம்.

உலகமுமாழையுமொண்கண்மாதரு
நிலையலவென்றுணர்நெடியமாணவன்
கலையெலாந்தெரிந்தவன்கதிவிருப்பின
னலமலிகுரவனைநாடித்தேடுவான்.

## அதிரகசியம்

மண்ணுக்கிரையாமிவ்வுடம்பைமாற்றவேண்டிவனமலைகள்
மொண்ணைப்பொதும்பர்நந்தவனமூதூர்த்தனித்தவிடந்தோறு
முண்ணெக்குருகித்தேசிகனைத்தேடிவாடியுயிர்ப்பெறிந்து
கண்ணிலருவியொழியாஞய்க்கலங்கிமலங்கிக்கதறினனே.

சித்திரபானுவாலுஞ்சிதைவிலாவிருளைவீட்டி
யுத்தமமுத்திஞானமுதவுவானுளனேவென்றிங்
கத்திசூழ்ஞாலமெல்லாமளிமதுக்கலையுமாபோல்
பொத்தகப்பொருளைக்காட்டும்போதகாசானைதேர்வான்.

## பதிபசுபாசவிளக்கம்.

இனையவண்ணநினைந்திரங்குமெழில்மாணுக்கன்றனைப்புரப்ப
நினையுநினைவிலொளித்திருந்தநிமலனீங்காக்கருணையினான்
மனிதன்போன்றேயுண்டுடுத்தன்மருவிக்குருவாய்வரச்சீடன்
கனியுஞானக்கண்ணாரக்கண்டான்பவநோய்விண்டானே.

## கைவல்லியநவநீதம்.

ஆனவிம்மனைவிமக்களத்தவேடனைமூன்றாருங்
கானவர்வலையுட்பட்டுக்கைதப்பியோடுமான்போற்
போனவன்வெறுங்கையோடேபோகாதவண்ணஞ்சென்று
ஞானசற்குருவைக்கண்டுநன்றாகவணங்கினானே.

## உபதேசமாலை.

நாடுநகராலயங்களுகமுழையெங்கெங்குந்
தேடியுளைந்துதிகைத்தலறி - மாடிலர்கள்
வைத்துப்புதைத்திருந்தமாநிதியைக்கண்டாற்போ
லுத்தமனேகண்டேனுனை.

## சிவஞானப்பிரகாசவெண்பா.

ஆசானைக்காண்டோறுமன்புருகுங்கைகுவியு
மாசாருடம்புமயிர்க்குச்செறியும் - பேசாத
வானந்தமுள்ளூறுமக்கணமேபாசங்க
டாநந்துமுத்திதரும்.

## அதிரகசியம்.

கண்டான்குருவைக்கண்ணாரக்கதறிவீழ்ந்தான்கமலமிசை
யண்டர்வரனேநெடுமாலேயயனேயென்றானகமகிழ்ந்தான்
றொண்டாலியலும்பணிசெய்யத்துணிந்தான்பணிந்தான்மும்முறையே
பண்டானிறைந்தபாவாலுங்காவாயென்னப்பாடினான்.

அவரை வணங்கித் துதிக்கவேண்டு மென்றதற்குப்பிரமாணம்—

## சிவஞானதீபம்.

திருமறைமாமுனிவருக்கன்றாலநீழற்றிருந்தவறமுரைத்தபெருந்தகைதானிந்த, விருநிலமேலருளுருவாய்வந்துதோன்றியிசைந்திடுநெற்றவிடுமுளையுமிபோலேய்ந்த, திரிமலவேரினைநினைவாலுரையாலஞானச்செய்கையினாலறுத்திருதாட்சென்னிசூட்டுங், குருபரனைமருளுலகவாதைநீக்குங்குணக்கடலைமனத்திலுறவணக்கஞ்செய்வாம்.

## மகாவாக்கியதசகாரியம்.

'இருவிழிகளுலகறிந்துந்தனையறியாததுபோலியானறியும்பொருளாலதிங்கெனையறியாமையினாற், கருவிடைபுக்கின்பதுன்பக்கடலிடையேசுழன்றுகணக்கலக்கப்படுவேனைகருணைவிழியதனா, லருவினைகளறநோக்கியாணவமேபோக்கியகமகமென்றிருந்ததெலாமறிவுகொண்டே நீக்கிப், பருவமதிற்பதந்தாக்கிக்கற்பனைகள்யாவும்பாழாக்கித்தானாக்கும்பரகுருவைப்பணிவாம்.

## பதிபசுபாசவிளக்கம்.

தேனுண்டளிகள்பண்பாடுஞ்செறிகற்பகநேர்குருந்தடிக்கீழ்
மானுமழுவுஞ்சதுர்ப்புயமுமணிக்கந்தரமுமறைத்தருளி
யீனமகன்றதிருவாதவூரர்க்காகவெழுந்தருளு
ஞானமுனியேயிவனென்றுதெளிந்துநாவாற்பழிச்சினனே.

அற்புதவமலவேகவசிந்திதவகண்டாகார
நற்சிதமபரவேகாந்தஞானநாதாந்தவின்ப
சொற்பிரகாசசுத்தசூனியதுரியாதித
தற்பரவனந்தானந்தசற்குருநாதபோற்றி.

கண்ணிலாகநழுவிவெய்யகாரிருட்டறைப்பட்டாங்குத்
திண்ணியமலவறைக்குட்சிக்கியசிறியேன்றன்னை
நண்ணருஞானகையாலுன்முகன்முதலோங்கத்
தண்ணளியாலெடுத்தசற்குருநாதாபோற்றி.

வடக்குளேதெற்குந்தெற்கில்வடக்கையுங்காட்டுவார்போ
லுடற்குளேயுயிருமந்தவுயிர்க்குளேயுணர்வுங்காட்டி
நொடிக்குமோமலமகற்றிநுண்ணுணர்வாகவிட்டும்
* விடக்குளேபிறவாவண்ணங்காத்தருள்விகிர்தபோற்றி.

## திருப்பல்லாண்டு.

மன்றுகதில்லைவளர்கநம்பத்தர்கள்வஞ்சகர்போயகலப்
பொன்னின்செய்மண்டபத்துள்ளேபுகுந்துபுவனியெல்லாம்விளங்க
வன்னநடைமடவாளுமைகோனடியோமுமக்கருள்புரிந்து
பின்னைப்பிறவியறுக்கநெறிதந்தபித்தர்க்குப்பல்லாண்டுகூறுதுமே.

## அதிரகசியம்.

அருவமாய்நின்றாய்போற்றியடியனேன்பொருட்டாயிங்கு
னுருவமாய்வந்தாய்போற்றியுயிர்பொருளுடலுங்கொண்டு
பருவமில்பாவியேனைப்பரிந்தருள்செய்வாய்போற்றி
குருபராபோற்றியுன்றன்கோகனகத்தாள்போற்றி.

## கைவல்லியநவநீதம்

ஐடனேயெனதுள்ளேநின்றனந்தசென்மங்களாண்ட
மெய்யனேயுபதேசிக்கவெளிவந்தகுருவேபோற்றி
யுய்யவேமுத்திநல்குமுதவிக்கோருதவிநாயேன்
செய்யவேயொன்றுங்காணேன்றிருவடிபோற்றிபோற்றி.

---

* விடக்கு - ஊன்.

## வயிராக்கியசதகம.

கண்டேன்களிகூர்ந்துசிவப்பிரகாசநாமங்
கொண்டோங்குருவோடிவணாற்றெனையாண்டகோவே
பண்டேயொருநீவகுத்திட்டபடிக்கியானுன்
றொண்டாகிவந்தின்றுனைப்பாடத்தொடங்கினனே.

அறியாமையிற்கீழவர்பல்பிழையாற்றினாலுங்
குறியாதருள்செய்வதுமேலவர்கொள்கையன்றோ
மறியார்கரத்தோய்சிறியேன்வினைமாற்றியாளப
பொறியேனுனக்கென்முகமன்சொலப்பொய்யனேனே

பொய்யற்றவர்வந்தடையும்பரிபூரணாவிம்
மெய்யற்றவெற்குநின்னலானிலைவேறுமுண்டோ
தையற்கிடமேயிடமாயருடாணுவேயென்
மையற்றவிர்ப்பானுன்கடாட்சம்வழங்கிடாயே.

உன்னுமுணர்வுக்குணர்வாயெனக்குண்மைதந்தாய்
மன்னுஞ்சுருதிப்பொருளாய்வழிகாட்டிநின்றாய்
பின்னுங்குருவாயடைந்துன்னருள்பேணவைத்தாய்
யென்னென்றுரைக்கேனின்கருணையிருந்தவாறே.

## ஞானவிளக்கம்.

அன்னைவயிற்றிலமுக்கிச்சிலகாலம்
பின்னையுலகிற்பிறப்பித்து-மன்னுகலை
யெல்லாமறியவெனக்கென்போலவந்தாண்ட
கல்லாலாமுற்றுமெனைக்கா.

மெய்ப்பொருள் வினவவேண்டுமென்றதற்குப் பிரமாணம்—
தேவாரம்.

தெருளுமாதெருளமாட்டேன்றீவினைச்சுற்றமென்னும்
பொருளுளேயழுந்தினாளும்போவதோர்நெறியுங்காணே
னிருளுமாமணிகண்டாநின்னிணையடியிரண்டுங்காண்பா
னருளுமாறருளவேண்டுமதிகைவீரட்டனீரே.

மோத்தையைக்கண்டகாக்கைபோலவல்வினைகண்மொய்த்துன்
வார்த்தையைப்பேசலொட்டாமயக்கநான்மயங்குகின்றேன்
*சீத்தையைச்சிதம்புதன்னைச்செடிகளேயவடிவொன்றில்லா
வூத்தையைக்கழிக்கும்வண்ணமுணர்வுதாவுலகமூர்த்தி.

வயிராக்கியசதகம்.

என்னையகனேயிமையோர்தொழுமீசனேசெம்
பொன்னார்திருவம்பலத்தாடியபூதநாதா
வுன்னாருளாலினிவீட்டிடையுய்த்தியின்றேற்
பின்னாருயக்கொள்ளவலாரொன்பிழைகடீர்த்தே.

வழங்கெற்கிவணேதுசெய்தாலெதுவாகுமென்றென்
றெழுங்கற்பனையாவுமிறந்துணர்வேகமேயா
யொழுங்கிற்புலனுதியுபாதியொழித்தோருன்னைச்
செழுங்கைக்கனியொத்துணரும்படித்தில்லையானே.

தோன்றாத்துணையேபுணையேபவத்தொல்கடற்கென்
போன்றார்க்கிரங்குமருட்பெரும்போதமேயிங்
கீன்றார்மனையாதியமோகமெலாம்விடுத்தாட்
சான்றாமுனையேவினையேனினிச்சாரவெண்ணே.

செய்விப்பன்வினைத்தொகைவெம்பவஞ்சேர்ப்பனுன்னை
யுய்விப்பனேலச்சிவனுண்மையுமோர்வனென்றே
ளைவர்க்கெதிரோயெனைநோக்கியறைந்ததையா
மைவெற்பெனவாணவநீயதைமாற்றிடாயே.

---

* சீத்தை-பீழை, சிதம்பு-குணமின்மை, செடி-பாவம்..

## ஞானவிளக்கம்.

வானவர்க்காயன்றுதிருவாய்மலர்ந்தமெய்ஞ்ஞான
மேனையடியோங்களுக்குமெட்டாதோ—ஞான
குருநாதனுடன்றுகுமரருக்குச்சொன்ன
பெருஞானமெங்களுக்குப்பேசு.

ஞானதீட்சையைப பெற்றென்றதற்கு அவனைத் துல்லிடனாக வேணடிப் பரிசபாவனை பார்வைமுதலிய ஞானதீட்சைகளைச் செய்க ருளுவ னென்றதற்குப பிரமாணம்—

## சிவஞானசித்தியார்.

பரம்பிரமமிவனென்றும்பரசிவனென்றுமபரஞானமிவனென்றும்பராபரனென்றென்று, மரந்தருஞ்சீர்நிலையெலாமிவனேயென்றுமருட்குருவைவழிபடவேயவனிவன்றானே, யிரங்கியவாரணம்யாமைமீனண்டஞ்சினையையிபலபிறெழும்பரிசித்தநினைந்தும் பார்த்தும், பரிந்திவைதாமாக்குமாபோற்சிவமேயாக்கும்பரிசித்துஞ்சிந்தித்தும் பார்த்துந்தானே.

## சிவப்பிரகாசம்.

மூவகையாருயிர்வர்க்கமலத்தார்கன்மமூலமலத்தார்மூன்றுமுடையாரன்றே, திவகமாமெனவுருவாய்வந்துநாதன்றிருநோக்காற்பரிசத்தாற்றிகழும்வாக்காற், பாவனையான்மிகுநூலாலியோகபபண்பாற்பரவிவருமவுத்திரியாற்பாசநாச,மேவவருளுதவுமவுத்திரியிரண்டுதிறனும்வியன்கிரியைஞானமெனவிளம்புமாறே.

## உபதேசமாலை.

பார்த்தான்பரிசித்தான்பாவியேன்சென்னிமிசைச்
சேர்த்தான்றிருவடியைச்சிந்தித்தா - னேத்துரைத்தா
னஞ்சுகலையுமடைவினறுத்தொழித்தா
னென்செய்கேனென்னுரைக்கேனியான்.

## சத்தியஞானபோதம்.

கட்கிமையொத்துக்காற்றணைவருடும்
பக்குவர்க்கிரங்கிப்பரசிவனுருவத்
திருவடியானுந்திருநோக்கானு
மைபலகன்றமறைநூலானும்
பாவனையானும்பரிசத்தானும்
யோகத்தானுமுணர்வாக்கும்மே.

ஐயெரிநாப்பணைந்தவித்திருப்பினு
மிருகாலடக்கியொருகானிற்பினுஞ்
சேயிழைமாதரைத்தீரத்தணப்பினு
முடையைத்துறக்கினுமுணவைமறப்பினு
மமர்செய்மாயைமழுங்காதம்ம
குருபாரேக்கிற்குழையுமன்றே.

விந்துமோகினிமானெனவிரிந்த
தத்துவக்காட்டிற்றனித்திடுமுயிரை
யாணவவேங்கையொருபாலடர்ப்ப
மாயைக்குடாவடியொருபான்மயக்கக்
காமியக்கடமாவொருபாற்கறுவ
விருவினைமலைப்பாம்பொருபாலிழுக்க
வாசையாமண்ணையொருபாலறையக்
குலமெனுஞுமலியொருசார்குரைப்பக்
கல்விக்கானியாளொருசார்கவரச்
சமையச்சூறையொருசார்தாக்க
வவாவெனும்படுதீயறிவைக்கொளுவ

*மாயாவாதவனசரர்வெருட்ட
பின்னணமாவியிடருறுங்காலை
யுயிரிடையொளிபுக்கிருந்தவொருவரத்
தாயினுஞ்சாலத்தயாநிதியிரங்கிக்
கட்கடைவாளாற்காடறமாற்றலு
முட்கினயாவுமுயிர்பிழைத்தன்றே.

சிவானுபூதிவிளக்கம்.

கர் ைகநகர்மெய்கண்டான்காற்கமலஞ்சென்னியின்மேற்
றங்கவிருணீங்கியருடாளுந்தபோதனரே.

சித்தாந்ததெரிசனம.

மீன்போற்றிருநோக்கால்விமலனுருவாக்குந்
தான்போக்கிநின்றதரம்.

ஆமைபோற்சிந்தித்தருளுருவமாக்குமாற்
காமாதிநீத்தவரைக்காண்.

கோழிபோற்றீண்டியுயிர்க்குற்றமறுத்தாளு
மாழிவிடமுண்டவரன்.

திருநோக்கான்மூலமலந்தீயும்பரிசத்தா
லிருண்மாயைக்கூட்டமிரியும்.

திருமொழியாற்கன்மமலஞ்சிந்துந்தியானத்தாற்
பெருமாயைபோயொழியும்பின்.

---

* மாயாவாதமென்பது இக்காலத்தில் வேதாந்தமென வழங்குகிறது' இம்மதத்தவர் தாம் ஸ்மார்த்தரெனப்படுவர், இவர் பூர்வத்தில் உத்தம சைவமரபில் வந்த மெய்ம்முனிவர்களால் சாபமேற்றவர். பஸ்மருத்ராக்ஷம் பூண்டும் சிவபெருமானிடத்திற் பத்திபூண்டொழுகாது, சிவநிந்தையே பெரும்புண்ணியமென்றொழுகுபவர். விவரணம் சூதசங்கிதையிலுண்டு; ஆண்டைக்காண்க.

சிவநூலாற்பொன்றுந்திரோதையப்பால்ஆவி
சிவதீக்கையாலாஞ்சிவம்.

காட்டுங் குறியுங்கடந்து சுருதிகளுக்கு மெட்டாததாயுள்ள உண்மைநிலையினைத் தானறிந்து கூட்டிடுலன்றி,அவனையறிந்து கூடமாட்டானென்று திருவுளஞ்செய் தனுக்கிரகிக்கத் துடங்குகையால், அவரனுக்கிரகத்தினு லென்றதற்குப் பிரமாணம்—

திருமந்திரம்.

காட்டுங்குறியுங்கடந்தவர்காரண
மேட்டின்புறத்திலெழுதிவைச்தென்பயன்
கூட்டுங்குருநந்திகூட்டிவிடாவிடி
லாட்டின்கழுத்திலதர்கிடந்தற்றே.

பதிபசுபாசவிளக்கம்.

குருவிலான்பெற்றஞானங்குமரியைக்குமரிகூடி
மருவியவின்பமொக்குமண்ணிடைநம்போல்வந்த
குருவினற்பெற்றஞானங்குமரியைக்குமரன்கூடி
மருவியவின்பமொக்குமென்பர்நன்மதியுளாரே.

மேலிங்ஙனமாயுள்ள, முதற்குருவான் முதலிலே சமய நடையை விடுவன், அதையெங்ஙனங்கண்டு விடுவனென்னில், ஆசாரியனைத் தேடிக்கண்டு வணங்கித்துதித்து மெய்ப்பொருள்வினவி ஞானதீட்சையைப்பெற்று நின்ற சீடனுக்குப் பஞ்சபாசங்களையும் போக்கி யுண்மைநிலையை யனுக்கிரகிக்கவேண்டி முதலிலே யவனைநோக்கி யுன்சமையமியாது? அதன் கோட்பாடியாதென்று வினவச் சுவாமீ! யென்சமைய மிச்சமையமென்றும், இதன்கோட்பாடு வெவ்வேறு சமையத்தாராயுள்ளார் அவைகளை விட்டிச்சமையத்தை வந்தடைவராயின் முத்தராய்த் தத்தம் பிறப்புகணீங்கி யிச்சமையத்திற்கூறிய மோட்சானந்தத்தை யடைவரென்றும், இச்சமையத்திலுள்ளா ரிதனைவிட்டுப் பிறிதோர்

சமையங்களைச் சார்வராயிற் பதிதராயெக்காலத்தும் பிறப்புநீங்காம னிளைய துன்புறுவரென்றுஞ், சுருதிகள் புராணங்கள் புராதனர்வாக்கியங்களெல்லாங் கூறியிருக்கையால், இதுவே யென்சமையத்திற்குள்ள கோட்பாடென்று விளம்பஞ்செய்ய, இந்தப்பிரகாரமா யெங்கெங்குஞ் சமையங்கட்குங் கோட்பாடுகள் கூறியிருக்குமேயென்ன, இங்ஙனமெல்லாச் சமையங்களு மெச்சமையத்தைவிட்டுப் பிறிதோர்சமையங்களைச் சார்ந்தவர் பதிதரென்றும், பிறிது சமையங்களைவிட்டு என் சமையத்தைச் சார்ந்தவர் முத்தரென்றுங் கூறுமேயாகில், இவையனைத்திற்குங் கூறிய பதிதத்தன்மையு முத்தித்தன்மையுஞ் சத்தியமாய் முடியுமோவென்னின் முடியாவாம், அன்றி அந்தச் சமையங்களினுள்ளாருந் தந்தம சமையங்களைவிட்டுப் பிறிதொன்றினைச் சாருமிடத்துத் தங்கள் சமையத்தை யிகழ்ந்திடவும், பின்னைத் தாமடையப்போகின்ற சமையமுயர்ச்சியாயு மிருக்கின்றதென்றறி யடைவராகி லடைந்தசமையத்திற் கூறிய முத்தியையடைவர். அன்றன்றித் தாந்தாமடைந்திருக்கின்ற சமையமே யுயர்ச்சியென்றும், மற்றைய சமையங்களெல்லாந் தாழ்ச்சியென்றும், மனதிற்றோன்றக் கண்டிருந்துங் கிஞ்சித்து மஞ்சுதலின்றிய பொன் பூமி பெண் போகமுதலிய பிரயோசனங்களைக்குறித்து அதற்காகப் பிறிதொரு சமையத்தையடைவராகிற் றங்கள் சமையத்திற்கூறிய பதிதத்தன்மையே யடைவாராகையால், சர்வசமையங்களினுங் கூறிய முத்தித்தன்மையும் பதிதத்தன்மையு மனதின் கோட்பாட்டின்படியே யிங்ஙனஞ் சத்தியமாய் முடியுமென்றுகூறிப், பின்னருமனதிலே மெய்மையாய் நினைந்து சென்றவர்கட்கு மெய்மையாயும், பொய்மையாய் நினைந்து சென்றவர்கட்குப் பொய்மையாயும், முடிகையால்மனோலயத்தி லுண்டாயிருக்கு மோட்சத்தை விரும்பிய மோட்சகாமியானவனிங்ஙன மனோவிகற்பமாய் முடிகின்ற சமையங்களியாவு மனதின் சிலுகேயன்றி வேறில்லையென்று கண்டுவிட்டு விடுவனுகி லவனுக்கோர் குற்றமின்றேயென்றுகூறி யச்சமையநடையை விடுவிக்கையாலங்ஙனமேகண்டு அச்சமையநடையை விடுவனெனவறிக. இதற்குப் பிரமாணம்—

## தேவாரம்.

கோலும்புல்லுமொருகையிற் * கூர்ச்சமுந்
தோலும்பூண்டுதுயரமுற்றென்பய
னீலமாமயிலாடுதுறையனே
நூலும்வேண்டுமோநுண்ணுணர்ந்தோர்கட்கே.

## திராவிடவேதம்.

உவலைச்சமையங்களொவ்வாதசாத்திரமாஞ்
சவலைக்கடலுளனாய்க்கிடந்துதடுமாறுங்
கவலைகெடுத்துக்கழலிணைகடந்தருளுஞ்
செயலைப்பரவிநாந்தெள்ளேணங்கொட்டாமோ.

## பதிபசுபாசவிளக்கம்

தாரணியவர்களுநாலாஞ்சத்திநிபாதமெய்த
ஆருணிபோலத்தோன்றியொருமொழியாலெனக்குக்
கோரணிகாட்டுமாறுசமையத்தின்கோளரிக்கிய
பூரணச்சொரூபங்காட்டும்புண்ணியன்பொலந்தாள்போற்றி.

## ஒழிவிலொடுக்கம்.

காமாதிவிட்டுக்கரமேகலமாகிய
பூமிதேகைகாலைப்போர்த்துறங்கி - நாமதுணைஞ்
சாதிகருமமெனும்வாதனையிற்றுக்கற்றார்க்
கேதுசமையமெனலாம்.

## சிற்றம்பலநாடியார்தாலாட்டு.

சாதிமதத்தாலுஞ்சமையமதத்தாலுங்
கோதிலாஞானத்தைக்கூடவரிதென்றுரோ.

---

* கூர்ச்சம் - தருப்பை.

கருவைப்பதிற்றுப்பத்தந்தாதி

உய்யவோருறுதிநாடாதுலகினிற்சமயமென்னும்
வெய்யவாரிதியில்வீழ்ந்துவெந்துயருழக்கின்றேனைத்
தையலோர்பாகம்வைத்ததண்டமிழ்க்கருவைவாழு
மையன்வந்தாண்டுகொண்டதிசயம்விளைக்குமன்றே.

ஈங்காசாரியர் சமையநடை விடுவித்தலை யெழுவாயாக வைத்துக் கொண்டு முதலிலே சீடனைநோக்கிச் சமையநடையை வினவி விடுத்த தென்னையெனில், உலகமாதாவாகிய வுமையவளுக்கு ஞானசாரங்கூறத் துடங்கி முதலிலே சமையாசாரத்தை விடுவித்த பரமசிவந்தானே யாசாரியமூர்த்தமா யெழுந்தளியிருக்கையால், இங்குமப்படியே முதலிலே சமையநடையை வினவி விடுத்ததெனவறிக. இதற்குப்பிரமாணம்-

தேவிகாலோத்திரம்.

சமையாசாரமுஞ்சங்கற்பவிகற்பமு
மமையாதாங்குலவாசாரமானது
மிமையாதாரும்விடாதவில்வாழ்க்கையு
மமையார்தோளாய்விடுதலாசாரமே.

வீராகமம்.

சமையவாதங்கணீக்கித்தத்துவமித்தையாக்கி
நமையுருவிருளையோட்டிநானெனும்மையணீக்கித்
தமர்தாயென்னுண்மன்னுந்தன்னருட்சோதிகாட்டி
யமைவிலாவின்பவெள்ளத்தழுத்தினனென்னையாசான்.

மேல் இரண்டாவது, முதற்குருவாற் றருக்கம் விட்டென்றதே, யஃதெங்ஙனம் விடுவனென்னில், ஆசாரியரானவர் தானச்சமையநடையைவிடுவிக்க விட்டுநின்றசீடன், அச்சமையவாசனையா னவின்று வாதிக்கின்றதருக்கங்களையும் விட்டாலன்றிப் பஞ்சபாசங்களையும் நீங்கி யுண்மைநிலையைக் கூடமாட்டானென்று கண்டு, அவனுக்கு அத்தருக்கங்களை

விடுவித்தற்கு ஆரம்பித்து நின்று அவனைநோக்கிச் செனன மரணதுக் கங்களுக்கு அஞ்சிஞானசாரியரைத்தேடி யடைந்து அவருடைய திரு வடிகளைச் சிரசிலே சூடிக்கொண்டு ஞானவுபதேசங்களைப் பெற்று உண்மைநிலையைக் கூடாதவர்களே சமையவாசனையா லுறுகின்ற தரு க்கவாதங்களைப் பிரதானமாகக்கொண்டு தருக்கியாநிற்பர். அத்தருக்கங் களோ வசனத்தையன்றி வேறில்லை, அவ்வசனமோ மனத்தையன்றி வேறில்லை, அம்மனதோ கனவுபோன்று பொய்யாயிருக்கின்ற வஞ்ஞான தின் காரியமேயன்றி வேறில்லை, ஆகையாற் பேரந்தகாரமாயுள்ளவஞ் ஞானத்திலுண்டாகிய மனவாசகங்களைக்கொண்டு அம்மனவாசகங்க ளைக கடந்திருக்கின்ற வுண்மைநிலையை யறியக்கூடாது. அஃதன்றியுந் தருககங்களாவது அனேகபேதங்களாய் விரிந்துநிற்கும்,அங்ஙனம் விரிந் துநிற்குமேயாயினு மவையனைத்தும் நாலுபிரகாரத்து ளடங்கிநிற்கும் அவை யெங்ஙனேயென்னில்,திரிபதார்த்தங்களாயுள்ள பதி பசு பாசங் களுள் பசுபாசங்களை யில்லையென்றும், அவைகளை யுண்டென்றும், பதி யைத்தவிர பசுபாசங்கள் வேறன்று அபபதியாயே யொன்றாயிருக்கு மென்றும், அவைமூன்றும் வெவ்வேறாய்ப பலவாயிருக்குமென்றும், இங்ஙனந் தந்தம் முத்தியைச் சாதிக்கையே கோரிகைகயாய் கூறிக் கொண்டுநிற்கும். இதில் முதலிற்கூறியபடி பசுபாசங்களை யில்லையென் னின், முத்தியடைவானு மின்றாய் முத்தியுமின்றாய் முடியும். ஆகை யால் அவைகளை யில்லையென்பது கூடாது. இரண்டாவது கூறியபடி பசுபாசங்களை யுண்டென்னில்,அநாதியாயுள்ளதோ?ஆதியாயுள்ளதோ? அநாதியாயுள்ளதாயின் அநாதியாயுள்ளதற்கு ஆதியாயுடைய முத்தி யென்பதொன்றை அடையவேண்டுவதில்லை. அங்ஙனமன்று பாசமா னது பசுவைப் பந்தித்துக்கொண்டிருக்கும், அப்பந்தம் நீங்குவதே முத்தியென்னில் அப்பந்தம் அநாதியாயுள்ளதோ? இடையி லெய்தி யதோ? அதுவும் அநாதியேயாகில்,ஒருகாலத்தும் நீங்காது இடையிலே வந்து கூடிற்சுத்தனை யுறைகின்ற முத்தியிலும் வந்துகூடி யம்முத்தி யும் பொய்யாய்முடியும். ஆகையால் அவைகளை யுண்டென்பதூங்

கூடாது. மூன்றாவது கூறியபடி பதியைத்தவிரப் பசுபாசங்கள் வேறன்று அப்பதியாயே ஒன்றாயிருக்குமென்னில், தானொருவனேயாய்,இரண்டாம் வத்துவில்லாதபடியால், இதனை யிதனாவிழந்தோமென்னுஞ் சேதமுமிதனை யிதனாற் பெற்றோமென்னு மிலாபமுமாயுள்ள முத்தியின்றாய் முடியும் ஆகையால் பதியைத்தவிரப் பசுபாசங்கள் வேறன்றபபதியாயே யொன்றாயிருக்குமென்பதுங் கூடாது. நாலாவது கூறியபடி அவைமூன்றும் வெவ்வேறாய்ப் பலவாயிருக்குமென்னில் வெவ்வேறாய்ப் பலவாயிருககின் முத்தியிலொன்று படுமாறின்றி யம்முத்தியும் பொய்யாய் முடியும், ஆகையால் நாலுபிரகாரத்துளடங்கிய தருக்கங்களும் அவைகள் கோரித்துநின்ற முத்தியு மிங்ஙனம் பொய்யாய் முடியுமாகையா லெங்ஙனந் தருக்கிப்பாம்? மாறுபாடுடைய சமையிகளென்றுகூறி அத்தருக்கங்களை விடுவிகைகயால்,அங்ஙனங் கண்டத்தருக்கங்களை விடுவெனவறிக இதற்குப்பிரமாணம்—

அதிரகசியம்.

ஏதங்கூறியிடுக்கண்களைந்தவர்
பாதங்கூறிப்பவித்திரராய்ப்பர
போதங்கூறிபபொழுதைச்சுருக்கிலார்
வாதங்கூறித்தம்வாணாள்கழிப்பரோ.

சிவபோகசாரம்.

கற்குமடப்பட்டுமிகக்கற்றவெல்லாங்கற்றவர்பாற்
றற்கமிட்டுநாய்போலச்சள்ளிடவோ - நற்கருணை
வெள்ளமொடுங்கும்விரிசடையார்க்காளாகி
யுள்ளமொடுங்கவல்லவோ.

மகத்துக்கள்வாக்கியம.

பதைப்பற்றிருக்கப்பரமசுகமென்று
லதைப்பெற்றிருக்கவறியாமல் - விதப்புற்றுக்
கற்றோர்பலநூலுங்கற்றவர்பாற்றற்கமிட்டு
நிற்பாரிதென்னநிலை.

சிற்றம்பலநாடியார்தாலாட்டு

தற்கம்படித்துத்தலைவெடித்தாகசொள்ளுமதைக்
கற்கநினையாதருளைக்காட்டுங்கருணையனே.

திருமந்திரம்.

ஒன்றதுபேரூர்வழியாறதற்குள
வென்றதுபோலவிருமூச்சமயமு
நன்றிதுதீதிதுவென் * றுரைமாந்தர்கள்
குன்றுகுரைத்தெழுநாயையொத்தார்களே.

அத்துவிதக்கலிவெண்பா

சாத்திரத்தையோதிமதந்தற்கியாதென்றனக்கோர்
வார்த்தையினைச்சொல்லிவழக்கறுத்தான்.

மேல் மூன்றாவது, முதற்குருவாற் றத்துவமுங் கழன்றென்றதே, அந்த தத்துவங்களை யெங்ஙனங்கண்டு கழன்று நிற்பதென்னில, ஆசிரியரானவ ரிதுவரையிற் பொதுவியல்பாகிய சமையநடை தருக்கங்களை விலக்கவிட்டு நின்ற சீடனுக்குத் தன்னியல்பாகிய நின்மலாவத்தை யஞ்சினிற்றெளிவதான சத்திய சத்தமென்னு முண்மைஞானமாகிய தசகாரியத்தையும், அவ்வவத்தையிலுள்ள இலாபாலாபங்களையும், அனுக்கிரகிக்கும்பொருட்டு அவனைநோக்கி நீயாரென்றுகேட்கச், சுவாமி! நான் பருத்தேனிளைத்தேனென்று கூறிக்கொடு நிற்கையால், இச்சவுடம்பே நானென்ன, அதற்கென்மா டென்பனை யென்றவனுக்கு அவை வேறாய் நின்றதுபோல, நீயு மென்கை யென்கா லென்னுடம்பு எனக் கூறிக்கொண்டு நிற்கையா லிவ்வுடம்பு நீயல்லவென்று மறுக்க, அதற்குமேற் சத்தாதிவிடயங்களையெல்லா மறிந்துகொண்டுநிற்பது இந்திரியமேயாகையால், அவ்விந்திரியமே நானென்ன, அதற் கவ்விந்திரிய முறக்கத்தின்கண் ணுணர்வின்றி நிற்றலானுந், தானொன்றை யொன்றறிய

* உரையாளர்கள் என்பதும் பாடம்.

மாட்டாமையானும் அவ்விந்திரியமு நீயல்லவென்று மறுக்க, அதற்கு
மேற் றேகத்திற் பிராணனாய் வழங்கிநிற்கின்றது பிராணவாயுவே
யாகையால் அப்பிராணவாயுவே நானென்ன, அதற்குச் சுழுத்திநிலையிற்
றனது சன்னிதானத்திருந்த மூக்கணியை யொருசோரன் களவுகொ
ள்ளத் தனக்குச் சற்றுந்தெரியாமற்றான் சடமாய்நிற்கையால், அப்பிரா
ணவாயுவு நீயல்லவென்று மறுக்க, அதற்குமே லுட்கரணங்களாயுள்ள
மனத்தையும் புத்தியையுமாங்காரத்தையுஞ் சித்தத்தையுந் தனித்தனியே
நானென்றுகூற, அவைகளு நீயெனதென்று சுட்டி யறியும்பொரு
ளாய் நிற்கையானுஞ் சடமாயிருத்தலானு நீயல்ல நீயல்லவென்று மறு
கக மறுபட்டுத், தன்னுருவந் தனக்குச் சற்றுந்தோன்றாமற் றிகைத்து
நின்ற சீடனைநோக்கி யிவனை யிங்ஙன நானென்னும்படி தோன்ற
மயக்கிநிற்கின்ற தேகமிந்திரியம் பிராணவாயு வந்தக்கரணங்களாயுள்ள
விவைகட்கு முதலிடை கடைகளின் விராவிநிற்கின்ற பிருதிவிமுதல்
நாதமீறாகிய தத்துவங்கண் முழுதையும் உருவதெரிசனங்களைக் காட்
டிக் கழற்றினாலன்றி யிவன்றிகைப்புநீங்கித் தன்னுருவத்தைத் தான்
காணமாட்டானென்று, தத்துவரூபதரிசனங்களைக்காட்டிக் கழற்றுதற்
காரம்பித்து, பிருதிவிமுதல் நாதமீறாகிய தத்துவங்களனைத்தையும் பிரு
திவியுரத்துத் தரிக்குமென்றன் முதற் சிவதத்துவஞானமாயிருக்கும்
என்றல் ஈறாக விவைகளின் றொழில்களை வெவ்வேறாகப் பகுத்துக்
காண்கையே தத்துவரூபமென்றும், அத்தத்துவங்களுக்கு நீகூடிநின்ற
விடத்துத் தொழிலுண்டாவதேயன்றி நீகூடி நில்லாவிடத்துத் தொழி
லின்றி நிற்கையாலு மவையொன்றை யொன்றறியமாட்டாமையானு
மவைகளனைத்தையுஞ் சடமென்றுகாண்கையே தத்துவதெரிசனமெ
ன்று மங்ஙனஞ் சடமென்றுகண்ட தத்துவங்களனைத்தையு நித்தியமன்
றென்று மவைகளுன்னை யறியமாட்டாமையானு நீ யவைகளையறிந்து
கொண்டு நிற்கையானும், அவைக ளுன்னைவிட வேறுதானேயென்
றுங்கண்டு நீங்கிவிடுவதே தத்துவசுத்தியென்றுங்கூறி ஆசாரியர் கழற்ற,
அங்ஙனமே கண்டு அவைகளனைத்தையுங் கழன்று நிற்பனெனவறிக.
இவை தசகாரியத்துள் தத்துவரூப தரிசனசுத்தியெனவும், இத்தத்துவ

சுத்தியிற் பிரகிருதி தத்துவம், இருபத்துநாலுங் கலாதிதத்துவ மேழு மாகிய முப்பத்தொன்று நீங்கவே, அம்முப்பத்தொன்றுமாய் நின்ற மாயாமலநீங்கும். அதுநீங்கவே வெட்டுவாளொழிந்தோனுக்கு அவ்வெட்டு வாளால்விளைகின்ற வெட்டுதற் றொழிலற்றாற்போல், அம்மாயாமலத் தோடு அம்மாயாமலத்தால்விளைகின்ற கன்மமலமுநீங்கும். அதுநீங்கவே, ஓர்தொழிலினைச்செலுத்துவிப்போனுக்கு, அத்தொழின்முடிவில் அத்தொழிலினைச் செலுத்தும் பணியற்றாற்போல, அம்முப்பத்தொருகரு விக்குந்தானே முதன்மையாய்நின்று அவைகளைப் பிரேரிக்கின்ற சிவ தத்துவங்கள் ஐந்துமாய்நின்ற, மாயேயமலமுந் தனது பிரேரகத்தொழி லற்று நீங்கும். இங்ஙனந் தத்துவசுத்தியோடு மாயையுங்கன்மமு மாமாயையுமாகிய மூன்றுமலமும் நீங்கியதெனவுங் கண்டுகொள்க. இவை களின்முதலிலே நான்பெருத்தே னிளைத்தேனென்று கூறிக்கொண்டு நிற்கையாலிந்தவுடம்பே நானென் றதற்குப் பிரமாணம்—

சித்தாந்ததெரிசனம்.

நான்பருத்தேனிளைத்தேனென்றுரைக்குஞானத்தா
லூன்சடலமன்றேயுயிர்.

என்மாடென்மனை யென்றவனுக்கு அவைவேறாய்நின்றதுபோல நீயுமென்காலென்கை யென்னுடம்பெனக்கூறிக் கொண்டுநிற்கையால் இவ்வுடம்புநீயல்லவென்று மறுத்ததற்குப்பிரமாணம்—

சத்தியஞானபோதம்.

ஊனுயிர்வேற்றையுரைக்குங்காலை
யென்மாடென்மனையென்பான்போல
வென்காலென்கையென்பனவேறே
பருத்தேனிளைத்தேனெனும்பன்மொழியா
னவயவமான்மாவாகுமென்னிற்
சின்னணினின்றுதேய்ந்தறமாய்தலி
னவயவமான்மா வன்றெனவுணரே.

பிறத்தலுமிறத்தலும்பெருகலுஞ்சுருங்கலும்
போதலும்வருதலும் புணர்வுநீக்கமு
மன்னமயத்துக்கடுத்தனவாதலி
னன்னமயகோசமான்மாவன்றே.

சிவஞானபோதம்.

எனதென்றமாட்டினெனதலாதென்று
னதலாவுன்கைகாலாக்கை—யெனதென்று
மென்னறிவதென்றுமுரைத்துநீநிற்றிகா
ணுன்னிலவைவேறுமுணர்.

சசிவர்ணபோதம்.

எனதாடைபொன்பூமகன்றையல்பாய்மா
விபங்கண்முகங்கால்கையானென்னதென்றும்
தனதாயுரைப்பான்வகுத்திந்தவூனைத்
தானென்றயர்ந்துஞ் சொலத்தக்கதன்றே.

அறிகின்றபொருளென்றுமறிவானில்வேறே
யாறுலிவ்வூனுகநானென்னலாமோ
செறிகின்றபுள்ளல்லவேகூடிவ்வகையே
சடமானவுடனின்னில்வேறென்றுதெளியே,

சித்தாந்ததெரிசனம்.

மூடவுடலுயிரோமூடாவிதென்கொலுயிர்
கூடாமோபக்கிக்குலம்.
ஆக்கையகத்துள்ளேநல்லான்மாவுளதென்று
தூககிமறைசொல்லுந்துணி.

கருவைப்பதிற்றுப்பத்தந்தாதி.

சிறக்கத்தக்கதுகருவையான்றிருவடிநேய
மறக்கத்தக்கதுமற்றுளசமையத்தின்மயக்கந்
துறக்கத்தக்கதிவ்வுடம்பைநானென்றிடுந்துணிபு
பிறக்கத்தக்கதுசிவானந்தவாரியின்பெருக்கே.

சத்தாதிவிடயங்களையெல்லா மறிந்துகொண்டு நிற்ப திந்திரியமே யா கையால் அவ்விந்திரியமே நானென்றதற்குப்பிரமாணம்—

சித்தாந்ததெரிசனம்.

இந்தியமேயான்மாவென்றெண்ணுமறிவில்லா
மந்தச்சவலைமதம்.

அவ்விந்திரிய முறக்கத்தின்கண் ணுணர்வின்றி நிற்றலானுந் தா னென்றை யொன்றறியமாட்டாமையானும் அவ்விந்திரியமு நீயல்ல வென்று மறுத்ததற்குப் பிரமாணம்—

சிவஞானசித்தியார்.

அறிவதைம்பொறியேயென்னிலுறக்கத்தினறியாவாகு
மறிவதுமொன்றொன்றாகவொன்றொன்றாயறிவதென்னி
னறிவுகளொன்றையொன்றங்கறிந்திடாவைந்தையுங்கொண்
டறிவதொன்றுண்டதான்மாவைம்பொறியறிந்திடாவே.

சசிவர்ணபோதம்.

விழியைப்புமானெனிலிரவியாதியாலே
விளக்கஞ்செயுமற்றையுருவத்தையன்றே
யொழியப்படுங்கன்னமுதனுன்குமுன்றன்
உருக்கண்டகண்டன்னையொப்பாகவுன்னே.

சித்தாந்ததெரிசனம்.

ஒன்றறிந்ததொன் றறியாதாலுமுயிரல்லை
மன்றலன்றிமூக்கறியாமற்று.

கண்ணுருவமன்றியொன்றைக் காணறியாக்கையார
வுண்ணலன்றிநாக்கறியாதோர்.

காதொலியையன்றியொன்றைக்காணறியாவிவ்வுடம்பு
மோதுபரிசமன்றியுற்று.

ஆகையாலைந்தறிவைக் கொண்டறிவதான்மாவென்
றோகையொடுஞ் சொல்லுமறையோர்.

தேகத்திற் பிராணனுய்வழங்கி நிற்கின்றது பிராணவாயுவே யாகையால் அப்பிராணவாயுவே நானென்றதற்குப்பிரமாணம்—

சித்தாந்ததெரிசனம்.

செல்லும்பிராணனன்றிச்சீவனிலையென்றுணர்ந்து
சொல்லுஞ்சுவாசமதஞ்சூள்.

சுழுத்திநிலையிற்றனது சந்நிதானத்திருந்த மூக்கணியையொருசோரன் களவுகொள்ளத் தனக்குச் சற்றுந்தெரியாமற் முன்சடமாய்நிற்கையால்அப்பிராணவாயுவையும் நீயல்லவென்றுமறுத்ததற்குப்பிரமாணம்-

சித்தாந்ததெரிசனம்.

மூக்குறுநன்மூக்கணியைமூடச்சுழுத்தியினிற்
போக்கடித்ததாமோபொருள்.

பிராணனைமுன்விட்டுப்பிடிப்போன்பிராணனென
வராவணியான்வேதமறையும்.

உட்கரணங்களாயுள்ள மனதையும் புத்தியையும் ஆங்காரத்தையுஞ் சித்தத்தையுந் தனித்தனி நானென்றதற்கு மவைகளுநீயெனதென்று சுட்டி யறியும்பொருளாய் நிற்கையானுஞ் சடமாயிருத்தலானு நீயல்ல நீயல்லவென்று மறுத்ததற்குப்பிரமாணம்—

சித்தாந்ததெரிசனம்.

மனமேபுருடனன்றிமற்றிலையென்றோதுங்
கனமாயாவாதிமதங்காண்.

* என்மனத்தாலியானெஞ்தேனென்றுரைக்கப்பட்டமையான்
றன்மனந்தானன்றுதனி.

புத்தியேயான்மாவாமென்றுணராப்போதித்த
புத்திகெட்டபுத்தன்மதம்பொய்.

---

* மறுப்பு.

* புத்திக்குச்சாக்கியாம்போதமயமான்மாப்
புத்திசடமாதலினற்பொய்.

ஆங்காரமான்மாவாமென்றுரைக்கும்பேரிருளா
ராங்காரவாதமறி.

அவிரோதவுந்தியார்.

* ஆங்காரநிச்சயித்துப்புத்திபற்றலா
லோங்குளவானமனமுந் தீபற
வொன்றுநீயன்றிவற்றுந்தீபற.

சித்தாந்ததெரிசனம்.

சடஞ்சித்தத்தாலறியுஞ்சைதனியனன்றென்
றிடமறைகளோதுமெடுத்து.

சித்தமியமானனென்றுணரேல்சீர்சான்ற
சித்தர்மதம்பின்னிடநீசெல்.

* சைதனியன்சந்நிதியிற்றானறியுங்கிஞ்சிக்கியன்
சைதனியனுக்குச்சடம்.

அவிரோதவுந்தியார்.

அறிவானினைவுமடங்கலாற்சித்த
மறிவன்றசித்தாமென்றுந்தீபற
வறிவினனுருவமென்றுந்தீபற.

சசிவர்ணபோதம்.

ஐயப்படலோர்பொருணிச்சயமா, யறியப்படல்யானெனதென்றமதஞ்
செய்யப்படல்செய்வதுசிந்தனையாஞ், சித்தம்மதுவன்றெனநீதெளியே.

முன்னுகவுடம்பதுசித்தமதேமுடிவாக, மொழிந்தபொருட்டிரடான்
நின்னுகிலநீயறியும்பொருளாய், நிகழ்கின்றதனுலெனநின்மலனே.

---

* * * மறுப்பு.

### சிந்தாந்ததெரிசனம்.

காயமுதற்சித்தங்கடையாமிவைகட்குச்
சேயன்சைதன்னியசிவன்.

உடம்புமுதற்சித்தமீறாகிய பதார்த்தங்களையு நீயல்ல நீயல்லவென்று மறுத்ததற்குப் பிரமாணம்—

### சிவஞானசித்தியார்.

என்னுடல்பொறிபிராணன்கரணமென்னுணர்வென்றக்காற
றன்னின்வேறாகுநீயென்றன்மனையென்றவெல்லா
நின்னின்வேறாகுமென்னினீங்கிடாவிவையிங்கென்னி
னுன்னினவாகுநீயாமுகிர்மயிருகவுங்காண்டி.

### சிவப்பிரகாசம்.

உருவுணர்விலாமையானுமோரொருபுலன்களாக
மருவிநின்றறிதலானுமறுதிகடம்பின்மன்னித்
தருபயனுகர்தலானுமுயிர்சடமாதலானு
மருவினையுடலுளாவியறிவிலைலறியுமன்றே.

### மணிவாசகம்.

வான்கெட்டுமாருதமாய்ந்தழனீர்மண்கெடினுந்
தான்கெட்டலின்றிச்சலிப்பறியாத்தன்மையனுக்
கூன்கெட்டுயிர்கெட்டுணர்வுகெட்டென்னுள்ளமும்போய்
நான்கெட்டவாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ.

### பதிபசுபாசவிளக்கம்.

பிண்டமாமுடலனல்லேன்பிராணவாயுவுநானல்லேன்
கண்டவைம்பொறியுமல்லேன்கரணமோர்நான்குமல்லேன்
பண்டையவறிவுமவனுனென்றுணர்தருபருவம்வாய்ப்பின்
வண்டறைகொன்றைத்தாரான்மலரடிகாணலாமே.

ஊனுடல்பொறிபிராணனுறுகரணங்களென்னுங்
கானகங்கடந்தஞ்ஞானக்காரிருட்பரப்புநீங்கித்
தானெனுஞ்சிறார்நீத்துத்தற்பரைப்பொழிலினின்று
மோனியாய்ஞானானந்தமுத்திமானகரங்கண்டேன்.

பிருதிவி யுரத்துத்தரிக்கு மென்றன்முதற் சிவதத்துவஞானமாயிரு க்குமென்றலீறாக அவைகளின் றொழில்களை வெவ்வேறாகப் பகுத்து க்காண்கையே தத்துவரூபமென்றதற்குப் பிரமாணம்—

உண்மைவிளக்கம்.

மண்கடினமாய்த்தரிக்கும்வாரிகுளிர்ந்தேபதமா
மொண்கனல்சுட்டொன்றுவிக்குமோவாமல்—வண்கால்
பரந்துசலித்துத்திரட்டும்பார்க்கிலாகாயம்
நிரந்தரமாய்நிற்குநிறைந்து.

உள்ளபடிமாபூதமோதினேமுன்றனக்குக்
கள்ளமிகுமைம்புலனுங்கட்டுரைக்கில்—மெள்ளவே
ஓசைபரிசமுருவஞ்சுவைநாற்ற
மாசைதருமைம்புலனேயாம்.

வானிடமாய்நின்றுசெவிமன்னுமொலியதனை
யீனமிகுந்தோல்காலிடமாக—வூனப்
பரிசந்தனையறியும்பார்வையிற்கண்ணங்கி
விரவியுருவங்காணுமே.

நன்றாகநீரிடமாய்நாவிரதந்தானறியும்
பொன்றாமணமூக்குப்பூவிடமாய்—நின்றறியு
மென்றோதுமன்றேயிறையாகமமிதனை
வென்றார்சென்றாரின்பவீடு.

வாக்காகாயமிடமாய்வந்துவசனிக்குங்கால்
போக்காருங்காற்றிடமாய்ப்புல்கியன—லேற்கு
மிங்கைகுதநீரிடமாய்மலாதி
விடும்பாரிடமுபத்தம்விந்து.

அந்தக்கரணமடைவேயுரைக்கக்கே
ளந்தமனம்புத்தியுடனுங்காரஞ்—சிந்தையிவை
பற்றியதுநிச்சயித்துப்பல்காலெழுந்திருந்தங்
குற்றதுசிந்திக்குமுணர்.

எல்லைபலம்புதுமையெப்போதுநிச்சயித்தல்
அல்லறருங்கிரியையான்மாவுக்—கொல்லை
யறிவாசையைம்புலனுமாரவருங்காலங்
குறியாய்மயக்கென்றுகொள்.

சுத்தவித்தைஞானமிகுந்தொன்மையாமீசுரந்தா
னத்தன்றொழிலதிகமாக்கியிடு—மொத்தவிவை
சாதாக்கியமென்றுஞ்சத்திசிவங்கிரியை
யாதாரஞானவுருவாம்.

சித்தாந்ததெரிசனம்.

கருவிசடமென்றவற்றின்கன்மத்தைக்காண்டல்
கருவிக்குருவமெனக்காண்.

அவைகளனைத்தையுஞ் சடமென்று காண்கையே தத்துவதரிசன மென்றதற்குப் பிரமாணம்—

உபதேசமாலை.

எல்லாஞ்சடநம்மைத்தானறியாச்
சித்துருநாமென்றுசிறிதத்தைக்—கைத்தழியக்
காண்பதறவேகாட்சியிதைக்கைக்குண்மாநெல்லியெனக
காண்பதுமாணுநீகடன்.

அத்தத்துவங்களனைத்து நித்தியமன்றென்றும், அவைகளுன்னை அறியமாட்டாமையாலும் நீயவைகளையறிந்துகொண்டு நிற்கையாலும், அவைகளுன்னைவிட வேறுதானேயென்றுங் கண்டு நீங்கிவிடுவதே தத்துவசுத்தி யென்றதற்குப்பிரமாணம்—

சித்தாந்ததெரிசனம்.

பாசக்குழுக்குப்பதிநாமெனத்துறத்தல்
பாசசுத்தியென்னப்படும்.

அம்பலவாணர்தசகாரியம்.

தத்துவமனைத்துநோக்கித்தனித்தனிசெயல்கள்காண்ட
லொத்ததன்னுருவமாகுமொன்றையொன்றுணராதிது
சத்தியஞ்சடமேயென்னத்தானறிந்திடுதல்காட்சி
நித்தியமன்றுசின்னுணீங்குதலென்றல்சுத்தி

திருவண்ணுமலையாதசகாரியம்.

தத்துவத்தொழிலைக்காண்டல்சடமென்றறன்னைநீக்க
லத்திறனுன்மேலென்றலருளிறனுன்மேலென்றல்
பத்தனைருளாய்ச்செய்திபண்ணவேயெண்ணிநீக்கிச்
சித்தருளதுவாய்ப்போதல்சிவத்தினைச்சேர்தறேமோ.

தத்துவசுத்தியோடு மாயையுங் கன்மமு மாமாயையுமாகிய மூன்று மலமும் நீங்கியதென்பதற்குப் பிரமாணம்—

சிவானந்தபோதம்.

பொறையினைம்பூதமும்பொய்யெனவருளான்
முறையுறநீங்கிமுத்திச்சகலமும்
பஞ்சபூதப்பழிப்புறுமுடலும்
அஞ்சுபுலன்றனையறிந்திடும்பொறிகளுஞ்
செறிந்திடும்புலன்றனைத்தெரிந்திடத்தனித்தனி
யறிந்திடவறியாவந்தக்கரணமு

மக்கர ணங்களகலவகன்றிடுந்
தக்ககலாதிதத்துவக்குழுவும்
அத்தருகலாதிகளகலவகன்றிடுஞ்
சுத்ததத்துவமுந்துடர்ந்தெழுமுயிர்ப்பும்
வடிவுறக்கண்டவைமலமெனத்தெளிந்து
நெடிதுறவாங்கவைநீங்கலிவ்வேழுந்
தத்துவரூபந்தத்துவதெரிசனந்
தத்துவசுத்திதன்னுளடங்கு
மாயையுங்கன்மமுமாமாயையுமென
வாயவிம்மூன்றுங்கண்டதுமிவணே.

நிகழ்காலத்திரங்கல்.

மாயைகழன்றமைபாரீர்வல்வினைவிட்டமைபாரீர்
தூயவறிவமைப்பாரீர்தோன்றாத்துணைவமைப்பாரீர்.

மேல்நான்காவது, முதற்குருவாலாணவமுங் கழன்றென்றதே, அவ்வாணவமாவதியாது? அதனை ஆசிரியராலெங்ஙனம்கண்டு கழன்று நிற்பனென்னில், ஆசிரியரானவர் தத்துவங்களை விடுவிக்கவிட்டுநின்ற சீடனைநோக்கி நீ இப்போது தத்துவங்களைக்கழன்று நிற்கின்றையே யினிமேலாகிலும் உன்னுருவமாவதியாது? அதனைக்கூறும் பிளாயென்றவினவ அப்போதுந் தன்னுருவத்தைத் தானுன்னியுன்னிப் பார்த்தொன்றுந் தோன்றாமற் பேரந்தகாரமாயிருக்கையாற், சுவாமி! அடியேனுக்கொன்றுந் தோன்றவில்லை, பேரந்தகாரமா யிருக்கின்றதேயென்று விண்ணப்பஞ்செய்ய, இதுதான்காண் தானென்றாயிருந்தனேக சத்தியையுடைத்தாய் நெல்லிற்குமியுஞ் செம்பிற்குக்களிம்பும் போன்றுன்னையும் தன்னையுங் காட்டாமலநாதிதொடுத்து முத்திபரியந்தமு மறைத்துன்னைச் சனனமரணங்களிற் கறங்குபோற் சுழற்றித் துயர்செய்கின்றவாணவமாவதென்று திருவுளம்பற்ற, சுவாமி! அடியேனைச் செனனமரணங்களிற் கறங்குபோற்சுழற்றித் துயர்செய்கின்ற இவ்வாணவத்தின்றுயர மடியேன் பொறுக்கமாட்டேன்! பொறுக்கமாட்டேன்

இனிமேலாகிலு மென்றிகைப்பு நீங்கத்தக்கதாக இரங்கி யிவ்வாண வத்தைக் கழற்றவேண்டுமென்றிரந்து கொடுநிற்ப, அப்போதிவ்வாண வத்தைக்கழற்றவேண்டுமென்றிவனு ளூகித்தவெண்ணமே,ஊனநாடக மியற்றித் திருவருண் ஞானநாடகம் நவிற்றுதற்காரம்பித்த வவசரமா கையால், இங்கிவன் றிரோதமல நீங்கியதென்று திருவுளஞ்செய்து பின் னருமிவ்வாணவத்தைக் கழற்றிறுலன்றி யிவன்றிகைப்புநீங்கித் தன்னு ருவத்தைத்தான் காணமாட்டானென்று, அவ்வாணவத்தைக்கழற்றுதற் காரம்பித்து, நீயுன்னுருவத்தை யுன்னியுன்னிப்பார்த்தொன்றுந் தோ ன்றுமற் பேரந்தகாரமாயிருக்கிறதென்றையே!அப்பேரந்தகாரத்தைப் பகுத்துக்கண்ட நீயறிவனுய்நின்று காண்டியோ? அறியாதவனுய்நின்று காண்டியோ? கூறும் பிளாயென்றவனுக்கு அவ்வாணவங் கழன்றறிவு விளங்கும்படிக்கேதுவாக மெல்லவுபாயமாய்வினுவ, வதற்குச்சுவாமி! அறியாதவனுய்நின்றுற் குருட்டுக்கண்ணிருட்டினைப் பகுத்தறியமாட் டாதே அதுபோல, அப்பேரந்தகாரத்தை யடியேனும் பகுத்துக்காண மாட்டேனே அங்ஙனமப்பேரந்தகாரத்தைப் பகுத்துக்காணப்படுகை யால் அறிவனுய்நின்றே கண்டேனென்று விண்ணப்பஞ்செய்ய, இங்ங னமறிவனுய்நின்றபடியேநின்று அப்பேரந்தகாரமாகிய வாணவத்தைப் பாரென்றருளிச்செய்ய, பின்னுந்தானப்படியே யறிவுச்சொரூபியாய் நின்று அப்பேரந்தகாரமாகிய வாணவத்தைப்பார்க்க, அப்போதொளி யின்முன்னிருட்டோற்றப்படாததுபோலவும்,மிகுந்தசலத்திற் பூமிதோற் றப்படாததுபோலவும்,மிகுந்த தழலிற் சலந்தோற்றப்படாததுபோலவு ம் அவ்வறிவுச்சொரூபத்தின்முன்னர்ப் பேரந்தகாரமாகிய ஆணவந்தோ ற்றப்படாமையாற் சுவாமி! இப்போது அப்பேரந்தகாரமாகிய வாண வத்தைக்காணேன்! காணேன்!! என்றதிசயித்து விண்ணப்பஞ்செய்ய, இதுவேயவ்வாணவமகன்றநிலை. இங்ஙனமே யறிவுச்சொரூபியாய்நின்று உன்றிகைப்புநீங்கி யவ்வாணவத்தைக்கழன்று நில்லென்றனுக்கிரகிக் கையால்,இங்ஙனமே யறிவுச்சொரூபியாய்நின்று ஆணவத்தைக்கழன்று நிற்பனெனவறிக. பஞ்சமலமுநீங்காதவிடத்து அருளைப் பெறுதலரிதா

மாகையால், இவ்வாணவநீக்கத்தோடு திரோதமலமு மிவ்வாணவமல முமாகிய விரண்டுமலமுமுற்கூறிய தத்துவநீக்கத்தொடுமாயையுங் கன் மமு மாமாயையுமாகிய மூன்றுமலமுமாக வைந்துமலமு நீங்கியதெனவு ஞ், சகலகேவலங்களைநீங்காதவிடத்திற் சுத்தத்தைப்பொருந்திச் சிவத் தினையடையக் கூடாதாகையான்,முற்கூறியதத்துவசுத்தியோடு சகலா வத்தையுமீண்டுக் கூறியவாணவக்கழற்சியோடு கேவலாவத்தையு நீங் கியதெனவுங்கண்டுகொள்க.

இதிற்குறைன்றுயிருந்து அனேகசத்தியையுடைத்தாய் நெல்லிற் குமியுஞ்செம்பிற்குக்களிம்பும்போன்று உன்னையுந்தன்னையுங்காட்டாம லறுதிதொடுத்து முத்திபரியந்தமு மறைத்துன்னைச் செனனமரணங் களிற் கறங்குபோற் சுழற்றித் துயர்செய்கின்ற வாணவமென்றதற்குப பிரமாணம்—

சிவஞானசித்தியார்.

ஒன்றதாயநேகசத்தியுடையதாயுடனுயா தி
யன்றதாயான்மாவின்றனறிவொடுதொழிலையார்த்து
நின்றுபோத்திருத்துவத்தைநிகழ்த்திச்செம்பினிற்களிம்பேய்ந்
தென்றுமஞ்ஞானங்காட்டுமாணவமியைந்துநின்றே.

சித்தாந்ததெரிசனம்.

அனேகவிதசத்தியினலாருயிரைமூடுந்
தினகரனைப்பன்னகம்போற்சென்று.
தண்டுலத்தைச்சில்லுமியுந்தாம்பிரத்தைக்காளிதமுந்
மண்டுதல்போலாவிமறைக்கும்.
உவர்மூடுசிந்துமுமிமூடுநெற்போற்
சவிமாளுமாணவத்தாற்றுன்.

திருவருட்பயன்.

ஒருபொருளுங்காட்டாதிருளுருவங்காட்டு
மிருபொருளுங்காட்டாதிது.

திருமெய்ஞ்ஞானப்பயன்.

என்றுமிருடறகாட்டியாவையுமுற்காட்டியிடா
தொன்றுமிதுகாட்டாதுணர்.

கருவைப்பதிற்றுப்பத்தந்தாதி

தோன்றியபோதுடன்றோன்றித்தோன்றாதுமறைத்தென்னை
யான்றசெழுஞ்செம்பிலுறைகளிம்புபோலகலாம
லூன்றுமலவிருளகற்றியுன்னருளும்பெறுவேனோ
மூன்றுலகுந்தொழுதேத்துமுகலிங்காமுதற்பொருளே.

சிவஞானசித்தியார்.

மலமாயைகன்மமாயேயந்திரோதாயிமன்னிச்
சலமாரும்பிறப்பிறப்பிற்றங்கியித்தரைகீழ்மேலு
நிலையாதகொள்ளிவட்டங்கறங்கெனநிமிடத்தின்க
ணலமாருமிறைவனாணையாலுயிர்நடக்குமன்றே.

பதிபசுபாசவிளக்கம்.

இம்மலமூன்றாலாவியிருளடைந்தறிவுமாழ்கி
மும்மைகொள்புவனந்தோறுமுறைமுறைபோகிமீளுஞ்
செம்மலங்கருணைவள்ளற்றிருவருட்டிரோதைமாறி
மம்மர்கொள்பாம்புமிழ்ந்தமதியெனவிளங்குமன்றே.

சுவாமி! அடியேனைச் சென்னமரணங்களிற் கறங்குபோற் சுழற்றித் துயர்செய்கின்றவிவ்வாணவத்தின் றுயரமடியேன் பொறுக்கமாட்டேன்! பொறுக்கமாட்டேன்!! இனிமேலாகிலுமென்றிகைப்பு நீங்கத்தக்கதாக விரங்கியருளவேண்டுமென்றதற்குப் பிரமாணம்—

சித்தாந்ததெரிசனம்.

அந்தோமலத்துயராற்றகிலேனாற்றகிலே
னெந்தாயிரங்காயினி.

துகளறுபோதம்.

வானிலிரவிவரவல்லிருள்போமாறுபோ
லீனவிருளொழிவதெக்கால - மானே
யறிந்தாயிருளென்றறியாமைதன்னைப்
பிரிந்தாயோவில்லையோபேசு.

வருகாலத்திரங்கல்.

நீங்காதபேரறிவினீங்காமலொன்றுபட்டே
யாங்காரந்தீரவடங்குவதுமெக்காலம்.

இவ்வாணவத்தைக் கழற்றவேண்டுமென் றிவனு ளுதித்தவெண் ணமே,ஊனநாடகமுளுற்றித்திருவருண்ஞானநாடகநவிற்றுதற்கு ஆரம் பித்தவவதரமாமாகையா லிங்கிவன்றிரோதமலநீங்கியதென்று திருவு ளஞ்செய்ததற்குப் பிரமாணம்—

சிவானந்தபோதம்.

இருண்மலநீங்குதற்கெண்ணுவர்நற்றிரோத
மருள்வடிவானவவதரமாகும்.

துகளறுபோதம்.

அந்தமலமாமறியாமைகண்டாயே
யந்தவறிவுநீயையனே - தொந்தவிருட்
போனதேயுன்னைவிடப்போக்கித்திரோதமரு
ளானதேகண்டாயறி.

பேரந்தகாரத்தைப்பகுத்துக்கண்ட நீயறிவனாய்நின்று காண்டியோ? அறியாதவனாய் நின்று காண்டியோ? கூறும் பிளாயென்றவனுக்கு அவ் வாணவங் கழன்றறிவு விளங்கும்படிக்கு ஏதுவாக மெல்லவுபாயமாய் விடுவியதற்குப் பிரமாணம்—

## பாடுதுறை.

காண்டலிலா - வல்லையறிந்தவறிவெங்கேகாணென்றருளான்
மெல்லவிளம்பிவிழிப்பித்தவடி.

பண்டுளமதத்தினைப்பாரொனவடியேன்பார்த்ததுகண்டிலேன்பார்க்குமக்கரியே, கண்டனனெனவதிற்கண்செவிகைகால்கடைநடுமுதலிருபுறம்பின்முன்கீழ்மே, லுண்டுகொலோவெனவொன்றையுங் காணேனெழிவறுமறிவதெனெழிலுருவெனவே, தண்டிவந்திணையடி தந்தருள்பவனேதத்துவனேபள்ளியெழுந்தருளாயே.

அறிவுச்சொரூபியாய் நின்றுபார்க்க வப்போதவ்வறிவின் முன்னரொளியினிற்சலத்தினிற்றழலினிலிருளும் பூமியுஞ்சலமுந் தோற்றப்படாததுபோல வப்பேரந்தகாரமாகிய வாணவத்தைக் காணேன்! காணேன்!! என்றதிசயித்து விண்ணப்பஞ்செய்ததற்குப் பிரமாணம்—

மோகவதைபரணி.

யாதுமாயறிவிறந்தவிருளொன்றுமிலதே
யாதுமாயறிவிறந்த வொளியொன்றுமுளதே.

* பஞ்சாக்கரத்திருக்குறள்.

காரிருளுங்கண்டுகெழிந்தேன்சிவாயநம.

செல்காலத்திரங்கல்.

என்னறிவுகண்டிங்கிறுமாந்தவிவ்விழிப்பு
முன்னமறியாதலைந்தேன்மூர்க்கனேனல்லவோ

இதுவேயவ்வாணவமகன்றநிலையென்றதற்குப்பிரமாணம்—

சித்தாந்ததெரிசனம்.

தத்துவத்தைப்பின்னிட்டுசகசமலகேவலத்தை
யத்தனருட்கொண்டாங்ககன்று

---

* இது திருக்குறளென்றே பிரதிகளிற் காணப்படுகின்றன. பெரியார் வாக்கியமென மாற்றாம லஞ்சிவிடுத்தனம்.

### பதிபசுபாசவிளக்கம.

தத்துவமுப்பத்தாறுந்தனித்தனிகளைந்துநீக்கின்
மொய்த்திருள்மூடுமெத்தைதமுன்னவனருளால்வீட்டின்
மெய்த்ததன்னுருவநன்றாய்விளங்குறுமதற்கப்பாலே
சுத்தமெய்ஞ்ஞானமேனிச்சோதிதானாயிருப்பன்.

### சிவானந்தபோதம.

இருள்கெடக்கதிரொளியெழுவதுபோலுளத்
தருளெழவாணவமகன்றதுமிவணே.

பஞ்சமலமு நீங்காதவிடத்து அருளைப்பெறுதலரிதா மென்றதற் துப் பிரமாணம்—

### சிவப்பிரகாசம்.

மோகமிகவுயிர்கடோறுமுடனாய்நிற்குமூல வாணவமொன்றுமுயங்கிநின்று, பாகமிகவுதவுதிரோதாயியொன்று பகர்மாயையொன்றுபடர்கன்மமொன்று,தேகமுறுகரணமொடுபுவனபோகச்செயலாருமாமாயைத்திரட்சியொன்றென், றாகமலமைந்தென்பவைந்துமாறாதருளென்பதரிதென்பரறிந்துளோரே.

### * நெஞ்சுவிடுதூது.

வானோன்பவனிவரக்கண்டுவல்வினையே
னேனோருமேத்துதல்கண்டேத்தினேன்-றானென்னைப்
பார்த்தான்பழையவினைப்பஞ்சமலக்கொத்தையெல்லா
நீத்தானினைவுவேறாக்கினான்.

### நிகழ்காலத்திரங்கல்.

பஞ்சமலாதீதப்பரமசுகந்தன்னைக்
கிஞ்சுகவாயாலேகேளென்றுசொன்னவா.

### சிற்றம்பலநாடியார்தாலாட்டு.

ஐஞ்சுமலத்தாலேயழிவாயிருந்தவெனை
யைஞ்சுமலநீக்கியழியாமல்வைத்தானே.

---

* இவை கொற்றவன்குடிமுதலியார் அருளியது.

சகல கேவலங்களை நீங்காதவிடத்திற் சுத்தத்தைப் பொருந்திச் சிவத்தினையடையக் கூடாதென்றதற்குப் பிரமாணம்—

சிவஞானசித்தியார்.

கேவலசகலசுத்தமென்றுமூன்றவத்தையான்மா
மேவுவன்கேவலந்தன்னுண்மைமெய்பொறிகளெல்லாங்
காவலன்கொடுத்தபோதுசகலனுமலங்களெல்லா
மோவினபோதுசுத்தமுடையனுற்பவந்துடைத்தே.

திருமந்திரம்

அறிவறியாமையிரண்டுமகற்றிச்
செறிவறிவாயெங்குநின்றசிவனைப்
பிறிவறியாதுபிரானென்றுபேணுங்
குறியறியாதவர்கொள்ளறியாரே.

வீட்டுநெறிப்பால்.

நினைப்புமறப்புமிலாதவர்நெஞ்சந்
தனைப்பிரியாதுசிவம்.

திருப்புகழ்.

அறிவுமறியாமையுங்கடந்தறிவுதிருமேனியென்
றறிந்தருணசரணாரவிந்தமென்றடைவேனோ.

பட்டினத்தார்.

சினந்தனையற்றுப்பிரியமுந்தானற்றுச்செய்கையற்று
நினைந்ததுமற்றுநினையாததுமற்றுநின்மலமாய்த்
தனந்தனியேயிருந்தானந்தநித்திரைதங்குகின்ற
வனந்தனிலென்றிருப்பேனத்தனேகயிலாயத்தனே.

### தேவிகாலோத்திரம்.

நித்திரையும்பராக்கினையுநீக்கிச்சித்தமொரு நிலையுஞ்சோராமனிறுத்திக்கொண்டாற், சித்தமொருபொருளினையுஞ்சேராதாகிச் சேரும் வகைசேராமற்செல்லநின்று, மத்தமனமுதலாயவவத்தையொன்று மருவாதவகைநிற்குமதுவேயாகு, முத்திநெறியென்றுமறையிடைவிடாது முறையிடவுமாகமங்கள்மொழியுங்காணே.

### சைவசமயநெறி.

இரவும்பகலுமிலாதவிடத்தே
பரமசிவம்பாராமற்பார்த்து.

### திருவம்மானை.

உற்றநினைப்புமறப்பற்றேனம்மானை
யோவாதசித்தததேயோததேன்காணம்மானை.

### சிவபோகசாரம்.

பாவிமனம்போகாப்பரத்தடையநாளு
மிரவுபகலற்றவிடத்தே - நிரமாக
நில்லென்றான்கண்டதெல்லாநேதிபண்ணிமும்மலமுங்
கொல்லென்றான்ஞானக்குரு.

சுத்தவத்தைநாடியிநிஞ்சுத்தவிராப்பகலா
மெய்த்தவத்தைநாடிவிநவையேற் - சுத்தவத்தைத்
தானாயிரண்டுந்தவிர்ந்தசிவானந்த
வானாவைநீயேமதி.

மேலைந்தாவது முதற்குருவானே தலைவனென்ன நீங்கி நிற்கிறதே, நானே தலைவனென்றதெதினால் அதனையாசிரியராலெங்ஙன நீங்கிநிற்பனென்னில், ஆசிரியரானவர் தானாணவத்தைக்கழற்ற கழன்றுநின்ற சீடனைநோக்கி நாமுன்ன முன்னுருவமாவ தியாது அதனைககூறும்

பிள்ளாயென்று வினவியதற்கு நீபேரந்தகாரமா யொன்றுந் தோற்றமி
ல்லையென்றையே,இப்பொழுதுஅந்தப்பேரந்தகாரமாகியவாணவத்தை
நாங்கழலச்செய்தோமே யினிமேலாகிலு முன்னுருவமாவதியாது? அத
னைக்கூறும்பிள்ளாயென்றுவினவ,அதற்கு முன்னின்றதத்துவங்களையும்
பின்னின்ற பேரிருளாகிய ஆணவத்தினையுஞ் சுவாமிகள் அனுக்கிரகத்தி
னாலே கண்டுகழன்று அவைகளனைத்திற்கு மேலாகிய வறிவனாய் நிற்
கின்றவனுநானே யாகையால் அவைகளனைத்திற்கு நானேதலைவனெ
னத் தோன்றுவ தொன்றுமேயன்றி வேறே யென்னுருவமெனக் கின்னா
தென்று தோன்றவில்லையே,சுவாமிகளே! எனக்கு என்னுருவத்தை யிது
வென்றுதோன்ற வருளிச்செய்யவேண்டுமெனறு வினவ, அதற்கு முன்
னின்ற தத்துவங்களையும் பின்னின்ற பேரிருளாகிய வாணவத்தினை
யுங் கண்டுகழன்று அவைகளனைத்திற்கு மேலாகிய வறிவனாய் நின்றவ
னானே யென்றையே,அவ்வறிவுதான்காண் உன்னுருவமென்றும், நானே
தலைவனென்றது மதனாலென்றுந் திருவுளம்பற்றிப் பின்னரும் நீயேய
றிவனாய்த் தலைவனாய் நிற்பையாயிற் பாசபந்தப்படாயே! சென்னமரண
ப்படாயே நரகவேதனைக்குள் அழுந்தாயே! நெடுங்காலமாயவைகளிற்
பட்டழுந்திவருகையால் இதுவரையு முன்னைநீ தனித்துக்கண்டறியவ
றலைவனென்றறிந்தாயில்லையே! இப்போ தங்ஙனமறிவன் றலைவனென்
றுன்னை நீதனித்துக்கண்டறிதலால் அங்ஙன மறிவித்தற்கே திருவருள்
உண்டாயிருக்கவேண்டுமே! அஃதன்றியும் நித்திரையிற் கேவலப்பட்
டுக் கிடக்குமிடத்தி லிதுவரையுங் கேவலப்பட்டுக் கிடந்தோமே யினி
மேற் சகலத்தில் வரவேண்டுமென்று உனக்காயோரெண்ணமுண்டோ
வில்லையே; அங்ஙனமிருப்பவுன்னைச் சகலத்தில் வருவித்தற்கோர் திரு
வருளுண்டா யிருக்கவேண்டுமென்றுன்னனுபவத்திற்குத் தோன்றப்ப
டுகின்றதோ வில்லையோ! தோன்றப்படுகின்றதேயாகில் அத்திருவருளே
சகலத்திலும் விளக்கி நிற்கவேண்டுமென்று கண்டுன்றலைமையை நீங்கி
நில்லென்றுகூறச் சுவாமி! இஃதேயுண்மை யுண்மையென்றங்ஙனமே
சம்மதித்துக்கொண்டா சிரியராற்றன்றலைமை நீங்கி நிற்பனெனவறிக.

இதில் முன்னின்ற தத்துவங்களையும் பின்னின்ற பேரிருளாகிய வாணவத்தினையுங்கண்டு கழன்று அவைகளனைத்தினுக்கு மேலாகிய வறிவனாய் நிற்கின்றவனேயென்றது; தசகாரியத்து ளான்மரூபமென்றும், இவ்வான்மரூபமுமிதற்குமுன்னாய்க்கூறிய தத்துவரூபம்தெரிசனம் சுத்தியுமாகிய விந்நான்கினையு நான்காகக்கண்டு இதனாலுன்னையே சீதலைவனெனவெண்ணி நின்றநிலையே நின்மலாவவத்தையைந்தினு ணின்மலசாக்கிரமென்றும், இந்நின்மலசாக்கிரத்திற் றத்துவரூபதெரிசன சுத்தியுமான்மரூபமாகிய நான்கு மொன்றுக்கொன்று தொடர்ச்சியின்றி யொன்றிலொன் றடங்குதலுமின்றித் தனித்தனியே வெவ்வேறாய் நிற்றலானாங்கு நான்காயே நிற்கிறதென்றும், இந்நின்மல சாக்கிராதியைந்தனுள் அலாபங்களைக்கண்டு நீங்கிலாபங்களைக்கண்டுகூடி முத்தியெய்துதற்காகக் குறித்து இவையிலாபா லாபங்களாயிருக்குமென்றும், இங்ஙனமாயிருக்கின்ற விலாபாலாபங்களி லிந்நின்மலசாக்கிரம் நானேதலைவனென நிற்கையால் அலாபமென்றுங் கண்டுகொள்க.

இதில் முன்னின்றதத்துவங்களையும் பின்னின்ற பேரிருளாகிய வாணவத்தினையுஞ் சுவாமிகள் அனுக்கிரகத்தினாலே கண்டுகழ அவைகளனைத்தினுக்கு மேலாகியவறிவனாய் நிற்கின்றவனேயெ தற்குப் பிரமாணம்—

துகளறுபோதம்.

எல்லாம்பொய்யென்றிங்கிருந்தேனுநானன்றோ
நல்லாயெனையறிந்தேனானன்றோ - சொல்லாடு
நான்பிரமமன்றிநடுவேயுணர்த்துதற்கு
வான்பிரமமுள்ளதோமற்று.

பகவற்கீதைதாலாட்டு.

எப்பொழுதுஞ்சின்மயந்தானெனல்மறந்துதேடுமது
செப்புமிடத்தணியிருக்கத்தேடுதல்போலென்றவரோ.

பஞ்சாக்கரத்திருக்குறள்.

அறிவாளனென்றென்னையறிந்தேன்சிவாயநம.

நீயே யறிவனாய்த் தலைவனாய் நிற்பையாயிற் பாசபந்தப்படாயே சென்னமரணப்படாயே நரகவேதனைக்கு ளழுந்தாயே நெடுங்காலமா யவைகளிற்பட்டழுந்திவருகையால் இதுவரையுமுன்னைநீ தனித்துக்கண்டறிவன் றலைவனென்றறிந்தாயில்லையே, இப்போதங்ஙனமறிவன் றலைவனென்றுன்னை நீ தனித்துக்கண்டறிதலால் அங்ஙனமறிவித்தற்கோர் திருவருளுண்டாயிருக்க வேண்டுமே யென்றதற்குப் பிரமாணம்—

அம்பலவாணையாதசகாரியம

அனத்தையுந்துறந்தோமின்றுளியாவர்க்குமேலாமென்ன
நினைத்திடலுயிர்க்குருபநீநெடுநாளதாகச்
செனித்தனைநரகினின்றுந்திளைத்தனைதெளிந்துசற்று
முனைத்தனிநினைந்ததில்லையுறுஞ்செயலருளதென்றோர்.

துகளறுபோதம்.

உன்னறிவைநீயேயுணர்வையேயாமாகி
லிந்நெடுநாட்பாசத்தியையாயே-யுன்னறிவை
நீங்காவறிவாகிநீருமிரதமும்போ
லாங்காணரனாருள்.

உன்னறிவுக்குள்ளேயுணர்வாயொழியாத
தன்னறிவுதானுனக்குத்தாரகமாய்ப்-பின்னமற
வொன்றாவொழியாமலுள்ளபடியுள்ளடங்கி
நின்றாலதுவாவைநீ.

இஃதன்றியும் நித்திரையிற் கேவலப்பட்டுக் கிடக்குமிடத்து இதுவரையுங் கேவலப்பட்டுக் கிடந்தோமே, இனிமேற் சகலத்தில் வரவேண்டுமென்று உனக்கா யோரெண்ணமுண்டோ வில்லையே அங்ஙனமிருப்ப, உன்னைச் சகலத்தில் வருவித்தற்கு ஓர் திருவருளுண்டா யிருக்கவேண்டுமென்று உன்னனுபவத்திற்குத் தோன்றப்படுகின்றதோ வில்லையோ, தோன்றப்படுகின்றதேயாகில் அத்திருவருளே சகலத்தி

னும் விளக்கி நிற்கவேண்டுமென்று கண்டென்றலைமை நீங்கி நில்லென்ற தற்கு பிரமாணம்—

சைவசமயநெறி.

உண்டோவசித்தற்குணர்வுதிக்கயாமுளத்துக்
கொண்டகுறிப்பின்றிவிளங்கும்.

துகளறுபோதம்.

அன்றுமுதலின்றளவுமண்ணலறிவிப்பதன்றி
யின்றறிவதொன்றியமபுவதென்-றென்று
மவர்க்கேதனிலுணர்த்தியாங்கருத்தியிற்றித்
தவத்திலுணர்த்தினரார்தான்.

சிற்றம்பலநாடிகள்வெண்பா.

மைந்தாவெனவழைத்துமாயாவுடலகற்றி
யீந்தாயறிவென்றிசைவித்தா-னெந்தாயே
யாதாரமேதென்றேனுங்கறிவேதானென்றான்
றாதார்மலர்த்தாள்கடந்து.

சுவாமீ! இஃதே உண்மையுண்மை என்றங்ஙனஞ் சம்மதித்துக் கொண்டாசாரியராற் றன்றலைமை நீங்கி நிற்பனென்றதற்குப் பிரமாணம்—

சிவஞானசித்தியார்.

அறிந்திடுமொன்மாவொன்றையொன்றினாலறிதலானு
மறிந்தவைமறத்தலானுமறிவிக்கவறிதலானு
மறிந்திடுந்தன்னையுந்தானறியாமையானுந்தானே
யறிந்திடுமறிவனன்றாமறிவிக்கவறிவனன்றே.

திருவருட்பயன்.

கண்டவற்றைநாளுங்கனவிற்கலங்கியிடுந்
திண்டிறலுக்கென்னோசெயல்.

பொறியின்றியொன்றும்புணராதபுந்திக்
கறிவென்றபேர்நன்றற.

பஞ்சாக்கரத்திருக்குறள்.

சித்தலவென்றென்னைத் தெளிந்தேன்சிவாயநம.

முன்னின்ற தத்துவங்களையும் பின்னின்ற பேரருளாகிய ஆணைசத்தியையுங்கண்டு கழன்று அவைகளைத்தினுக்கு மேலாகிய வறிவாய் நிற்கின்றவனானேயென்றது தசகாரியத்துள் ஆன்மரூபமென்றதற்குப் பிரமாணம்—

சிவானந்தபோதம்.

புணர்ந்தவல்லிருடனைப்புரைபுரைதொறுஞ்சென்
றுணர்ந்தறிவாற்றுமரூபமதாகும்.

சிந்தாநந்ததெரிசனம்.

சைதன்னியவுருநானென்றுதமநீங்கல்
சைதன்னியனுருவந்தான்.

துகளறுபோதம்.

கண்ணிலிருள்போனாலுங்கண்டன்னைக்காணாபோ
லெண்ணுமிருள்போனாலெனையறிய-வொண்ணாதோ
கண்போற்சடமோநீகாட்டியதுகண்டறிந்த
வொண்போதனீயென்றுணர்.

பதிபசுபாசவிளக்கம்.

கன்னனான்புளிஞனென்றேகவலையுற்றழுங்குங்காலைக்
கன்னநீகிராதனன்றுகௌவுந்திபுத்திரனென்றாற்போ
லன்னியவுடனானென்றேயயர்ந்துளமழியேன்மைந்த
வன்னியமென்றுகண்டவறிவுநீயுணர்ந்துகொள்ளே.

அன்னியகருவியெல்லாநாமலவென்றறிந்தோன்
பின்னரக்கருவியெல்லாம்பிரித்தவன்றனைமறப்ப
மன்னியசேடனீயேயென்றுமாதவத்தின்வந்த
செங்நிலைக்குரவன்சொல்லாற்றெளிவதுஞானமாமே.

ஞானவிளக்கம்.

கிணறுதொடாமுன்விளங்காக்கேடிலாகாயங்
கிணறுதொடமுன்விளங்குங்கேண்மை-யுணருங்காற்
கருவிகளிற்றன்னைத்தான்காணுமைநின்றதுவுங்
கருவியினிற்கண்டதுவுங்காண்.

பொன்னையரித்தெடுக்கும்பொன்னரிப்பன்போலாசா
னென்னையரித்தெடுத்தானிவ்வுடலிற்-றன்னரிய
பாலையரித்தெடுக்கும்பாலன்னஞ்சர்க்கரையை
யாலையரித்தெடுக்குமால்.

ஆனந்தருத்திரேசரந்தாதி.

என்றாழும்வெண்மதியும்விலகியேகுமெழிற்காமக்கோட்டம்வாழ் கா ஞ்சிமூதூர், மன்றாடுகோப்புநடமாடுமுக்கண்வள்ளலுயரானந்தருத்திரேசன், வென்றுமெலவலியையறுத்தலோடுமேலானேனதுசுத்தத்தருளாமென்றான், றன்றுளிலிருந்துதொழில்புரியப்புக்கேன்றகுதியின்மை காட்டிறன்றணிந்துய்ந்தேனே.

சிவவாக்கியம்.

என்னகத்துளென்னைநானெங்குமோடிநாடினே
னென்னகத்துளென்னைநானறிந்திலாமையானதா
லென்னகத்துளென்னைநானறிந்துமெய்தெளிந்தபின்
னென்னகத்துளென்னையன்றியாதுமொன்றுகண்டிலேன்.

செல்காலத்திரங்கல்.

என்னறிவுகண்டிங்கிருடீர்ந்தவிவ்விழிப்பு
முன்னமறியாதிருந்தேன்மூர்க்கனேனல்லவோ.

முன்னர்த் தத்துவசுத்திக்கிக்கூறியபிரமாணத்திலும்,தத்துவத்தொழி லைககாண்டல் சடமென்றல் தன்னை நீங்கிய காலத்தி ஞான்மேலென்றல் என்பதும் முன்னம் நீயே யறிவனுய்த் தலைவனுய் நிற்பையாயிற் பாசப ந்தப்படாயே, செனனமரணப்படாயே, நரகவேதனைக்குளழுந்தாயே என்றதற்குக் கூறிய பிரமாணத்திலும்,அனைத்தையுந் துறந்தோ மின்னு ளியாவர்கரு மேலாமென்ன நினைத்திடலுயிர்க்கு ரூபம்எனவும் முன்ன ர்ச் சித்தமு நீயல்லவென்று மறுத்ததற்குக் கூறிய பிரமாணத்திலும்—

அறிவானினைவுமடங்கலாற்சித்த
மறிவனற்சித்தாமென்றுந்தீபற
வறிவுன்னுருவமென்றுந்தீபற.

உன்னையே நீ தலைவனென வெண்ணிநின்ற நிலையே நின்மலசாக் கிரமென்றதற்குப் பிரமாணம்—

பஞ்சாக்கரப்பஃறொடை.

விருள்விளக்காதித்தனெழிற்கிரணத்துள்ளே
மருள்விளக்காவாறகன்றுமாளத்தெருள்விழிபோ
லாமாநமக்குளருள்சிவத்தான்மாறவுயிர்
தாயாமுறைமூன்றுஞ்சாக்கிரமாம்.

திருவண்ணாமலையாதசகாரியம்.

தன்னைத்தலைவனெனக்கருதறலைமையருளேயெனக்கருதல்
பின்னர்ப்புதிதாயருட்செயலைப்பெறவே யெண்ணலதைநீக்கி
மன்னித்திருவருளாய்ப்போதல்மகிழும்பரசிவனைச்சேர்தல்
துன்னிக்கருதுமவத்தையெனச்சொல்லுஞ்சுருதிசிவாகமமே.

அலாபங்களைக்கண்டு நீங்கி லாபங்களைக்கண்டுகூடி முத்தியெய்து தற்காகக் குறித்திவை யிலாபாலாபங்களா யிருக்குமென்று கண்டுகொ ள்கவென்றதற்குப் பிரமாணம்—

## திருச்சிற்றம்பலதேசிகன் திருவாக்கியம்.

லாபாலாபங்களாகிவருமஞ்சிலிலாபங்கள்மூன்றேபலாபங்கள்ளொண்டே, சாபானுக்கிரகமூன்றையுங்கண்டுதற்பரன்றன்னையுங்கண்டுகொள்வாரோ, தாவாதபந்தங்கணீங்காதபேர்கடாமிரண்டுங்காணாமல்வீணாயிருப்பர், தேவாதிதேவருங்காணாதமூன்றையுந்தெரிந்தவரோபரமானந்தமாவார்.

## சிவப்பிரகாசம்.

தேசுறமருவுமான்மதெரிசனமான்மசுத்தி
யாசிலாவான்மலாபமாகமூன்றாகமூன்றும்
பாசமதகலஞானம்பற்றறான்பணியைநீத்த
லேசினேயத்தழுந்தலெனுமிவற்றடங்குமன்றே.

மேலானவது முதற்குருவினாலருட்டெரிவானே தலைவனென னீங்கியென்று தெய்வவருளை தெரிவதெங்ஙனம்அதனால், நானே தலைவனென்றதெதினால்,அதனை யாசாரியரானீங்கிநிற்பனென்றதெங்ஙனமென்னில், ஆசாரியரானவா முன்ன மான்மரூபமாய் நானே தலைவனென்றதை யுனக்கு மேலாக வோர் திருவருளுண்டா யிருக்கவேண்டுமேயென்று காட்டி யத்தலைமையை நீக்க அங்ஙனமே எனக்கு மேலாயோர் திருவருளுண்டா யிருக்கவேண்டுமென்று சம்மதித்துக்கொண்டு தன்றலைமை நீங்கிநின்ற சீடனைநோக்கி நீ முன்னமோர் திருவருளுண்டா யிருக்கவேண்டுமென்று சம்மதித்துக்கொண்டையே; அத்திருவருளின் சொரூபமாவதியாது? அதனைக்கூறும் பிளாயென்று வினவச் சுவாமீ! அஃதடியேனுக்குத் தெரியவில்லையே, சுவாமிகளே கடாட்சித்தருளவேண்டுமென்றிரந்துகொண்டு நின்ற சீடனுககனுக்கிரகித்தற் காரம்பித்துக்கொண்டு கண்ணுக்கோ ரொளிகலந்து நின்று காட்டினாலொழியத்தானாய்க் காணுந்தன்மை யுண்டோ வில்லையே, அதுபோல உனக்கு மோர் திருவருள் நீருக்குட்டட்பம்போ லுயிர்க்குயிராய்க்கலந்து நின்று காட்டினாலொழிய நீயாய்க் காணமாட்டாயே நீயேயறிவனாய் நின்று காண்பையேயாயிற் பாசபந்தப்படாயேயென்று முன்னமே

கூறினேனாகையால், எவ்விதத்தானுமோர் திருவருளான துயிர்க் குயிராய்க் கலந்துநின்று காட்டினாலொழிய நாமாய்க் காணமாட்டோ மேயென்று கண்டு அத்திருவருளை நீ யுன்னனுபவத்திலே நன்றாய் நின் றுன்னிப் பொறுத்துப்பார்த்தறிதியென்னச் சுவாமீ! உன்னுங்கருவி யாய் நின்ற மனதான் மாயாபோத முன்னங்கூறிய தத்துவசுத்தியோடு நீங்கி நிற்க, பின்னரும் எண்டம்மாயாபோதமாகிய மனதைக்கொண்டு உன்னலாமோவென்ன, அதற்கழிபொருளும் பொய்ப்பொருளுமாய் நின் ற நாமரூபங்களாகிய பிரபஞ்சத்தை வெகுமுகமாய் நின்றுன்னி யறிந் ததே மாயாபோதமாகிய மனமாவதன்றி யந்நாமரூபங்களைவிட்டு ஏக னனேகனிருள் கருமமாயையென்று ஐவகைப்பட்டிருக்கின்ற திரிபதா ர்த்தங்களாகிய மெய்ப்பொருள்களை யகமுகமாய் நின்றுன்னுவதருட் போதமே யாமாகையால், அவனருளாலே யவன்றாள் வணங்கவேண் டுமென்று கண்டகமுகமாய் அவ்வருட்போதமாய் நின்றுன்னிப் பொறு த்துபபாாததறிதியென்றும், மேலு மிங்ஙனமாய் உன்னவரு மிடந்தோ றும் இதுவே கருத்தெனக் காண்டியென்றுந் திருவுளம்பற்ற, அங்ஙன மே கண்ணுககோர ஒளிகலந்து நின்று உணர்த்திலாலன்றித் தானாய் காணமாட்டாததுபோல நமக்குமோர் திருவருள் கலந்துநின்று உணர் த்திலாலன்றி நாமாயுணரமாட்டோமேயென்றகமுகமாய் நின்றுன்னிப் பொறுத்துப் பார்த்தறியுமிடத்துத் தன்னனுபவத்திலே அத்திருவருட் சொரூபம பிரகாசமாய் நீருககுட்டப்பம்போற் றன்னுட்பிறிவற வுயிர் கருயிராய் விளங்கித் தோன்றுகையாற் சுவாமீ! அத்திருவருட்சொரூப த்தை யுயிர்க்குயிராய் விளங்கக் கண்டேன், கண்டேனென்றதிசயித்து மகிழ்ச்சியெய்திவிணணப்பஞ் செய்தனன்.

இங்ஙனம் உயிர்க்குயிராய் காண்டலே அவ்வருளைத் தெரிவதெ ன்றும், இதுவே தசகாரியத்துள் சிவரூபமென்றுங் கடாட்சித்தரு ளிப் பின்னரும் உயிர்க்குயிராய் நிற்கின்ற திருவருட்சொரூபத்தை யறிந்த நீ என்னமாய் நிற்கின்றாய் கூறம் பிளாய் என்று வினவ, சுவாமீ! அத்திருவருட்பிரகாசத்திற் பிறிவறக்கலந்து நின்று அப்பிர காசத்தின் வலிமையைக்கொண்டு யாவையினும் வியாபித்தறிகின்ற

வனானே யாகையால், நானே தலைவனாய் நிற்கின்றேனென்ன, இங்ஙனமாக நானே தலைவனென வெண்ணிநிற்றலே தசகாரியத்துள் ஆன்மதெரிசனமென்றும், இவ்வான்மதெரிசன முற்கூறிய சிவரூபத்தையின்றி யமையாமையான், இவ்வான்மதெரிசனத்தில் அச்சிவரூபமுமடங்கி ஆன்மதெரிசனமேயாய் நிற்கிறதென்றும், தானே தலைவனென்றது மிதனாலென்றுங்கூறிப் பின்னருந் திருவருட்பிரகாசத்தின் வலிமையைக்கொண்டு நானே தலைவனென்றதொழியத் திருவருட்பிரகாசத்தை நீங்கிநின்று உன்னைப் பார்க்குமிடத்துனக்கா யோர்தலைமையைக்காணாமே, நீ அதனை நன்றாய் நின்றுன்னிப் பார்த்தறிதியென்ன, அப்படியே நன்றாய் நின்றுன்னிப் பார்த்தறிந்து எவ்விதத்தானுந் திருவருளையொழியத் தனக்காயோர் தலைமையைக் காணாதபடியாற் சுவாமீ! அத்திருவருளே தலைமையுடையதன்றி, எனக்காயோர் தலைமையைக் காணேனென்றனன், இங்ஙனமாகக்கண்டு அருட்டெரிவால் நானே தலைவனென்றதை நீங்கி நில்லென்ன, அங்ஙனமே கண்டு ஆசாரியரால் அதனை நீங்கி நிற்பனெனவறிக.

இங்ஙனந் திருவருளே தலைமையுடையதெனக் கண்டு நிற்றலே நின்மலாவத்தை யைந்தனுள் நின்மலசொற்பனமென்றும், இந்நின்மலசொற்பனத்துட் சிவரூபத்தைத் தன்னுளடக்கிய ஆன்மதெரிசனம் ஒன்றுமொன்றாய் நிற்கின்றதென்றும், இலாபாலாபங்களாகிய ஐந்தனுள் இது திருவருளே தலைமையுடையதெனக்கண்டு நிற்றலா லிலாபமென்றுங் கண்டுகொள்க.

இதில் அத்திருவருளை நீ உன்னனுபவத்திலே நன்றாய் நின்றுன்னிப் பொறுத்துப்பார்த் தறிதியென்று கூறியதற்குப பிரமாணம்—

### மகத்துக்கள்வாக்கியம்.

சாத்திரத்தைப்பொங்கிவைத்தசட்டிதனைமுன்னர்வைத்துப்
பார்த்திருந்துவிட்டாற்பசிபோமோ - காத்திரத்தில்
வானைக்காற்றீயறலைமண்ணைப்பிரித்துவெவ்வே
றானக்கால்நீசிவமாவை.

### ஞானசாகரவெண்பா.

சாத்திரங்களோதித்தலைவனடிகூடாமற்
சாத்திரங்களின்பந்தருமோதான்-சாத்திரத்தைக்
கற்றிருந்துவிட்டாற்கரியாகாதப்பொருளைச்
சற்றிருந்துபார்நீதரித்து.

### திருப்புகழ்.

அரவுபுனைதருபுனிதரும்வழிபட
மழலைமொழிகொடுதெளிதரவொளிதிக
ழறிவையறிவதுபொருளெனவருளிய-பெருமாளே.

### சிவானுபூதிவிளக்கம்.

அண்டபிண்டங்கண்டாலென்னருட்கருவிகண்டாலென்
கண்டவுயிர்கண்டாலென்காநசவுயிர்காணாதார்.

### ஒழிவிலொடுக்கம்.

அறிவாயிரீர்மயக்கமாகாதசையில்
விறிசாய்விடாதோவிகற்பம் - பிறியாத்
தராசுநுனிபோற்சமாதிவரின்ஞான
விராசனுமக்கொப்பாவர்.

அழிபொருளும் பொய்ப்பொருளுமாய் நின்ற நாமரூபங்களாகிய பிரபஞ்சத்தை வெகுமுகமாய் நின்றுன்னி யறிந்ததே மாயாபோதமாகிய மனமாவதன்றி யந்நாமரூபங்களைவிட்டு ஏகன், அனேகன், இருள், கருமம், மாயை, என்றைவகைப்பட்டிருக்கின்ற திரிபதார்த்தங்களாகிய மெய்ப்பொருள்களை அகமுகமாய் நின்றுன்னுவது அருட்போதமே யாமென்றதற்குப் பிரமாணம்—

## அத்துவிதவுண்மை.

நாமரூபந்தனைநோக்கிநாடன்மனமும்புறமுகமு
நாமரூபந்தனைநீக்கிநாடலறிவுமுண்முகமு
நாமரூபத்தெவ்வளவுநாட்டஞ்சொரூபந்தோன்றாது
நாமரூபநாட்டம்விடினமதுசொரூபந்தோன்றிவிடும்.

## திருமந்திரம்.

மனந்தானேதைத்துவமானதும்போனது
மனந்தானேசீவனுமாறுதவீசனு
மனந்தானேவித்தனைமாறுட்டமானது
மனந்தானேபின்னையுமாறுதபோதமே.

## திருவருட்பயன்.

ஏகனனேகனிருள்கருமமாயையிரண்
டாகவிவையாறுதியில்.

## தணிகைப்புராணம்.

ஆணவமாயைகாமிய முயிர்களமலனுமறுதிமெய்ப்பொருளே
மாணவகாவிப்பொருள்களிவற்றைவயக்குறும்வாக்கியந்தம்மைப
பேணுறுபருவமடுத்தவர்க்கல்லாற்பெறும்பயன்புகழ்முதலொன்ற[ந்தே
காணியகொடுப்போரவரொடுநரகங் காணியாய்க்கைக்கொள்வாவினை

## அத்துவிதவுண்மை.

நாமரூபம்விளக்கல்பரநாடலுயிராமலைமாயை
நாமரூபந்தனைநோக்கிநாடச்செய்தலஞ்ஞான
நாமரூபத்திவ்வளவுநாட்டமெனவேசெய்தல்வினை
நாமரூபந்தனைநோக்கிநாடுமிடத்திலிவைநிகழும்.

உருவநாமநோக்கிடத்திலுளதாமிந்தவைவகையு
முருவநாமநீக்கிடத்திலொன்றுமிவைகளிலவாகிச்
சொருபமொன்றேநிகழ்தலினாற்சொன்னவிவைகளைவகையுஞ்
சொருபமன்றிவேறில்லைத்தோன்றும்விவகாரத்திசையில்.

திருவண்ணாமலையையாதசகாரியம்.

அழிபொருளும்பொய்ப்பொருளுமளப்பிலவேயாதலினாற்
கழிபொருளாய்க்கைவிடுவரொருகாலுங்கருதாம
லழிபொருளிலடங்காதவைந்துபெரும்பொருள்களையே
கழிபொருளாய்க்கருதாமலெப்பொழுதுங்கருதாயே.

சிவஞானசித்தியார்.

பாசஞானத்தாலும்பசுஞானத்தாலும் பார்ப்பரியபரம்பரனைப்பதி ஞானத்தாலே, நேசமொடுமுள்ளத்தேநாடிப்பாதநீழற்கீழ்நில்லாதேநீங் கிப்போதி, னாசைதருமுலகமெலாமலகைத்தேராமென்றறிந்தகலவந்நி லையேயாகுமபின்னு, மோசைதருமஞ்செழுத்தைவிதிப்படியுச்சரிக்கவு ள்ளத்தேபுகுந்தளிப்பனூனமெலாமோட.

சிவப்பிரகாசம்.

பாசமாஞானத்தாலும்படர்பசுஞானத்தாலு
மீசனையறியவொண்ணாதிறையருண்ஞானநண்ணித்
தேசுறுமதனான்முன்னைச்சிற்றறிவொழிந்துசேர்ந்து
நேசமோடுயர்பரத்துணிற்பதுஞானநிட்டை.

அவனருளாலே யவன்றாள் வணங்கவேண்டுமென்று கண்டு அக முகமாய் அவ்வருட்போதமாயே நின்றுன்னிப் பொறுத்துப்பார்த் தறி தியென்றதற்குப் பிரமாணம்—

திருவாசகம்.

சிவனவனென்சிந்தையுணின்றவதனா
லவனருளாலேயவன்றாள்வணங்கி.

## பரமஞானவிளக்கம்.

அறிவதேகண்ணதாகவனைத்தையுங்காண்டனீங்கி
யறிவதேகண்ணதாகவறிவினைக்காண்டல்வேண்டு
மறிவினையறிவாலுன்னியறிவதேயறிவதாகு
மறிவினையறியாமாந்தரலந்தலைப்படுகின்றாரோ.

## தேவாரம்.

மைப்படிந்தகண்ணாளுந்தானுங்கச்சிமயானத்தான்வார்சடையான் மாசொன்றில்லா, னொப்புடையனல்லனொருவனல்லனோரூரனல்லனுவமையில்லி, யப்படியனவ்வுருவனவ்வண்ணத்தனவனருளேகண்ணாகக்காண்பதல்லா, லிப்படியனிவ்வுருவனிவ்வண்ணத்தனிவனிறைவனென்றெழுதிக்காட்டொணாதே.

## வீட்டுநெறிப்பால்.

கருத்துறப்பார்த்துக்கலங்காமலுள்ளத்
திருத்திச்சிவனைநினை.

## சித்தாந்ததெரிசனம்.

நீருககுட்டட்டம்போனின்னறிவினின்றானைப்
பாருட்க்கண்கொண்டுபரிந்து.

## தேவாரம்.

விறகிற்றீயினன்பாலிற்படுநெய்போன்
மறையநின்றுளன்மாமணிச்சோதியா
னுறவுகோனட்டுணர்வுகயிற்றினான்
முறுகவாங்கிக்கடையமுன்னிற்குமே.

ஓதியேகழிக்கின்றீர்களுலகத்தீரொருவன்றன்னை
நீதியானினையமாட்டீர்நின்மலனென்றுசொல்லீர்
சாதியாநான்முகனுஞ்சக்கரத்தானுங்காணாச்
சோதியாய்ச்சுடரதானார்திருச்சோற்றுத்துறையனாரே.

ஒன்றியிருந்துநினைமின்களுந்தமக்கூனமில்லை
கன்றியகாலனைக்காலாற்கடிந்தானடியவர்க்காய்ச்
சென்றுதொழுமின்கடில்லையுட்சிற்றம்பலத்துநட்ட
மென்றுவந்தாயென்னுமெம்பெருமான்றன்றிருக்குறிப்பே.

## ஸ்ரீவாசகம.

சட்டோநினைக்கமனத்தமுதாஞ்சங்கரனைக
கெட்டேன்மறப்பேனோகேடுபடாத்திருவடியை
யொட்டாதபாவித்தொழும்பரைநாமுருவறியோஞ்
சிட்டாயசிட்டற்கேசென்றூதாய்கோத்தும்பீ

## நிகழ்காலத்திரங்கல்.

உள்ளும்புறம்பனைப்பாரீரொருதன்மையாளனைப்பாரீர்
தெள்ளத்தெளிவனைபபாரீர்த்தேறலிற்றேறலைப்பாரீர்.

கருணையுருவனைப்பாரீர்கண்ணருளாளனைப்பாரீ
ரிருண்மலமற்றமைபாரீரின்புற்றிருந்தமைபாரீர்.

## அருணைகிரியந்தாதி.

சும்மாகிடைக்குமோசோணாசலன்பாத
மம்மால்விரிஞ்சனறிகிலார்—நம்மா
லிருந்துகதைசொன்னக்காலென்னாகுநெஞ்சே
பொருந்தநினையாதபோது.

## திருவருட்பயன்.

உன்னுமுளதையமிலதுணர்வாயோவாது
மன்னுபவந்தீர்க்குமருந்து.

சுவாமீ! அத்திருவருட் சொரூபத்தை உயிர்க்குயிராய் விளங்கக் கண்டேன், கண்டேனென் றதிசயித்து மகிழ்ச்சியெய்தி விண்ணப்பஞ் செய்ததற்குப் பிரமாணம்—

### தேவாரம்.

தேடிக்கண்டுகொண்டேன் - திரு
மாலொடுநான்முகனும்
தேடித்தேடொணுத் தேவனையென்னுளே
தேடிக்கண்டுகொண்டேன்.

மாதர்ப்பிறைக்கண்ணியானைமலையான்மகளொடும்பாடிப்
போதொடுநீர்சுமந்தேத்திப்புகுவாரவர்பின்புகுவேன்
யாதுஞ்சுவடுபடாமலையாறடைக்கின்றபோது
காதன்மடப்பிடியோடுங்களிறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன்

வெள்ளத்தார்விஞ்சையார்கள் * மகிழவே
வெள்ளத்தைச்சடைவைத்தவிகிர்தனுர்
கள்ளத்தைக்கழியம்மனமொன்றிநின்
றுள்ளத்தில்லொளியைக்கண்டதுள்ளமே.

நாடிநாரணனுன்முகனென்றிவர்
தேடியுந்திரிந்துங்காணவல்லரோ
மாடமாளிகைசூழ்தில்லையம்பலத்
தாடிபாதமென்னெஞ்சுளிருக்கவே.

### நிகழ்காலத்திரங்கல்.

இப்போதுகண்டவிறையறிவுமென்னுயிருக்
கப்போதுமாதாரமாகியவாகண்டனமே.

### ஆனந்தருத்திரோசாதோத்திரம.

பண்டேவிரவியவானந்தருத்திரப்பண்ணவனைக்
கண்டேன்கவலைக்கடல்கடந்தேன்கழியாமலநோய்
விண்டேன்விரிந்தெழுமானந்தவெள்ளம்வீழ்ந்ததுவாய்த்
தொண்டேபுரிந்துநின்றேன்துளங்கேனினிச்சூழ்வினைக்கே.

---

* விரும்பவே என்றும் பாடம்.

கருவைக்கலித்துறையந்தாதி.

கண்டேன்கருவைப்பெருமான்றிருவடி கண்டுபற்றிக்
கொண்டேன்புறச்சமையங்குறுகேன்புல்லர்கூட்டநண்ணேன்
பண்டேபுரிந்தபழவினையாவையும்பற்றறுத்துத்
தொண்டேபுரிவதல்லாற்பின்னைவேறுதொழிலில்லையே.

கருவைவெண்பாவந்தாதி.

இனியவமுதையிருங்களாவின்கட்
கனியைவளர்முக்கட்கரும்பைப் - பனியிமையக்
கொம்பிநெடுங்கண்டேன்கொடும்பாவமோசவிடாய்
வெம்புதயாகண்டிலேன்மேல்.

உயிர்க்குயிராய்க் காண்டலேயவ்வருளைத்தெரிவதென்றும், இறைவே தசகாரியத்துள் சிவரூபமென்றுங் கடாட்சித்ததற்குப் பிரமாணம்-

ஞானசாகரவெண்பா.

கண்ணின்றுகாணவுடன்காட்டுங்கதிரொளிபோ
லுண்ணின்றிறைவனுயிர்க்குயிராய்—நண்ணுமுயிர்க்
கூனேயிடமாயுணர்த்திடுவனென்றுணர்தற்
றூனேசிவரூபந்தான்.

தேவாரம.

நாறுபூங்கொன்றைமுடியார்தாமே நான்மறையோடாறங்கஞ்சொன்னார்தாமே, மாறிலாமேனியுடையார்தாமே மாமதியஞ்செஞ்சடைமேல்வைத்தார்தாமே, பாறினார்வெண்டலையிலுண்டார்தாமே பழனைபபதியாயுடையார்தாமே, தேறினார்சித்தத்திருந்தார்தாமே திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே.

விற்றூணொன்றில்லாதநல்கூர்ந்தான்காண் வியன்கச்சிக்கம்பன்காண்பிச்சையல்லான், மற்றூணொன்றில்லாதமாசதுரன்காண் மயானத்துமைந்தன்காண் மாசொன்றில்லாப், பொற்றூண்காண்மாமணிநற்குன

ரூபமாக்காண் பொய்யாதுபொழிலேழுந்தாங்கிநின்ற, சுற்றுஞ்சா
லைகளத்திகாணப்பட்டகணநாதன் காணவனென்கண்ணுளானே

பண்ணிலோசைபழத்தினிலின்சுவை
பெண்ணொடாணென்றுபேசற்கரியவன்
வண்ணமில்லிவடிவுவேறாயவன்
கண்ணிலுண்மணிகச்சியேகம்பனே.

சித்தாந்ததெரிசனம்

பதைதவிடவுண்டோபரமபதமாருயிர்கருச்
சிதைதவிடவுண்டோசெயல்.

சிவனன்றியாருயிர்கருச்சேட்டையிலையென்னில்
வெருபகன்றுய்த்தெளி.

சுவாமி! அத்திருவருட்பிரகாசத்திற் பிரியவறக்கலந்துநின்ற அப்பி
ரகாசத்தின் வலிமையைக்கொண்டு இயாவையினும் வியாபித்துநின்
றவனானே யாகையால் நானேதலைவனாய் நிற்கின்றேனென்பது
நுதமாக நானேதலைவனெனவெண்ணி நிற்றலே தசகாரியத்து
தெரிசனமென்றதற்குப் பிரமாணம்—

சிவானந்தபோதம

கேவலவல்லிருட்கீழ்ப்படத்தான்முழு
தேவதேயாத்துமதெரிசனமாகும்.

சித்தாந்ததெரிசனம.

எனைவிடவேறில்லையானேபரபபிரம
மெனவுணர்தறற்றெரிசனம்.

திருமேற்றளித்தோத்திரம.

காட்டாயெனைக்காட்டியபின்னெனைக்காட்டிநின்றே
கூட்டாயுன்றனொடெனைக்கூடிநற்கோதில்பேரின்
பூட்டாயெனையுன்னுளுறக்கிநீயோங்கிநில்லாச்
சேட்டார்மதில்சூழ்திருமேற்றளிதேவதேவே.

## திருவிடைமருதூர்மும்மணிக்கோவை.

திருவிடைமருதபொருவிடைப்பாக
மங்கைபங்ககங்கைநாதநின்
றெய்வத்திருவருள்கைவந்துகிடைத்தலின்
மாயப்படலங்கீறித்தூய
ஞானநாட்டம்பெற்றனன்பெற்றபின்
நின்பெருந்தன்மையுங்கண்டேன்காண்டலு
மென்னையுங்கண்டேன்பிறரையுங்கண்டேன்
நின்னிலையனைத்தினுங்கண்டேனென்னை
நின்னைக்காணுமாந்தர
தன்னையுங்காணுந்தன்மையோரே.

### கொடிக்கவி.

வாக்காலுமிக்கமனத்தாலுமெக்காலுந்
தாக்காவுணர்வரியதன்மையனை - நோக்கிப்
பிரித்தறிவுதம்மிற்பிரியாமைதானே
குறிக்குமருணல்கக்கொடி.

### உபதேசமாலை.

என்றுபிறந்தேனென்றுவளர்ந்தேனே
னென்றுதுயருற்றிறந்தேனே - னென்று
மழியாதசித்துருநானென்றேமகிழ்தல்
நழுவாதநின்றரிசனம்.

முன்னந் தத்துவசுத்திக்குக்கூறிய பிரமாணத்திலும் தத்துவத்தொழிலைக்காண்டல் சடமென்று தன்னை நீங்கி நான்மேலென்ற லருளினால் என்றும், சுவாமீ! அத்திருவருளே தலைமையுடையதன்றியெனக்காயோர் தலைமையைக் காணேனென்றதற்குப் பிரமாணம்—

### திருவருட்பயன்.

அருளிற்பெரியதகிலத்துவேண்டும்
பொருளிற்றலையிலதுபோல்.

### ஆனந்தருத்திரோசாபதிற்றுப்பத்தந்தாதி.

வேண்டுவார்வேட்டயாவும்பெற்றபின்விழைபடிநிற்ப
தாண்டருள்காஞ்சிமூதூரானந்தருத்திரேசன்
மாண்டருகமலபாதமற்றதுபெற்றுற்பின்றைக்
காண்டருமனமேவேட்டுக்கவாபொருள்வேறொன்றின்றே

### அஞ்ஞவதைப்பரணி.

பார்ப்பாற்பெரியவராரர்சிறியவராரர்பகையுறவார்
தோற்பாவையாட்டியருத்திரசொரூபானந்தனலதால.

### சிவபோகசாரம.

ஆர்பெரியராரர்சிறியராரர்பகைஞராருறவர்
ரோபெரியரானந்தச்சிற்சொரூபர் - பேர்பெரிய
ரெங்கெங்குந்தாமாயிருந்துசடசித்தனைத்து
மங்கங்கியற்றுவதருளல்.

### பஞ்சாக்கரத்திருக்குறள்.

அருளிற்கருளிலையென்றுய்ந்தேன்சிவாயநம.

இங்ஙனந்திருவருளே தலைமையுடையதெனக் கண்டுநிற்றலே நின்மல சொற்பனமென்றதற்குப் பிரமாணம்—

### பஞ்சாக்கரப்பஃறொடை.

செறியருளைக்கண்டடிமையாகக்கருதி
முறைமாறித்தொண்டுபடுஞ்சொற்பனத்தைச்சொல்லியே.

முன்னம் நின்மலசாக்கிரத்திற்குக்கூறிய பிரமாணத்திலும், தன்னைத்தலைவனெனக் கருதல் தலைமையருளேயெனக் கருதல் என்றும்.

மேலேழாவது முதற்குருவால் மெத்துமமதையில் நானே பிர மென்னல் நீங்கி என்றது, மெத்துமமதையில் நானே பிரமமென்கி ற தியாதின லதனை யாசாரியரால் நீங்கிநிற்பனென்ற தெங்ஙனமோ வெனில், ஆசிரியரானவர் முன்னமருட்டெரிவால் நானே தலைவனெ ன்கின்ற ஆன்மதெரிசனத்தை யருளினுக்கே தலைமையொழிய ஞா ச்சாயோர் தலைமையின்றேயென்று காட்டக்கண்டு அவ்வருட்டெ ரிவால் நானேதலைவனென நின்றதை நீங்கிநின்ற சீடனைநோக்கி இப்போது நீயென்னமாய் நிற்கின்றாய் கூறும்பிளாயென்று வின வ, அதற்கு ஒருசக்திபீனனுபுள்ளானை யொருசர்வ சக்தியுமுடைய பேய்பிடித்தா லதற்குள்ள வலிமைகளெல்லா மவனுக்குமுண்டா ய்ப் பெருநோக்கம் நோக்கியும் பெரும்பாரந்தாங்கியும் பெருநடை நடந்தும் பெருங்கூச்சற்கூவியு நிற்றன்முதலிய அனேக வலிமைக ளைக்கொண்டு நிற்பனதுபோல் சர்வக்கியத்துவத்தையுடைய திருவ ருளானது என்னுளிரண்டறக் கலந்திருத்தலின லத்திருவருள்செய்யும் பஞ்சகிருத்தியங்களை நானே பிரமமாய்நின்று செய்வனென்று முன்னர் நீங்கிநின்ற ஆணவத்தின் வாதனுபலத்தான் மிகுந்த மமதையுற்று அகங் கரித்துநின்று கூறினனுகையால்,மெத்துமமதையினனே பிரமமென்கிற திதனலென்றும்,இங்ஙனமாய் நிற்கின்றநிலையே நின்மலாவத்தையைந்த னுள் நின்மலசுழுத்தியென்று மிதனுட்டச காரியத்தினு ளொருகாரியமு மடங்கி நில்லாததிதியென்று மிதுலாபால்பமாகிய வைந்தனுள் மிகு ந்த மமதையினல் நானேபிரமமெனவெண்ணி நிற்றலால் அலாபமெ ன்றுங்கூறிப் பின்னரும் பேய்பிடியுண்டவனுக் கப்பேயின்வலிமையு ண்டானதுபோல வருளைப்பொருந்தின் நீயுமவ்வருளின்செய்கையைச் செய்வேனென்றையே கண் கை கால் வாய்இல்லாமல் குருடனுய் முட வனுயூமனுயுறைகின்ற வொருவனையக் கண் கை கால் வாயுள்ள பே யானது பிடித்தாலவனுக்குக் குருட்டுக் கண்டெருட்டுக் கண்ணுமோ பாரந்தாங்காமுடக்கை பாரந்தாங்குந் திடக்கையாமோ முடக்கால் நடைக்காலாமோ பேசாவாய்ப் பேசும்வாயாமோ ஆகாதே யதுபோல

ஒன்றுமிரண்டறக் கலந்துநிற்கின்ற நிர்விகாரியான பரமசிவமானது [illegible]னசகுணதாயுள்ள சுவானுபவத்தைமறைத்துநிற்கின்ற பாசங்களைநீக்கி யச் சுவானுபவத்தை விளக்கிவைப்பதற்காகத் தனது பஞ்சசத்திகளைக் கொண்டு பஞ்சகிருத்தியங்களைச் செய்யாமற் செய்யவதனாலீயுமப்பாச நீங்கிச் சுவானுபவியாய்ச் சுவானுபவமொன்றினையே யனுபவித்த [illegible]ரியரு யனுபவித்து நிற்பையத்தனையொழிய நீயப்பஞ் சகிருத்தி [illegible]ங்களுக்குரியனல்லவே யிதனை நீயுன்னனுபவத்தினன்றாய் நின்று [illegible] பொறுத்துப் பார்த்தறிந்து தேறிநானே பிரமமென்றதைநீங்கி [illegible]வன்றுகூற வங்ஙனமே கண்டறிந்து தேறியாசிரியரால தனைநீங்கி நிற்பதெனவறிக.

இதில் ஒருசத்தியினனாய் உள்ளானையொருசர்வசத்துவமுமுடை யபேயபிடித்தா லதற்குள்ள வலிமைகளெல்லா மவனுக்குமுண்டாய் நிற்பனதுபோலச் சாவக்கியத்துவத்தையுடைய திருவருளானதென்று மொன்றறக கலந்திருத்தலினாலத்திருவருள்செய்யும் பஞ்சகிருத்தியங் களைநானே பிரமமாய்நின்று செய்வேனென்றதற்குப் பிரமாணம்—

சிவப்பிரகாசம்.

புகலருமசுத்தர்தம்பால்பொருந்தியவலகையேபோ
லகிலமுமுணருமீசனருளையிமேவலாலே
சகலமுநிகழவேண்டுந்தலைவனேந்தொழிலுந்தானே
யிகலறவியற்றல்வேண்டுமென்றதுநன்றியின்றே.

முன்னர் நீங்கிநின்ற வாணவத்தின் வாதனைபலத்தான் மிகுந்த மமதையுற் றகங்கரித்து நின்று நானே பிரமமென்கின்ற நிலையே நின் மல சுழுத்தியென்றதற்குப் பிரமாணம்—

பஞ்சாக்கரப்பஃறொடை.

கொண்டவொளியதனாற்கண்ணுணருமாபோ
லுண்மைபொலியானுமளியதனலியாவுமறியத்தெளிவா
மருள்கருவியாமென்றகந்தையுறமுன்னமருண்
மருவத்தானடுவேயாகுமிருள்சுழுத்தி.

முன்னஞ் சுத்தவசுத்திக்குக் கூறிய பிரமாணத்திலும், தத்துவத் தொழிலைக் காண்டல் சடலமென்று தன்னை நீங்கி நான் மேலென்ற லருளினால் நான்மேலென்றல் பதத்தனுய்ச் செய்திபண்ணவே யெண் ணி முன்னம் நின்மல சாக்கிரத்திற்குக் கூறிய பிரமாணத்திலும், தன்னைத் தலைவனெனக்கருதல் தலைமையருளே யெனக்கருதல் பின்னாய புதிதா யருட்செயலைப்பெறவே யெண்ணல் என்றும்—

பேய் பிடியுண்டவனுக்குப் பேயின் வலிமையுண்டானது போல அருளைப் பொருந்தின நீயுமவ்வருளின் செய்கைச்செய்வே னென்ற தைக் கண்முதலாகிய ஏதுக்களைக்காட்டி மறுத்ததற்குப் பிரமாணம்—

சிவப்பிரகாசம்.

இன்றுநோக்குரைநடக்குமியல்பிலோர்க்கிணையவாய்ந்து
நின்றதோரலகைநேர்ந்தால்நிகழ்வதெனதுபோலுள்ளத்
தொன்றியவுணர்வுதம்பாலுள்ளதுநிகழ்த்துமீசன்
றன்றொழினடத்துமேனிதனக்கெனக் கொண்டோனே.

உன்னுளிரண்டறக் கலந்து நிற்கின்ற நிர்விகாரியான பரமசிவமான துனக்குள்ளதாயுள்ள சுவானுபவத்தை மறைத்து நிற்கின்ற பாசங்களை நீக்கி அச்சுவானுபவத்தை விளக்கி வைப்பதற்காகத் தனது பரா சத்திகளைக்கொண்டு பஞ்சகிருத்தியங்களைச் செய்யாமற் செய்வதனை யுமப்பா சங்க ணீங்கிச் சுவானுபவியாய்ச் சுவானுபவ மொன்றினையே யனுபவித்தற் குரியனாயனுபவித்து நிற்பையென்றதற்குப் பிரமாணம்-

சித்தாந்ததெரிசனம்.

ஐவகையசத்தியினாலைந்தொழிலுமாருயிர்க்காய்ச்
செய்யாமற்செய்யுஞ்சிவம்.

நிகழ்காலத்திரங்கல்.

சேரப்படைத்தமைபாரீர்சேரவளித்தமைபாரீர்
சேரத்துடைத்தமைபாரீர்செய்யாச்செயலினைப்பாரீர்.

## சிவஞானசித்தியார்.

செம்பிரதகுளிகையினாற்களிம்பற்றுப்பொன்னாய்ச் செம்பொனா டன்சேருமலர்சிதைந்தாற்சீவ, னம்பனாடன்கூடுமெனிற்பொன்போ லல்லனற்குளிகை போலவரனாகுமலம்போக்கி, யம்பொனடிக்கீழ வைபபனருங்களங்கமறுக்கு மக்குளிகைதானும்பொன்னாகாதாகு,மும் பர்பிரானாற்பத்தியாதிகளுக்குரிய னுயிர்தானுஞ்சிவானு பவமொன்றினா கருமுரித்தே.

சிவன்சீவனென்றிரண்டுஞ்சித்தொன்றாமென்னிற் சிவனருட்சித் திவனருளைச்சேருஞ்சித்தவன்றான், பவ[illegible]கடுபுத்திமுத்திபண்ணுஞ்சி த்திவற்றிற்படியுஞ் சித்தறிவிக்கபபடுஞ்சித்துமிவன்றா, னவன்றானே யறியுஞ்சித்தாதலினாலிரண்டுமேணைந்தாலு மொன்றாகாதனியமாயிருக் கு, மிவன்றானும்புத்தியுஞ்சித்திவனாமோ புத்தியிதுவசித்தென்றிடிலவ னுக்கிவனுமசித்தாமே.

மேலெட்டாவது முதற்குருவால் விளங்கறிவினென்றிச் செயலற் றென்கின்றதே, விளங்கறிவாவதே ததனிலொன்று வதெங்ஙனமொன் றியாசாரியராற் செயலறு வதெங்ஙனமென்னில்,ஆசாரியரானவர் முன் னமெத்தும்மமதையில் நானே பிரமமென்றதை நீக்க நீங்கிநின்ற சீடனை நோக்கியிப்போதுன்னனுபவமென்னமாயிருக்கின்றது கூறும்பிளாயெ ன்றுவினவச் சுவாமி! யடியேன் சுவாமிகளுடைய அனுக்கிரகத்தினாலே யிடையிலெய்திய மமதையினால் நானே பிரமமென்றதை நீங்கிநிற்கவே யிதற்கு முன்னமாய் நின்றவான்ம தெரிசனத்திற் சிவரூபமாகிய திருவ ருட் பிரகாசமான தென்னுட்பிறிவறத் தோன்றி யுயிர்க்குயிராய் விளக் கித் தானே தலைமையாய்நிற்கின்ற வனுபவத்தைச்சுவாமிகள் அடியேனு க்குத் தெரிசிப்பித்து தெய்வவனுபவமே யொழிய வேறேயோ ரனுப வமுமீண்டு நூதனமாய் விளங்கக் காணேனென்ன, நல்லது காணைவிட் டா லிப்போதாகிலும் நாம் விளங்கக்காட்டுகின்றோம் காண்டியென்று உனது கண்ணுக்குப் பிறிவறத்தோன்றி யொளிக்கொளியாய் விளக்கி

நிற்கின்ற வாதித்தப் பிரகாசமானது தானொன்றாயிருந்து மகண்டாகார
பரிபூரணமாய்ச் சர்வவான்மாக்கள் கண்ணுக்கும் பிறிவறத்தோன்றி
யொளிக்கொளியாய் விளக்கி நில்லாதோவென்ன சுவாமி! விளக்கிநிற
கின்றதென்றனன். இதுபோலவே யுன்னுட்பிறிவற நின்றுனக் குயிர்க
குயிராய் விளக்கித் தானே தலைமையாய் நிற்கின்ற திருவருளானதுந்
தானொன்றாயிருந்து மகண்டாகார பரிபூரணமாய்ச் சர்வான்மாக்களு
ள்ளும் பிறிவறநின் றுயிர்க்குயிராய் விளக்கிநில்லாதோவிதனை நீ நன்று
ட்நின்றுன்னிப்பொறுத்துப் பார்த்தறிந்து கூறும்பிளாயென்ன அப்போ
தங்ஙனமே நன்றாய்நின்றுன்னிப்பொறுத்துப்பார்த்தறிந்து சுவாமி! அத்
திருவருளான தென்னுட்பிறிவறத்தோன்றி யுயிர்க்குயிராய் விளக்கிநிற்
கின்றதுபோல வகண்டாகார பரிபூரணமாய்ச் சர்வான்மாக்களிடத்து
மவ்வாதித்தப் பிரகாசம்போலவே பிறிவற வுயிர்க்குயிராய் விளக்கிநிற்
கின்றதை சுவாமிகள் கடாட்சத்தினாலே அடியேனனுபவத்திலும் விள
ங்கக்கண்டேன் கண்டே னென்றதிசயித்து விண்ணப்பஞ்செய்தனன்
ஆகையால் இங்ஙனமுன்னிடத்திற்கண்டதுபோல எவ்விடத்தும் விள
ங்கக்காண்டலே விளங்கறிவாவதென்றும், இஃதே தசகாரியத்துட் சிவ
தெரிசனமென்றுங் கூறிப்பின்னருமாதித்தப பிரகாசமான தகண்டா
கார பரிபூரணமாய் நின்றுலகத்தை விளக்கிக்கொண்டு நிற்கக் கண்
ணான தவ்வாதித்தப் பிரகாசத்தி லிரண்டறக்கலந் தொன்றி நிற்பதொ
ழியத் தானவ்வுலகத்தை விளக்கமாட்டாதே யதுபோலவகண்டாகார
பரிபூரணமா யுயிர்க்குயிராய் நின்றுன்னைவிளக்கிக் கொண்டிருக்கின்ற
திருவருளிலே நீயுமிரண்டறக்கலந்தொன்றி நிற்பதொழிய வுன்னை
விளக்கிய திருவருளைப்போல நீ யொன்றை விளக்கஞ்செய்யமாட்டா
யே; ஆகையால், இங்ஙனமாகக்கண்டு ஆதித்தனைக்கூடிய விழியினைப்
போல அத்திருவருளி லிரண்டறக்கலந்தொன்றி நில்லென்று திருவுளம்
பற்றச் சுவாமீ! இதுவே சத்தியம், இதுவே சத்தியமென்று அங்ஙன
மே சம்மதித்துக்கொண்டு அவ்வகண்டாகார பரிபூரணமாய், உயிர்க்
குயிராய் நிற்கின்ற திருவருளில் ஆதித்தனைக்கலந்த விழியினைப்போல

இரண்டறக்கலந்தொன்றி நின்றனன்; இங்ஙனம் ஒன்றிநிற்றலே அத்
னிலொன்றுவதென்றும், இதுவே தசகாரியத்துட் சிவயோகமென்றுங்
கூறிய பின்னரும் இங்ஙனம் அகண்டாகார பரிபூரணமாய் விளங்கிய
திருவருளில் இரண்டறக்கலந்தொன்றிய நீ கயறற்ற ஊசல்போலவும்,
திரிவகன்ற கறங்குபோலவும், விசையற்ற பம்பரம்போலவும், தரையிற்
றங்கிய மணிநாபபோலவும், சுவரிலெழுதிய சித்திரம்போலவும் அசை
வற்று அத்திருவருளிலடங்கி நின்போதமுந் திருவருட்போதமேயாய்
உனது வலதழிந்து நின்று காணுமையுங் குற்றங்காண்டலுங் குற்றமா
மாதலான், மாட்சிமையாயுள்ள அத்திருவருட்காட்சியினிடத்து உனது
போதச்சேட்டையடங்க செயலற்று நிற்ற[illegible]யாயிற் றெழிலிறுதிதானே
சுகவுதயமாமாகையாலும், பதைப்பற்றிருக்கப் பரமசுகமாமாகையா
லும பேரானந்தமாகிய பெரும்போகத்தையே எய்துவையென்று திரு
வுளம்பற்ற, அங்ஙனந் திருவுளம்பற்றியபடியே தன்னனுபவத்திலும்
இது சத்தியமேயெனக்கண்டு அத்திருவருளில் அசைவின்றிச் செயல
ற்றடங்கி நிற்பனேயாம், அவ்வா[illegible] திருவருளிலசைவின்றிச் செயல
ற்றடங்கி நிற்றலே தசகாரியத்துள் ஆன்மசுத்தியென்றும், இவ்வான்ம
சுத்தியானது அச்சிவயோகத்தையுஞ் சிவதெரிசனத்தையு மின்றிடமை
யாமையால், இவ்வான்மசுத்திக்குள்ளாய்ச் சிவயோகமுஞ் சிவதெரிசன
முமடங்கி யவ்வான்மசுத்தியேயாய் நிற்கிறதென்றும், இங்ஙனந் தற்போ
தந் திருவருளிலடங்கி நிற்கின்ற நிலையே நின்மலாவத்தை ஐந்தனுள்
நின்மல துரியமென்றும், இந்நின்மல துரியத்திற் சிவயோகத்தையுஞ்
சிவதெரிசனத்தையுந் தன்னுளடக்கிய ஆன்மசுத்தி யொன்றுமொன்று
யே நிற்கிறதென்றும், இலாபாலாபங்களாகிய ஐந்தனுள் இந்நின்மலதுரி
யந் தற்போதந் திருவருளிலடங்கிச் செயலற்று நிற்றலால் இலாபமெ
ன்றும், திருவுளம்பற்றிச் சீடனைச் செயலறச்செய்கையால் இங்ஙனமா
கக்கண்டு ஆசாரியராற் செயலற்று நிற்பனெனவறிக.

இதில் சுவாமீ! அத்திருவருளானது என்னுட்பிறிவறத்தோன்றி
யுயிர்க்குயிராய் விளக்கி நிற்கின்றதுபோல, அகண்டாகாரபரிபூரணமா

ய்ச் சர்வான்மாக்களிடத்தும் அவ்வாதித்தப் பிரகாசம்போலவே நிறை வுற வுயிர்க்குயிராய் விளக்கி நிற்கின்றதைச் சுவாமிகள் கடாக்ஷத்தினாலே அடியேனனுபவத்திலும் விளங்கக்கண்டேன், கண்டேனென்றதை இங்ஙனம் உன்னிடத்திற் கண்டதுபோல எவ்விடத்தும் விளங்கக்கண்டலே தசகாரியத்துட் சிவதெரிசனமென்றதற்குப் பிரமாணம்—

## ஞானசாகரவெண்பா.

மன்னுமொளியாலேவளர்கதிரைக்காண்பதுபோ
லின்னருளாலுள்ளுணர்வாமீசனைக்கண்- டென்னிடம்போ
னீடுமரனெவ்விடத்துநின்றநிலைகாண்பதே
நாடுஞ்சிவதெரிசனம்.

## ஞானமணமாலை.

எங்கெங்கும்பார்த்தாலுமெய்யாலுமுள்ளுறவே
யங்கங்கும்பார்க்காமெய்யானோ-மங்காத
மெய்யனேயன்பருளமேவிப்புறவாழ்ந்திருக்கு
மையனேயீயலாதாரா,

## பொதுவானந்தக்களிப்பு,

எட்டுச்சரீரமுள்ளாண்டி - யிவ
னெங்கெங்கும்பார்த்தாலுமங்கிருப்பாண்டி
யெட்டுக்கலையறிவாண்டி - யவ
னெள்ளுக்குளெண்ணெய்போலெங்குமுள்ளாண்டி,

## பிரமகீதை,

எப்பொருள்கண்ணுமன்னியிலங்கிடுமறிவாமீச
னப்படிவிளங்குகின்றதறிதலேபரன்றனக்கு
மெய்ப்படுபூசைவேறோர்செயலிலலன்றுமெய்யே
யிப்படிஞானந்தன்னுவிறைஞ்சிடப்படுவானீசன்.

## சிவானுபூதிவிளக்கம்.

எல்லாமிறையருளென்றிப்படியேகாண்பதன்றி
நில்லாவிடமிதெனநீக்கநிலைகூடுமோ.

## தெய்வீக உலா.

இருசுடரும்-விண்ணும்பொலன்சக்ரவெற்புங்குலகிரியு
மண்ணும்புதையவரப்பண்ணி-யெண்ணிறந்த
யாரிடத்துமெவ்விடத்துமெப்போதுமுள்ளபிரா
னேரிடத்துத்தானுமொளித்திருப்ப.

## சிந்தனைவெண்பா.

சரவசரந்தோறுஞ்சாக்கியாய்நிற்பன்
பரமசிவனையப்படாதே-திரிபுரைக்கன்
றில்லாவிடமில்லையென்றதிருவாக்கு
நல்லாய்நமக்கரணநாடு.

## தேவாரம்.

உரைச்சேருமெண்பத்துநான்குநூறாயிரமாம்யோனிபேத
நிரைச்சேரப்படைத்தவற்றினுயிர்க்குயிராயங்கங்கேநின்றான்கோயில்
வரைச்சேருமுகின்முழவமயில்கள்பலநடமாடவண்டுபாட
விரைச்சேர்பொன்னிதழிதரமென்காந்தள்கையேற்குமிழலையாமே.

## சொரூபானந்தர் பிள்ளைத்தமிழ்.

உணவினிற்சுவைகள்போலுரைகளிற்பொருள்கள்போ லுடல்களுக்குயிர்கள்போலு-முயிரினுக்குயிருமாயுணர்வினுக்குணர்வுமா யொளியினுக்கொளியுமாயே, யிணையறத்திகழிவன்தேசிஞேரோகதே[illegible]த்தைநூறாயிரங்கூறிட்டமட்டில்லைகா-ணிரவிநீயுடுத்தோகைமினென்றெண்ணப்பட்டதுமெலாங், குணதிசைக்கண்ணெழுந்திரவினிற்குடதிசைக்கண்மறைந்திடுதியெங்கோன்-கூறுபத்துத்திசைக்கண்ணுமப்புறமுமே

குத்துவிட்டகல்வுருதே,யணுவினுக்கணுவுமாய்நின்றதன்மையை ... தம்புலியாடவே - யனுபவத்தன்றிவேறறியொணுவிறையுட ... யாடவாவே.

பாதவதம்.

கரமிலாப்பசுமுதல்கரங்கள்காலிலா
மரமுதலானதாபரங்களாட்வரும்
பரமெலாநின்றுயிர்போற்றியூட்டிடும்
பரமெலாம்பூண்டவனொருவன்பார்க்கிலே.

பதிபசுபாசவிளக்கம.

எந்தயோகிக்கெப்போதுமனதிலே
யுந்துஞானவொளியசைதன்னிய
மிந்தஞானமெங்கெங்கும்விளங்குமேற்
சந்தமுத்திதானுயேவிளங்குமால்

சித்தாந்ததெரிசனம.

எங்குமிலையென்பாரிதையடங்கொறுமறிவா
யெங்குமிருப்பானெம்மிறை.

எவ்வுயிர்க்கும்போதமிறையென்றறிதலே
செவ்வேசிவதரிசனம்.

ஆதித்தப்பிரகாசமான துலகத்தை விளக்கி நிற்கக் கண்டோமது அப்பிரகாசத்திற் கலந்தொன்றி நிற்பதொழியத் தானவ்வுலகத்தை விளக்கமாட்டாதே; அதுபோல உன்னை விளக்கிநிற்கின்ற திருவருளி லே நீயு மிரண்டறக்கலந்தொன்றி நிற்பதொழிய அத்திருவருளைப போல நீ யொன்றை விளக்கஞ்செய்யமாட்டாயே யென்றதற்குப பிர மாணம்—

## அம்பலவாணையர்தசகாரியம்.

உலகினைவிளக்கநிற்குமுயிர்க்கதிரொளியதாகி
யிலகியகண்ணைச்செய்திவிளக்கிடாபோலஞான
நிலவிமுயிரச்செய்திநிறுத்திடாவிதுவேயாகக்
குலவிடமுரியஞ்சுத்திகொள்ளுமேற்சிவமதாகும்.

## உபதேசப்பஃறொடை.

பொற்கதிரொளியிற்சென்றெங்குங்கண்ணொளித
னேராமொளியாய்த்தந்ததோபா[illegible]ன்ன
நிற்றவொளியன்றிநிருபிக்கிற்கண்ணொளியே
யின்றெனவேநன்றென்றிரங்கியே-பொன்றுத
செய்யகதிருஞ்சிறந்தபொருளுங்கதிர்சோ
ரய்யவிழிகோகதிர்க்கோதோன்றிடுவ-தையமற
சொலலெற்றிடினவ்விழிக்கரந்தானற்றவரோ
புல்லும்பிறவிபொடிபபொன்.

## மகத்துக்கள்வாக்கியம்.

காட்டொழியாக்கதிர்காணொழியாக்கண்கலந்ததன்மைப்
பூட்டொழியாச்சிவபோகமையோவெறும்பொய்யில்லை
யீட்டொழியாமலியானெனதென்றுமிடும்பைமல
வாட்டொழியேனருளம்மேயம்மேயுன்னடைக்கலமே.

௮. த்ரிணைகூடிய விழியினைப்போல அத்திருவருளில் இரண்டறகலந்தொன்றி நில்லென்று திருவுளம்பற்றியதற்குப் பிரமாணம்—

## சத்தியஞானபோதம்.

தாடலைபோன்றரன்றன்றேடொன்றாய்க்
கண்ணுங்கதிருங்கலந்ததோற்ற
மன்னமோக்கத்தமர்வனவுயிரோ.

## பதிபசுபாசவிளக்கம்.

கண்பலபொருளைப்பற்றிக்கதிரினையிழந்துநிற்குங்
கண்பலபொருளைப்பற்றாதாயிடிற்கதிரைக்கூடும
புண்புலன்பற்றியாவிபுனிதனைப்பிரிந்துநிற்கும்
புண்புலன்பற்றாதாயிற்புனிதனைச்சேருமன்றே.

ஆதவன்றன்னைப்பார்த்திட்டகிலத்தைப்பார்த்தபோது
மாதவனொளிமேலிட்டேயகிலந்தோன்றாதவாபோற்
சேதனச்சிவத்தைநோக்கிச்செகத்தினைநோக்குங்காலை
சேதனசிவமேலிட்டுச்செகமெலாமறைந்துபோமே.

## ஞானசாகரவெண்பா.

எரிபுகுநீரிலிருநாளைக்கஞ்சிநடு
வாரிபுகுமீன்போலவல்வினைகள் - சாரமல்
மன்னுருவமெய்ஞ்ஞானவாரிநடுவேபுதைந்து
நின்றுருவந்தோன்றுமனில்.

குறையவினிறைபுனலிற்கூடுங்கடாநி
நிறையநிறையநிறைய-மறையப்போ
மன்னிலைமைநல்லோரகம்புறமென்றுமலருமா
மன்னியதனுள்ளொடுங்குமாறு.

உணர்விலுணர்வொன்றியொடுங்குமாறேதென்
றுணருமுணர்விலொடுங்கி-யுணர்வு
மருவிமருவிவரிலுள்ளறிவை
விரவிவிரவிவிடு.

## சிவநெறிப்பிரகாசம்.

தேசிகனாருளிங்ஙன்செய்தவாறேசிதானந்தமேனியாஞ்சிவமேதோன்ற, வாசதுவாமலமாயையருங்கன்மமனைத்துமகன்றிடத்தான்சிவானுபவத்தழுந்தியதுவேயாய்க், காசமிலாவிழியருக்கனொளியினூடேகலந்துநின்றேமற்றொன்றுங்காணுவாபோ, லேசுறுமுற்பசுகரணஞ்சிவகரணமேயாயிசைந்திருந்துதேகாந்தத்தெங்கணுமாயிடுவர்.

## சிவஞானதீபம்.

பொறிபுலன்களானல்லேன்மனாதிகளானல்லேன் புகலரியகலாதிகளநானல்லேன்பொலிவா, ரறிகருவிநானல்லேனிவைசடமென்றிவற்றை யறிந்ததில்வேறாய்நின்றவறிவுயிரென்றறிக, நெறிதருதத்துவஞ்சடமாமலமென்றவற்றை நீயறிந்துநீங்குதற்குநின்னுயிர்க்குயிராய்ப, பிரிவறநின்றுணர்த்தியிடுமொளியருளாமூலகிற் பிறவுகுவிழிகொளியுநவுமிருங்கதிரொபபெனவே.

## தணிகைப்புராணம்.

இருண்மலப்பந்தநீங்கியிருமையுங்கான்றசோற்றி
னருவருத்தகலத்தள்ளியருளொடுமளவளாவிப
பருதியிற்கலந்துநிற்கும்பாயொளிவிழியேபோலத்
தெருளுறக்கலந்துநிற்குஞ்செல்வர்தம்மடமுமுண்டால்.

## பஞ்சாக்கரப்பஃறொடை.

நாமே-யறிவாமோகண்ணருக்கனொளியைவிட்டுப்
பிறியாநிலைதேறப்பேசி.

அகண்டாகார பரிபூரணமாய், உயிர்க்குயிராய் நிற்கின்ற திருவருளில் இரண்டறக் கலந்தொன்றி நிற்றலே தசகாரியத்துட் சிவயோகமெனறதற்குப் பிரமாணம்—

## சித்தாந்ததெரிசனம்.

அதுவுதுவென்றெண்ணுதறிவோடறிவாய்ப்
பதிதல்சிவயோகம்பார்.

## உண்மைநெறிவிளக்கம்.

எப்பொருள்வந்துற்றிடினுமப்பொருளைப்பார்த்தங் கெய்துமுயிரினைக்கண்டிங்கவ்வுயிர்க்குமேலா, மொப்பிலருள்கண்டுசிவத்துண்மை கண்டிங் குற்றதெல்லாமதனாலேபற்றிநோக்கித், தப்பினைசெய்வதுமது

வேதினைபடுமதுதானே தருமுணர்வுபுசிப்புமதுதானேயாகு, மெய்பொருளுமசைவில்லையெனவந்தப்பொருளோ டிசைவதுவேசிவபோகமெனுமிறைவன்மொழியே.

பஞ்சாக்கரத்திருக்குறள்.

அருணின்றபூரணமேயானேன்சிவாயநம.

உபதேசமாலை.

அன்னியமேயில்லையெனக்காருயிராமீசனென
வுன்னியவன்றனுகயோகஞ்செய்-தென்னினைவு
மற்றவனேயானேனென்றானந்ததெய்தலரு
ளுற்றவனேயோகமெனவோர்.

எண்ணுஞ்சிவயோகமான்மியத்தையென்சொல்கேன்
மண்ணுலகும்விண்ணுலகும்வந்திறைஞ்சி-யண்ணவென்
றோலமிடுஞ்சிவமாயோரிமைப்புநிற்பையெனிற்
காலனுங்கைகூப்பிநிற்பன்காண.

சிவானந்தபோதம.

அற்புதவருளாலத்துவிதம்பெறச்
சிற்பரத்திசைவ்துசிவயோகமாகும்.

அகண்டாகாரபரிபூரணமாய் விளங்கிய திருவருளில் இரண்டறக்கலந்தொன்றி,கயறற்ற ஆசலமுதலிய வுவமைகளைப்போலு மசைவற்று அத்திருவருளிலடங்கி நின்போதமுந் திருவருட்போதமேயாய் உனதுவலதழிந்து நில்லென்றதற்குப் பிரமாணம்—

சிவஞானதீபம்.

உகைத்தாடுகயிறுகண்டவூசற்போலுமுலவாதுதிரிவொழிந்தகறங்குபோலு, மிகைத்தாடுவிசையறுபம்பரமேபோலும் விளங்கொலிசேர்தாழ்ந்தமணிநாவேபோலுஞ், செகத்தாயசித்திரத்தினிலைமைபோலுஞ் சிவபோகத்தடங்கியுயிர்ச்செயலொன்றின்றி,யகத்தாயநம்போதப்பற்று நீங்கியசைவறநிற்பதுபரமானந்தமாமே.

### சிவஞானப்பிரகாசவெண்பா

ஊமைமணிபோலொடுங்கிச்சிவமான
தாமனத்தராக்கினாற்சுகங்கொடுக்கும்-வாய்மையிலாச்
சழுக்கர்களிந்நூல்போதாதாருஞ்சமைய
வழக்கேடவர்க்கமையுமால்.

### சித்தாந்ததெரிசனம்.

உள்ளமசையாதயர்தருவன்போனிற்கில்
வள்ளலுருவாஞெய்மதி.

### சிவானந்தமாலை.

மித்தையுடற்கட்டழித்துமெய்யருளாய்மெய்யொ[illegible]ரு
தத்துவமுங்கேவலமுஞ்சார்வகற்றிச்-சுத்தத்
தனியாகித்தானும்போய்த்தற்பரமாய்வீட்டிற
செனியானிநசத்தியம்.

### துகளறுபோதம்.

விண்ணிற்கதிரோன்விளங்கியிருந்ததுபோற்
கண்ணிற்கதிரோன்கலந்ததுபோ-னண்ணிய
பணைநிறைவினீயும்பதியையேயாகி
லுணையிறந்திட்டொன்றுவையுற்று.

நீங்காதபேரறிவினீங்காமைகண்டுநீ
நீங்காமனின்றபடிநின்றதனி-னீங்காம
னின்றுவிடலன்றேதானின்மலன்றன்பேரறிவி
லொன்றுபடலென்றறிநீயுற்று.

### ஞானசாகரவெண்பா.

தன்னையறியத்தனக்கறிவாய்நின்றறிவு
தன்னையறிந்துதனித்தடங்கித்-தன்னறிவு
மன்னறிவேயாகிவலதழியநின்றுவிடி-
லன்னிலையேசுத்தநிலையாம்.

காணமையுங் குற்றங் காண்டலுங் குற்றமாதலான், மாட்சிமை யுடைய அத்திருவருட்காட்சியினிடத்து உனது போதச்சேட்டை அடங்க செயலற்று நில்லென்றதற்குப் பிரமாணம்—

ஆனந்தருத்திரேசரந்தாதி.

கட்டியில்லதோரானந்தப்பெருக்கொளிவீட்டிடைக்குடியேற்றி
பட்டிகொண்டருளானந்தருத்திரேசத்தமரறவேனைக்
கட்டிசொல்லலுங்காணுமுதிருத்தலுங்கரிசெனக்கண்டாங்கே
மாட்சிகொண்டவககாட்சியின்யாத்தனன்வளர்ந்ததுபெருமையே.

திருவாசகம்.

உணடொராண்பொருளென்றுணர்வார்க்கெலாம்
பெண்ணொடாணலியென்றறியொண்கிலை
தொண்டனேற்குள்ளவாவந்துதோன்றினாய்
கண்ணாற்கண்டிலேனென்னகண்மாயமே.

மோகவதைப்பரணி.

காணத்தோணிற்பிறமபொருளைக்காணக்கிடையாதவைகையறிவே
யுணப்படினுமறுகண்டுகொளும்வழியில்லையெனும்படிநீமகிழே.

விருவெண்பா.

காண்பானுங்காட்டுவதுங்காண்பதுவுநீத்துண்மை
காணபாகணன்முத்திகாணுர்கள்-காண்பானுங்
காட்டுவதுங்காண்பதுவுந்தண்டடந்தைச்சம்பந்தன்
யாட்டுநெறிவாராதவர்.

ஏகம்பவாணரானந்தக்களிப்பு.

ஆனந்தமானந்தந்தோழி-கம்ப
ராடுந்திருவிளையாட்டினைப்பார்க்க
ஞானமுஞேயப்பொருளும்-பற்று
ஞாதாவுமில்லையென்பார்க்கரியாராம்

ஞானமுஞேயப்பொருளும்-பற்று
ஞாதாவுமாய்ப்பகுப்பார்க்குமெட்டாராம்.

## வீட்டுநெறிப்பால்.

உண்டில்லையென்னுமுணர்வையறிந்தக்கா
லுண்டில்லையாகுஞ்சிவம்.

## திருமந்திரம்.

கரியட்டகையன்கபாலங்கையேந்தி
யெரியுமிளம்பிறைசூடுமெம்மானை
யரியன்பெரியனென்றாட்பட்டதல்லாற்
கரியன்கொல்சேயன்கொல்காண்கின்றிலேனே.

## தேவாரம்.

முன்னமவனுடையநாமங்கேட்டாள் மூர்த்தியவனிருக்குமவண்ணங்கேட்டாள், பின்னையவனுடையவாரூர்கேட்டாள் பெயர்த்துமவனுக்கேபிச்சியானாள், அன்னையையுமத்தனையுமன்றேநீத்தாளகன்றா ளகலிடத்தாராசாரத்தைத், தன்னைமறந்தாடன்னாமங்கெட்டா டலைப்பட்டாணங்கைதலைவன்றாளே.

தொழிலிறுதிதானே சுகவுதையமாமென்றதற்கும், பதைப்பற்றிருக்கை பரமசுகமாமென்றதற்கும் பிரமாணம்—

## ஒழுவிலொடுக்கம்.

தொழிலிறுதிதானேசுகவுதையமென்றாற்
றொழிலுதையந்துக்கமெனச்சொல்லோந்-தொழில்செயினும்
வந்திப்போகம்போலவுண்டுடுத்தன்மாத்திரமாய்ச்
சிந்திப்பாரைப்பேணிச்செய்.

துகளறுபோதம்.

எல்லாங்கழன்றவிடமேசுகமென்று
சொல்லாவெர்கலந்ததூயோர்கள் - நல்லாய்கேள்
நின்றபடி தானேநிலையாய்நிலையதனி
னின்றுவிடுதானேகிநீ.

ஒழுவிலொடுக்கம்.

போதம்பதைப்பறவேபூரணமாம்பூரணமும்
போதம்பதைத்தளவேபொய்யாகு-மீது
விழித்திமைப்பாநின்றால்வெளியசைந்தாற்காற்றும்
பழக்கமதைச்சாட்சியைப்போற்பார்.

முன்னங் தருக்கங்களை விலிவித்தற்குக் கூறிய பிரமாணத்திலும், பதைபபற்றிருக்கபபரமசுகமென்ரு-லதைப்பெற்றிருக்கவறியாமல் ..றும், கயிறற்ற ஊசல் முதலிய வுவமைகளைப்போலும் அசைவற... கூறிய பிரமாணத்திலும் " அகத்தாயநம்போதபபற்றுநீங்கி யசைவற நிறபதுபரமானந்தமாமே." என்றும் திருவருளி லசைவின்றிச செயலற றடங்கிநிற்றலே தசகாரியத்துள் ஆன்மசுத்தியென்றதற்குப்பிரமாணம்-

உண்மைநெறிவிளக்கம்.

பாயிருணீங்கிஞானந்தனைக்காண்டலான்மரூப
நீயுநின்செயலொன்றின்றிநிற்றலேதரிசனந்தான்
போயிவன்றன்மைகெட்டுப்பொருளிற்போயங்குத்தோன்று
தாயிடலான்மசுத்தியருணூலின்விதித்தவாறே.

சத்தியஞானபோதம்.

கருவிக்கான்மாக்கத்தாகருது
மறிவுக்கரனேயாயிற்கத்தா
கருவியையருளாற்கழற்றியவாவி
யருளாய்நிற்கிலவனிவனே.

## பதிபசுபாசவிளக்கம்.

தத்துவாதீதந்தன்னிற்சகசவாணவமலந்தா
னுற்றிடுமிதற்குச்சாக்கிராமெனலுயிர்க்குரூபஞ்
சிற்றுருநானேயென்றுதேறலேதெரிசனந்தான்
முற்றுணர்சன்முன்னர்முகிழ்த்திடாதடங்கல்சுத்தி.

## தேவாரம்.

எம்பிரானென்றதேகொண்டென்னுளேபுகுந்துநின்றிங்
கெம்பிரானாட்டவாடி யென்னுளேயுழிதர்வேனை
யெம்பிரானென்னைப்பின்னைத்தன்னுளேகரக்குமென்று
மெம்பிரானென்னினல்லாலென்செய்கேனேழையேனே.

முன்ன முனது வலதழிய நில்லென்றதற்குக் கூறிய பிரமாணத்திலும—

தன்னையறியத்தனக்கறிவாய்நின்றறிவு
தன்னையறிந்துதனித்தடங்கித்-தன்னறிவு
மன்னறிவேயாகிவலதழிய நின்றுவிடி
லன்னிலையேசுத்தநிலையாம்.

முன்ன மாதித்தப் பிரகாசமான துலகத்தை விளக்கி நிற்கக் கண்ணானது அப்பிரகாசத்திற் கலந்தொன்றி நிற்பதொழியத் தானவ்வுலகத்தை விளக்கமாட்டாதே யென்றதற்குக் கூறிய பிரமாணத்திலும—

உலகினைவிளக்காநிற்குமுயர்கதிரொளியதாகி
யிலகியகண்ணைச்செய்திவிளக்கிடாபோலஞான
நிலவிடுமுயிர்ச்செய்திநிறுத்திடாததுவேயாகக
குலவிடறரியஞ்சுத்திகொள்ளும்.

இங்ஙனந் தற்போதந் திருவருளிலடங்கி நிற்கின்ற நிலையே நின்மலதுரியமென்றதற்குப் பிரமாணம்—

என்றொளியின்செய்கையின்றியெங்கேனுங்கட்செயல்தா
னென்றுமோதேறிநீயுன்னெண்ணவன்றேதான்.

பேரறிவாயாதாரம்பேசுநிறைபொருளோ
டோரறிவாய்த்தானொழிதலொண்டுரியம்.

முன்னந் தத்துவசுத்திக்குக்கூறிய பிரமாணத்திலும்—

தத்துவத்தொழிலைக்கண்டல்சடமென்றல்தன்னைநீக்க
லத்திறனன்மேலென்றலருளிறைவன்மேலென்றல்
பத்தனாயருளாய்ச்செய்திபண்ணவேயெனணிநீங்கிச்
சித்தருளதுவாய்ப்போதல்.

முன்னம் நின்மலசாக்கிரத்திற்குக் கூறிய பிரமாணத்திலும்—

தன்னைத்தலைவனெனக்கருதல்தலைமையருளேயெனக்கருதல்
பின்னாயபுதிதாயருட்செயலைப்பெறவேயெண்ணலைநீக்கி
மன்னித்திருவருளாய்ப்போதல்.

முன் ஆன்மசுத்திக்குக் கூறிய பிரமாணத்திலும்—

உலகினைவிளக்காநிற்குமுயிர்க்கதிரொளியதாகி
யிலகியகண்ணைச்செய்திவிளக்கிடாபோலஞான
நிலவிநுமுயிரச்செய்திநிறுத்திடாததுவேயாகக்
குலவிடுதுரியம்.

மேல் ஒன்பதாவதும் முதற்குருவா லோங்கின்பத்தொத்தது வாய்த்தானறவாழ்ந்திருப்பனென்றது ஒங்கின்பமாவதேது ஆசாரியரால அதனிலொத்தது வாய்த்தானறவாழ்ந்திருப்பனென்ற தெங்ஙனமென்னில், ஆசாரியரானவர் தன்றால் விளங்கறிவினென்றிச் செயலற்று ஆன்மசுத்திப்பட்டு நிற்கின்ற சீடனைநோக்கி யிப்போது உன்செயலறுதியிலுனக்கு விளங்கி நிற்கின்ற அநுபவமாதியாது? அதனைக் கூறும்பிளாயென்று வினவ, அதற்குச் சுவாமிகள் முன்னங் காணமையுங் குற்றங்காண்டலுங் குற்றமாமாகையான் மாட்சிமையாயுள்ள திருவருட்காட்சியினிடத்துனது போதச்சேட்டையடங்கச் செயலற்றசைவின்றி நிற்பையாயிற் தொழிலிறுதிதானே சுகவுதையமாமாகையாலும், பதைப்பற்றிருக்கப் பரமசுகமாகையாலும், பேரானந்தமாகிய பெரும்போகத்தையே எய்துவையென்று திருவுளம்பற்றியபடியே அடியேனும்

போதச்சேட்டையற்று அத்திருவருளில் அசைவற நிற்றலால் அப்பெருமபோகமாகிய பேரின்பானுபவமே சுவாமிகள் கடாட்சத்தின்படியே யகண்டாகார பரிபூரணமாய்ப் பொங்கித்ததும்பி யெங்குந் தானேதானாய் நிறைந்தோங்கி நிற்கின்றதென்று மட்டுப்படாத பெருமகிழ்ச்சியோடு விண்ணப்பஞ்செய்தனன். ஆகையால் இதுவே செயலிறுதியில் ஓங்கிநிற்கின்ற பேரின்பமாவதென்றும், இங்ஙனம் அகண்டாகார பரிபூரணமாயோங்கிநிற்கின்ற பேரின்பமாகிய பரமசிவத்தினிடத்து ஞாதுரு ஞானஞேயமென்னுந் திரிபிடியுமடங்க வாதித்தலைக்கலந்த கண்ணும, அப்பினைக்கலந்த உப்பும், நீரினைப்பொருந்திய நிழலும், நெருப்பினைப்பொருந்திய அயமும், இந்தனத்தொன்றிய அங்கியும், எரியினிற்குறுகிய சலமும், வானினைப்பொருந்திய வளியும், மலரினைபபொருந்திய மணமும், திவாகரற்கூடிய உடுவும், தேனினிற்செறிந்த இரதமும் போலவும், தாடலைபோலவும், காறலைபோலவும் ஒன்றுபட்டொத்து, அப்பேரின்பமாகிய பரமசிவமேயாய் நீயென்பது ஓரணுவளவுந் தோன்றாமல் ஆறானது கடலினிடத்தடங்கி யதீதப்பட்டு நிற்கின்ற தன்மைபோலவும், உப்பான தப்பினிடத்தடங்கி யதீதபபட்டு நிற்கின்ற தன்மைபோலவும் நீயும் அப்பேரின்பமாகிய பரமசிவத்தடங்கி யதீதப்பட்டுப் பேரின்பாதீதமாய் வாழ்ந்துகொண்டிருவென்று அனுககிரகித்துப் பின்னரும் இங்ஙனம் வாழ்ந்துகொண்டிருப்பையாயின் என்செயலே தன்செயலாகக்கொண்டு உனது உயிருடலாய் நின்றுண்டுமுறங்கியு நடந்து முனது நானாவிதபோகங்களையுந் தன்னதாகத்துய்த்துப பிறிவற நின்றுன்னைத் தானாக்கிக்கொண்டு நீயே தானாயோங்கி நிற்பன். அப பேரானந்தச் சொரூபியாகிய பரமசிவனென்று திருவுளம்பற்ற அங்ஙனமே அப்பேரின்பத்துளடங்கி யொன்றுபட்டொத்துப் பேரின்பாதீதமாய் வாழ்ந்துகொண்டிருப்பன். ஆகையால் ஆசாரியரால் பேரின்பதொத்தது வாய்த் தானறவாழ்ந்திருப்பனென்றது இங்ஙனமென்றும், இங்ஙனம் பேரின்பாதீதமாய் வாழ்ந்துகொண்டிருத்தலே தசகாரியத்துள் சிவபோகமென்றும், இதற்கு மேலாயோர் முத்தியின்றிஃதே முத்தி

முடிவென்றும், இங்ஙனம் பேரின்பத்துளதீதப்பட்டுப் பேரின்பாதீத மாய் வாழ்ந்துகொண்டிருத்தலே நின்மலாவத்தை யைந்தனுள் நின்மல துரியாதீதமென்றும், இந்நின்மலதுரியாதீதத்துட் சிவபோகமென்றும், தானென்றுயே நிற்கிறதென்றும், இலாபாலாபமாகிய வைந்தனுள் இந் நின்மலதுரியாதீதம் பேரின்பமாகிய பரமசிவத்துளதீதபட்டு நிற்ற லால் இலாபமென்றும் ஞானசாரியர் உண்மையுபதேசத்தை யனுக்கிர கம்பண்ணிச் சீடனைப் பேரின்பவெள்ளத் தழுந்தச்செய்கையால் அங் ஙனமேயறிந்து ஆசாரியராற் பேரின்பத்தொத்ததுவாய்த் தானறவாழ் ந்திருப்பனென வறிக.

இங்ஙனம் ஞானசாரியராற் பஞ்சபாசங்களை நீங்கிப் பேரின்பமா கிய பரமசிவத்தில் இரண்டறக்கலந்து அபபரமசிவமேயாய்த் தானென் பது ஓரணுவளவுந்தோன்றுமல் வாழ்ந்துகொண்டிருக்கின்ற பரமுத்த னுககு அப்பரமசிவத்தைப்போலச் சருவஞானமுஞ் சருவகிருத்தியமு முண்டாகாதோவென்னி லுண்டாகாது. அஃதேனென்னில், ஆன்மா வுக்களவிறந்த சத்திகளுண்டு; அச்சத்திகளை யாணவசத்திகள் மறைத் துககொண்டு நிற்கும். அவைகளிற் சிவானுபூதியைத் தெரியாமல் மறைத்துககொண்டு நின்ற ஆணவசத்திமாத்திரம் ஞானசாரியர் அனு க்கிரகத்தினுலே நீக்க நீங்கிய ஆன்மா அச்சிவானுபூதி யொன்றினையே பெற்றின்பாதீதமாய் நிற்ப னித்தனையேயன்றி மற்றைய சத்திகளும விலகிச் சருவஞானமுஞ் சருவகிருத்தியமுமுண்டாக வேண்டுமேயா கில் மந்திரங்களினுலும், மருந்துகளினுலும், மணிகளினுலும், இரதகு ளிகைகளினுலும், சிவாற்சனையினுலும், தவங்களினுலும், அட்டாங்க யோகங்கள் முதலிய வின்னு மற்று முளவாகின்ற நானுவிதவுபாயங்க ளினுலும் அவையவைகட்கு நூல்களிற் கூறியபடியே அனுட்டித்துவந் தால் அவைகளும் விலகிச் சர்வஞானமுஞ் சர்வகிருத்தியமு மெளிதாக வேயுண்டாம். அங்ஙனம் எளிதாக வுண்டாமாயினும், அவைகளனைத் தும் விகற்பஞானமேயன்றித் தற்போதம்போய்ச் சும்மாவிருந்தனுபவி க்கின்ற இன்பாதீதமாகிய அரிய நிருவிகற்பஞானமாகாதென்றும், இங்

ஙனமாயுள்ள இன்பாதீதமாகிய அரிய நிருவிகற்பசமாதியினுறைந்து அச்சிவமேயாய் ஒன்றுபட்டிருக்கின்ற முத்தனுக்கு முப்பொருளு நிததிடமென்று முத்தியினு மூன்றுபொருளு மூன்றும முதலாய் நிற்குமென்றும் ஆகமங்கள் கூறுகின்ற தென்னையெனில், காண்பானுங் காட்டுவதுங் காண்பதுமா யனுபவிக்கிற சீவன்முத்தனுக்குக் கூறியதேயன்றி யத்திரிபுடியும்போய்த் தற்போதமு மடங்கிப் பாவனாதீதப்பட்டு இன்பாதீதமாய் நிற்கின்ற பரமுத்தனுக்குக் கூறியதன்று, அப்பரமுத்தனுக்கு முத்தியினிடத்து அம்மும்முதலு மோர்முதலாய் நிற்குமெனபதே ஆகமசித்தாந்தமென்றும், இங்ஙனமாயுள்ள முத்தியை நாற்பாதமாகக்கூறுதலேயன்றிப பரமுத்தியைச்சேர்த்து ஐந்தாகக் கூறினரில்லையே, நின்மலாவத்தையை ஐந்தாகக்கூறுதலேயன்றிப் பரமுத்திக்கோர் அவத்தைகூட்டி யாருமக்கூறினரில்லையேயாகையால், அங்ஙனம முத்தியென்பதொன்றாயிருக்க, ஈண்டு சீவன்முத்தி பரமுத்தியென் றிருவகையாகக்கூறிய தென்னையெனில், உறக்கமென்பதொன்றேயாயினுந் தற்போதம்போய் நிர்விகற்பியாய் ஓரமளியிற்கிடந்துறங்குவோன் உறக்கத்திற்கு நடந்துறங்குவோன் உறக்கமேடவல்களினடக்கும்போதோரிதமுஞ்சமநிலத்தினடக்கும்போதோர் இதமுமாய்த் தற்போதங்கொண்டு விகற்பித்து நின்றாற்போல முத்தியென்பது மொன்றேயாயினுந் தற்போதம்போய் நிர்விகாரியாய் நின்றனுபவிக்கின்ற பரமுத்தனனுபவத்தினிற்குச் சிவன்முத்தனனுபவம் பாசங்களை நீக்கித் தன்னொடொன்றுபடுத்திய பரமசிவத்தை யின்று நன்றாய்ப் பூசித்தோமென்றும், நன்றாய்ப் பூசியாமற்போனோமென்றுந் தற்போதங்கொண்டு இதாகிதங்களுற்றுப் போதவிகற்பமாய் நிற்கையால் அப்போதவிகற்பங்கொண்டு நின்ற சீவன்முத்த னனுபவத்தினைப் பிரித்துக்காட்டுதற்காக ஈண்டு இருவகையாகக் கூறியதென்றுங் கண்டுகொள்க.

இதில் போதச்சேட்டையற்று அத்திருவருளில் அசைவற நிற்றலால், அப்பெரும்போகமாகிய பேரின்பானுபவமே சுவாமிகள் கடா

ட்ரத்தின்படியே அகண்டாகார பரிபூரணமாய்ப் பொங்கித்ததும்பி யெங்குந் தானேதானாய் நிறைந்தோங்கி நிற்கின்றதென்று மட்டுப்படாத பெருமகிழ்ச்சியோடு விண்ணப்பஞ் செய்ததற்குப் பிரமாணம்—

பொதுவானந்தக்களிப்பு.

அன்றென்றுமாமென்றுமுண்டோ-வுனக்
கானந்தம்வேண்டிலறிவாகிச்சற்றே
நின்றுற்றெரியுமெனவே-மல
நீக்கியெம்மாதிநிகழ்த்தினன்றோழி.

சிவபோகசாரம்.

இற்றைவரைக்கரணத்தோடிணங்கிநின்றனையே
யிற்றைவரைச்சென்மமெடுத்தனையே-யிற்றைவரைத்
துன்பவெள்ளத்துள்ளாழ்ந்தனையேயீதறமல
லின்பவெள்ளத்துள்ளேயிரு.

ஒழியாதபேரின்பத்துள்ளாயுலகில்
விழியாதிருந்துவிடவே-யழியாத
பூரணசெங்கமலபொற்பாததென்கமலை
யாரணநாயேற்கருள்.

திருவம்மானை.

தத்துவமானதுமித்தைகாணம்மானை
தானந்தமானதேயானந்தமம்மானை.

பரமஞானவிளக்கம்.

அறிவிலாத்தத்துவங்களனைத்தையுமடங்கநீக்கி
யறிபவன்றன்னைக்காணிலகண்டமாந்துரியமாகு
மறியுமவ்வறிவுதானாயறிவிக்குமறிவோடொன்றி
லறிவொடானந்தமாகியசிதமாய்நின்றதன்றே.

## துகளறுபோதம்.

பையவழுந்திப்பதைப்பற்றபின்னுனக்குத்
துய்யசுகப்பிரபைதோன்றுமே-யையனே
கண்டாய்சிவபூமிகாட்சியறக்கலந்து
கொண்டாளவன்கண்டாய்குறி.

கண்டவிடமெல்லாங்கருணைக்கடலமுத
மொண்டுகொளலாய்நிறைந்தமுத்திதனை-யண்டா
திருமாலயனறியாத்தேசிகனூபாதந்
தருமாமடியேற்குத்தான்.

எங்குநிறைந்தானந்தமெல்லாமமிழ்ந்திமிகப
பொங்கிககரைபுரண்டுபூரணமா-யங்கு
வளைத்தவுலகுயிரும்வாய்த்தசுகமா
டளத்திற்புகுந்ததுபோலாம.

அண்ணலுமானந்தமருளுமானந்தமுயி
ரெண்ணிலாவானந்தமெவ்வுலகும்-பண்ணி
யளித்தழிப்பாராதியமாருமானந்தங்
களிததுவேயெப்போதுங்காண்.

## தாயுமானசுவாமிகள்பாடல்.

காகமுறவுகலந்துண்ணக்கண்டீரகண்டாகாரசிவ
போகமெனுமபேரின்பவெள்ளம்பொங்கித்ததும்பிப்பூரணமா
யேகவுருவாய்க்கிடக்குதையோவின்புற்றிடநாமினியெடுத்த
தேகமவிழுமுன்னருந்துதற்குச்சேரவாருஞ்செகத்தீரோ,

## பதிபசுபாசவிளக்கம்.

செறிவாகுமலமற்றுமாயையற்றுத்திரிவிதமாங்கன்மமலத்திரளுமற்றுப, பிறிவாகுங்குணமற்றுக்குறியுமற்றுப்பேதாபேதங்களற்றுபபேச்சுமற்று, வறியாமை யறிவற்றங் கனந்தகோடி யதவர்போ லெழுகின்றபனையுமற்றுக், குறியாத வானந்தக் குரவனின்னைக் கும்பிட்டே னொருபிறவிபின்பிட்டேனே.

தத்துவங்களாறாறும் பின்னிட்டப்பாற்றத்துவாதீதமாந் தன்னைக் கண்டு, பற்றொன்றுமில்லாத பனையைக்கண்டு பரிந்துபரிந் துள்ளுருகி யதிலொடுங்கி, வெற்றவெறுமானந்தவுருவங்கண்டுவிழையாமல்விழைந் தபபால்வெளியைக்கண்டு, குற்றமெலா மறநீத்தங் கறிவாய்நின்று குமபிட்டேனென்பிறவிபின்பிட்டேனே.

## ஞானசாகரவெண்பா.

காயம்பொறிகரணங்காலிவற்றிலொன்றாந்
நேயமறநீங்கிநினைவொழிந்து-போயவிழ
நின்றநிலைநோவகிராலம்பமாகிவிடி
லன்றுபரமானந்தமாம்.

உண்ணீர்முகந்தகுடமுண்ணிறைந்துபின்மறைந்து
தண்ணீரிலுள்ளிருக்குந்தன்மைபோ-லுண்ணீர்மை
யுள்ளும்புறம்புமொருதன்மையாமின்ப
வெள்ளமபரந்துவிடின்.

## சிவானுபூதிவிளக்கம்.

அசசமறந்தெல்லாமருளாகத்தந்தருளி
வசசவருளானந்தவாரிதியிலொன்றினமே.

பொய்யெங்கேமெய்யெங்கேபோதம்பொறியெங்கே
மையெங்கேயெங்குமலாந்தசுகமொழிந்தே.

## சிற்றம்பலநாடிகள்வெண்பா.

மாயைமலமெங்கேமடிந்ததோமாயைதனி
லாயசகமெங்கேயழிந்ததோ-காயமதிற்
றங்குபுருடனெங்கேசச்சிதானந்தவெள்ள
மெங்குமிகக்கோத்ததே.

## செல்காலத்திரங்கல்.

உள்ளும்புறம்புமொழியாதவானந்த
வெள்ளத்தழுந்தாமல்வீணெடுநாட்போக்கினமே.

எண்ணரியபேரின்பமிப்போதுபோலமுன்னு
நண்ணியருந்தாமல்நாளவமேபோக்கினமே.

கண்டவிடமெல்லாங்கலந்தபரமசுகங்
கொண்டிருந்துவாழாநாட்கொன்னேகழிந்தனமே.

அகண்டாகார பரிபூரணமா யோங்கி நிற்கின்ற பேரின்பமாகிய பரமசிவமென்றதற்குப்பிரமாணம்—

சிவநனெ வெண்பா.

எல்லாவுயிர்கட்குமின்பங்கொடுத்தலா
லெல்லார்க்குஞ்சிவனே பெயெண்ணலா-லெல்லாஞ்
சிவனுருவேயாமாற்றெவிட்டாபபேரின்பஞ்
சிவனுருவமென்றுணர்விற்றேர்.

மெய்ஞ்ஞானவிலயம்

வருமபோமென்பனவுமின்றியென்றுமொருபடித்தாய் வாருதிசை துவத்தைவளைந்தருந்தும்வெளியா, யிரும்போகலலோமரமோவெறு ளெஞ்சங் கனன்மேவிட்டமெழுகாயுருகவின்பவெள்ளமாருங், கரும்போ கண்டோசினிச்சருக்கரையோதேனோ கனியமுதோவெனருசிதருங்க ருத்தவிழ்ந்தோருணர்வ, ரரும்போகன்மணங்காட்டுங்காமசரங்கள் பறிவாளோவபக்குவர்கடோவன்னிலைதான்விளங்கும்.

சிவஞானசித்தியார்.

இரும்பைக்காந்தம்வலித்தாற்போலியைந்தங்குயிரை யிரும்பைச்செய்வதுபோலிவனைத்தானாக்கி, யரும்பித்திந்தனத்தையனலழிப்பதுபோன்மலத்தையறுத்தமலனப்பணைந்தவுப்பேபோலணைத்து, விரும்பிப்பொன்னினைக்குளிகையொளிப்பதுபோலடக்கி மேளித்துத்தானெல்லாம்வேதிப்பானாகிக், கரும்பைத்தேனைப்பாலைக்கனியமுதைக் கண்டைக் கட்டியையொத்திருப்பனந்தமுத்தியினிற்கலந்தே.

## திருவருட்பயன்.

இன்பதனையெய்துவார்க்கீயுமவர்க்குருப
மின்பகனமாதலினாலில்.

## சிவபோகசாரம்.

என்னையறிவென்றானென்னறிவிலானந்தங்
கன்னைச்சிவமென்றான்சந்ததமு-மென்னையுன்னைப்
பாராமறைத்ததுவேபாசமென்றானிம்மூன்று
மாராய்ந்தவர்மூத்தாராம்.

## துகளறுபோதம்.

பெற்றருந்தியின்பம்பிறர்க்குமருத்தினரோ
வுற்றபரமானந்தமுள்ளதோ-மற்றதுதா
னென்றுநீகேட்கிலிறையுருவமானந்த
மன்றிவேறொன்றில்லையாம்.

## சிற்றம்பலநாடிகள்கலித்துறை.

ஆனந்தமேசெவியம்புயத்தாளிணையங்கைகளு
மானந்தமேதிருக்கண்ணுஞ்செவ்வாயருள்மேனியெல்லா
மானந்தமேதிருச்சிற்றம்பலவரருட்பொருளு
மானந்தமேயவன்றில்லையுங்காழியுமானந்தமே.

## ஆனந்தருத்திரேசர்வண்டுவிடுதூது.

மறைக்கோவணத்தான்மறைச்சிலம்பான்மாவான்
மறைக்கோவறிவரியமாண்பா-னெறிகொ
ளுயிருக்குயிரானுயிரறிவுக்கெட்டான்
பயிலுயிர்க்கேயின்பருளும்பண்பான்-பயிலுநர்க்குக்
கண்ணுமானந்தங்கனிவாயுமானந்தம்
வண்ணவதனமுமானந்தந்-தண்ணறல்சேர்
வேணியுமானந்தம்வியன்மார்புமானந்தம்

பூணுமானந்தம்புயங்கரந்தா-ஞுணுடையு
மானந்தமானந்தமானந்தமானந்த
மானந்தமெவ்வுறுப்புமானந்த-மானந்தன்
காஞ்சியுமானந்தமாய்க்காணநிற்பானத்தகைய
வாஞ்சைசயுறுமானந்தவள்ளறன்.

திருவாசகம்.

கடலினுணுய்நக்கிபாங்குன்கருணைக்கடலினுள்ளம்
விடலறியேனைவிடுதிகண்டாய்விடலில்லடியா
ருடலிலமேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
மடலின்மட்டேமணியேயமுதேயென்மதுவெள்ளமே.

திருவிசைப்பா.

ஒளிவளர்விளக்கேயுலப்பிலாவொன்றேவுணர்வுசூழ்கடந்ததோரு ணர்வே, தெளிவளர்பளிங்கின்றிரண்மணிக்குன்றேசித்தத்துட்டித்திக் கு ந்தேனே, யளிபவருள்ளத்தானந்தக்கனியேயம்பரமாடரங்காக, வெ ளிவளர்தெய்வக்கூத்துகந்தாயைத்தொண்டனேன்விளம்புமாவிளம்பே.

சித்தாந்ததெரிசனம்.

இன்பமயனீசனின்பம்விளைத்தலாற்
சம்புவெனும்பேருந்தகும்.

திருமந்திரம்.

ஒன்றுகண்டீருலகுக்கொருதெய்வமு
மொன்றுகண்டீருலகுக்குயிராவது
நன்றுகண்டீரினிநமசிவாயப்பழந்
தின்றுகண்டேற்கிதுதித்தித்தவாறே.

பரமசிவத்தினிடத்து ஞாதுரு ஞானஞேய மென்னுந் திரிபுடியு மடங்க ஆதித்தனைக் கலந்த கண் முதலிய வுவமைகளைப் போலவுந் தாடலைபோலவுங் காறலைபோலவு மொன்றுபட் டொத்து அப்பேரின்பமாகிய பரமசிவமேயாய் நிற்றற்குப் பிரமாணம்—

சிவஞானசித்தியார்.

சன்மார்க்கஞ்சகலகலை புராணவேதசாத்திரங்கள் சமையங்கடாம் பலவுமுணர்ந்து, பன்மார்க்கபபொருள்பலவுங்கீழாகமேலாம் பதிபசு பாசந்தெரித்துப் பரசிவனைக்காட்டு, நன்மார்க்கஞானத்தைநாடிஞான ஞேயமொடு ஞாதிருவுநாடாவண்ணம், பின்மார்க்கச்சிவனுடனும்பெ ற்றிஞானப் பெருமையுடையோர்சிவனைப்பெறுவர்காணே.

சிவநெறிப்பிரகாசம்.

ஞானமுடன்ஞேயஞாதருவென்னுமூன்று நாடாமற்றுனதுவாய் நண்ணியிடருனே, யூனமிலாவுன்மனைக்குமேலானமுத்தியுற்றதுநின்மல துரியாதீதமெனவுரைப்ப, ரானவிதேசுத்தமாமுத்தியாகுமன்றிவேறுரை க்குமுத்தியவைகளெல்லா, மீனமாமுத்தியதுதன்னையெல்லாமியம்புவா மறிந்ததனையிசையாவாறே.

வருகாலத்திரங்கல்.

காண்பானுங்காட்டுவதுங்காட்சியுமாய்நின்றவந்த
வீண்பாவம்போயதுவாய்மேவுநாளெந்நாளோ.

காஞ்சிப்புராணம்.

உணர்பொருளுமுணர்வானுமுணர்வுமெனும்பகுப்பொழியாதொ ழிந்துபானுப், புணர்விழியுநீர்நிழலுந்தீயிரும்பும்புனலுவரும்பருதிமீனுந் துணையவிரண்டறுகலப்பினெம்முடனுய்ப்பேரின்பந் துய்த்துவாழ்வா, ரிணர்விரைத்தமலர்க்கோதாயவர்வடிவேயெமக்கினியகோயிலாமால்.

வாரணசியையாவாக்கியம்.

பொன்னினைவிழுங்குமொரு ரசகுளிகைபோலவும் பூதவிருடனை விழுங்கும்-பூரணசந்திரோதையம்போலவுஞ் சந்திரன் பொன்னொளி யையுள்விழுங்கு, மன்னுமாயிரகோடி சூரியர்கள்போலவும் வல்லிரும் பினைவிழுங்குமண்டுகனல்போலவு முப்பினை விழுங்கிடும்வாரிநீரைப் போலவு, மென்னைநீயுள்விழுங்கிக்கொண்டிருப்பதுவு மெக்காலமெக்

காலமென்-றேழையேனழுதழுதுவாடவுந்திருவுள்ளமின்னமுமிரங்கவிலையோ, வுன்னருளிரங்குநா ளெந்தநாளாலடியிலுறைகின்ற பரசெய்வமே யொன்றாகியானந்தவொளியாகியென்னுயிர்க்குயிரானபரமசிவமே

## சிவபோகசாரம்.

இந்தனத்திலங்கியெரியுறுநீர்தேனிரதங்
கந்தமலர்ப்போதுவான்காலொளிகண்-சந்தரமு
மததுவிதமாவதுபோலான்மாவுமீசனுமாய்
முத்தியிலேநிற்குமுறை.

## துகளறுபோதம்.

சாற்றிலதற்குவமைதாடலைபோற்சன்மார்க்க
வேற்றுவிதிபலவும்வேண்டாவே-போற்றரிய
நித்தனேசுத்தனேநித்தியானந்தனே
யத்தனேமுத்தனேயாங்கு.

## திருவருட்பயன்.

தாடலைபோற்கூடியவைதானிகழாவேற்றின்பக்
கூடலைநீயேகமெனக்கொள்

## திருமெய்ஞ்ஞானப்பயன்.

மாறுனும்வேறுனும்வாடானுநாடானும்
போறுனுந்தன்முதலின்பும்.

## வருகாலத்திரங்கல்.

ஆடலையேகாட்டியெமதாடலொழித்தாண்டான்பாற்
றாடலைபோற்கூடித்தழைக்குநாளெந்நாளோ.

## பதிபசுபாசவிளக்கம்.

அறிவறியாமையையகண்டவாருயி
ரறிவறியாதபேரருளைக்கூடிடிற்
பிறிவறியாதவெம்பிரானுட்கொண்டுபோய்ப்
பிறிவறியாவகைவைக்கும்பின்னையே.

சராசரபபொருள்கடோறுந்தங்கிநின்றவற்றின்றன்மை
விராவுதலின்றியொன்றாய்விமலமாய்விண்ணிறைய்தாய்ப்
பாராபரவெளியாய்நீங்காப்பாசசாலங்கடந்த
நிராமயச்சிவந்தானாகிநிற்பதுஞானநிட்டை.

அறிவிலறிவாயகண்டி தமாயனந்தானந்தமய மாகிச்
செறியும்பரமசிவந்தன்னைத்தன்னுட்கண் டதியானித்தாக்
கறவையருந்தப்பால்சுரக்குங்காலமேனும்நடைப்பிடிபபோர்
பிறவிக்கடலைக்கடந்தோர்களவரோயுலகிற்பெரியோரே.

சிந்தனைவெண்பா.

புத்தகப்பேயேயிந்தச்சிற்றிலைக்கீழ்ப்போதென்ற
சித்தன்மொழியிந்நூற்குச்சித்தாந்தம்-வைத்த
பரப்பெல்லாநீத்துப்பழையசிவத்தொன்றா
யிருப்பன்றோவாவிக்கியல்.

சித்தாந்ததெரிசனம்.

உள்ளமொடுங்கியுரையொடுங்கியானந்த
வெள்ளத்தழுந்திநிற்குமேல்.
சித்திரத்தையொத்துச்சிவோகமெனச்சிந்தித்தா
லத்தனுருநீயாவையால்.

மான்குறிக்கும்வேடனவண்மன்னன்வரவறியான்
மான்றாணைநின்றதைமானும்.

திருமெய்ஞ்ஞானப்பயன்.

எப்பொருளுமெப்பயனுமியாவுமகன்றொன்றாய
வப்பொருட்கேயாவரவர்.

நீயென்பது ஓரணுவளவுந்தோன்றாமல் ஆறானது கடலினிடத்
தடங்கி அதீதப்பட்டு நிற்கின்ற தன்மை போலவும், உப்பானது அப்பி
னிடத்தடங்கி அதீதப்பட்டு நிற்கின்ற தன்மைபோலவும், நீயும் அப்பே

ரின்பமாகிய பரமசிவத்தடங்கி அதீதப்பட்டுப் பேரின்பாதீதமாய் வாழ்ந்துகொண்டிருவென்று அனுக்கிரகித்ததற்குப் பிரமாணம்—

பஞ்சாக்கரப்பஃறொடை.

பொன்றுடரிந்திரனும்பூமகனுமாதவனு
மென்றறிமென்னுளுமேநாடித்-துன்னாத
வேதமுடிவில்விளங்குமொளியுயிரின்
போதமுடிவிற்பொருந்துமொளி.

பஞ்சமலக்கழற்றி.

வினையிழக்கிற்கேவலமாமென்றறிந்துநின்றா
டனைபிறவாவுண்மைதலைப்பட்—டெனையழியக்
கைவந்தாலன்றோகடற்காழிவள்ளலே
பொய்வந்தவாணவந்தான்போம்.

இளசையந்தாதி.

என்னைமுழுக்கவிழுங்கவிடத்தே
தன்னைவிளக்கியசாவிளசைக்கோன்
மன்னமுதத்தினைவானவருண்ண
உன்னுவிடத்தினையுண்டமையென்னே.

பஞ்சாக்கரவந்தாதி.

உளநின்றுகாணின்றெளிப்பனங்கேயெனுளமொளிப்பின்
வெளிநின்றுகாணப்படுவன்விரிகடற்றெள்ளமிழ்துந்
தெளிவுண்டதேறலுங்கைப்பவென்சிந்தையெலாமினிப்பன்
பளகறுத்தாண்டபஞ்சாக்கரநாதபசுபதியே.

அத்துவிதக்கலிவெண்பா.

வேறுபொருளில்லையென்றான்வெற்றவெறுமானந்தப்
பேறிலுனைப்போக்கென்றுபேசினா-றாறுகடற்
சென்றொடுங்குமாபோற்சிவத்திலொடுங்கென்றா
னென்றுமறவொன்றாயுருகென்றான்.

## சிவஞானசித்தியார்

பன்னிறங்களவைகாட்டும்படிகம்போலுள்ளம்பலபுலன்களிறங் காட்டும்பரிசுபார்த்திட், டின்னிறங்களென்னிறமன்றென்றுதன்றனை யிினிறங்கண்டருளினலின்னிறத்தின்வேறாய்ப், பொய்ந்நிறைவைம்புல னிறங்கள் பொய்யெனமெய்கண்டான் பொருந்திடுவன்சிவத்தினொடும் போதான்பின்னை, முன்னிறைநீர்சிறைமுறியமுடுகியோடி முந்நீர்சோந் தன்னீராய்ப்பின்னீங்காமுறைபோல்.

## சிவஞானபோதம்.

சிறைசெய்யநின்றசெழும்புனலினுள்ளஞ்
சிறைசெய்புலனுணர்விற்றீர்ந்து —சிறைவிட்
டலைகடலிற்சென்றேடுங்குமாறுபோன்மீளா
துலைவிலரன்பாதத்தையுற்று.

## ஞானமணமாலை.

உன்றேதேடாதேயூன்றியொருமந்திரங்கள்
பன்றேசாத்திரங்கள்பாடாதே—யென்றும்
மப்பாருமுப்புவமையானசுகாதீதத்தே
யெப்போதுஞ்சும்மாவிரு.

## பதிபசுபாசவிளக்கம்.

ஆங்கறியாமையுமறிவுநீங்கவே
யோங்கியவறிவொடுமொன்றுபட்டவண்
டேங்குபேரானந்தத்தூக்கம்வந்துறின்
மூங்கைகாண்கனவெனமுத்திகாண்டியே.

## சிவாகமக்கச்சிமாலை.

மண்ணுதிநாதவரையுருநாமன்றெனமதியா
கண்ணுவறிவுருநாமெனக்கண்டுமெய்ஞ்ஞானத்தினு
ணுண்ணுடியொன்றிரண்டென்றைதுறங்குவதன்றியுன்னை
கண்ணுலறியப்படுமோகவிக்கச்சியேகம்பனே

ஆதாரமாறையுங்கண்டாங்ககன்றிட்டருளுருவாய்
மீதானயோகசசிவானந்தமேலிடவீழ்ந்ததுவாய்ப்
பாதாதிகேசங்கடோன்றுதவண்ணம்பதிந்திருக்க
நீதான்றிருக்கடைக்கண்பார்நெடுங்கச்சியேகம்பனே.

## நிராமயவந்தாதி.

போதவொழுக்கமென்றுபொன்றுங்கொல்சம்பந்த
நாதனேயுள்ளபடிநாட்டுவாய்ப்—பேதா
யறிந்தவறிவெல்லாநாமன்றறிந்திட்டாங்கே
செறிந்தறிவாய்நிற்கிலிறுந்தேர்.

## உண்மைவிளக்கம்.

ஆதவன்றன்சந்நிதியிலம்புலியினார்சோதி
பேதமறநிற்கின்றபெற்றிபோ-லோதாந்தத்
தண்ணறிகுவடியிலான்மாவணைந்தின்பக்
கண்ணிலழுந்தியிடுங்காண்.

## கூவபுராணம்.

சென்றுபுல்குறுவதன்றிச்சேர்ந்துநிற்பதுவுமன்றி
யொன்றிரணடென்பதன்றியுணர்வுசுட்டொழித்துநீயா
யென்றுநின்றிடுமென்றன்னையிருந்தவாகாண்டியென்று
துன்றுதன்னிலைசொல்லாதசொல்லினாலுணர்த்திக்காட்டி.

## துகளறுபோதம்.

நின்றபரமானந்தநேயனுபவித்தங்
கொன்றுபடவுள்ளுருகியோவாம—லென்று
மதுவுண்டவண்டுபோன்மாளாச்சுகத்தைப்
புதிதுண்டிருந்துவிடிப்போது.

ஒன்றுஞ்சுகவடிவுக்குள்ளானதம்பிரா
னன்றியொருபொருளுமாகாதே—நின்றழுந்திச்
சொல்லரியவின்பச்சுகத்துக்கதீதமாய்
நில்லவன்றானுமேநிலை.

இந்தச்சுகத்தையினிநீவிழியாம
லந்தவறிவிலயர்ந்ததுபோற்—றெந்தமறப்
போதாயிதுவேசுகாதீதம்பொய்யற்றோர்க்
காதாரமானவருள்.

## ஞானசாகரவெண்பா.

கட்டவிழ்த்தவஞ்சக்கருவிகளிற்கூடாமல்
விட்டவத்தைதன்னிலும்போல்வீழாமற்-சுட்டுணர்வு
தோயாமலின்பச்சுகமாயானந்தமய
மேயாகிநிற்பதேவீடு.

முன்னமேமூன்றுமுதலுமுளதாயிருக்கத்
துன்னியொருபொருளுந்தோன்றுமன்—மன்னியபி
மாதிமலம்போலநிறையானந்தத்தான்மறைந்து
பேதமறநிற்பதுதான்பேறு.

## சத்தியஞானபோதம்.

அறிவான்போந்தவறிவைவிழுங்கிக்
குறைகடல்விழுங்கியகுறுமுனுமானச்
செறிவான்சிவனெனத்தேறுதிநீயே.
புவிமுதனாதமீறெனப்பொலிந்த
தத்துவசாலங்கடபபான்கடந்திட்
டறிவறியாமையாங்காங்ககன்று
ரருளொடுங்கூடியரன்பாலொன்று
யருளையுமறந்தபின்னறியகிலேனே.

வேழமயின்றவெள்ளிலங்கனியோ
வழல்வாய்ப்பட்டவாடைகொல்லோ
வாய்மூலைவையாமாய்ந்தவான்கன்றோ
நனையவிழ்கொன்றைநாதனதருளா
லகக்காழற்றவடியவர்மாண்பே.

## திருமந்திரம்.

அண்ணலிருப்பிடமாருமறிகில
ரண்ணலிருப்பிடமாய்ந்துகொள்வார்களுக்
கண்ணலழிவின்றியுள்ளேயமர்ந்திடு
மண்ணலைக்காணிலவனிவனாகுமே.

கோவணங்கும்படி கோவணமாகிப்பி
னாவணங்கும்படி நந்தியருள்செய்தான்
றேவணங்கோமினிச்சித்தந்தெளிந்தனம்
போய்வணங்கும்பொருளாயிருந்தோமே.

ஒழிந்தேன்பிறவியுறவென்னும்பாசங்
கழிந்தேன்கடவுளுநானுமொன்றானே
னழிந்தாங்கினிவருமாக்கமுவேண்டேன்
செழுஞ்சார்புடையசிவனைக்கண்டேனே.

## சுருதிசாரம்.

உளதிலதாம்பொருண்முடிவினிறுபொருளையான்கண்டே
னுளதிலதேபொருளெனனுமுணர்விலிகள்காண்பாரோ
வளவிலாப்பொருண்முடிவைக்கண்டேனின்னருட்கண்ணா
லளவிலாவானந்தம்பெற்றேன்யார்பெறுவாரோ.

## பொன்வண்ணத்தந்தாதி.

பொன்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணமேனிபொலிந்திலங்கு
மின்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணம்வீழ்சடைவெள்ளிக்குன்றந்
தன்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணமால்விடைதன்னைக்கண்ட
வென்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணமாகியவீசனுக்கே.

## அற்புதத்திருவந்தாதி.

அன்றுந்திருவுருவங்காணாதேயாட்பட்டேன்
இன்றுந்திருவுருவங்காண்கிலே-னென்றுந்தான்
எவ்வுருவோனும்பிரானென்பார்கட்கென்னுரைக்கேன்
எவ்வுருவோநின்னுருவமேது.

## ஆனந்தருத்திரோசரந்தாதி.

உய்ந்தாமென்றமரர்தொழுதாடநோக்கமுறுத்தவர்கள்வேட்டவா
முதவுநாதன், பந்தாடுபூண்முலையாள்பாகத்தண்ணல்பண்பினர்சூழான
ந்தருத்திரோசன், பிந்தாதவிருண்மலமுமியானும்பிந்தப்பெயர்த்துமலம
றுத்தாங்குத்திருகினேனை, முந்தாதவகைதெரித்துத்தான்முன்னாகிமுடி
யாதவின்பவெள்ளத்தழுத்தினானே.

## சிதம்பரபுராணம்.

கலாதிநீங்கினகுணங்களுமிறந்தனகரணங்கடணிசாய்ந்த
புலாதிமாறினமொழிமுதலாயினபுறங்கொடுத்தனவப்பா
ணிலாவுகேவலமொருவினதிருவருணெறிதரப்பரமாகிக்
குலாவுபூரணத்தொனறியொன்றுதவோர்குறிக்கருங்கிலையானான்.

## பட்டினத்தார்[illegible]க்கியம்.

அட்டாங்கயோகமுமாதாரமாறுமவத்தையைந்தும்
விட்டேகிபபோனவெளிதனிலேவியனென்றுகண்டேன்
மட்டாகியானந்தத்தேனூறலுண்டுமதிமயங்கி
யெட்டாதபேரின்பமென்னைவிழுங்கியிருக்கின்றதே.

## சிவவாக்கியம்.

அருகிருத்திவரவழைத்துமலமறுத்தபின்புபே ரைம்புலன்களன்புநீ
க்கியந்தஞானபூவிலே,குருவுரைத்தமவுனமானவாசகக்கொழுந்துளேகூ
டிநானுமவனுமொன்றுகோலமானவினிமைதா, னொருவருக்குநவிலொ
ணாதிங்குள்ளம்விட்டகன்றிடா, துருவுமல்லதருவுமல்லதுளதுமல்லதில
துமல்ல, திருவருக்குநெஞ்சுளேதெரிந்திருப்பதன்றியே யின்னதென்று
சொல்லவொன்றுளெல்லைபட்டவல்லவே.

மவுனமானமந்திரத்தின்வாசியேறியூடுபோய்
வானெலாம்பரந்தசோதிமண்டபம்புகுந்தபின்
னவனுநானுமெய்முயங்கியனுபவிக்குமளவிலே
யவனுமில்லைநானுமில்லையாருமில்லையானதே.

சித்தராந்தாதி.

அன்னையையிங்கென்னைபாளுடையாளையரவிந்தத்துப்
பொன்னையடைந்துய்துமென்றுகொண்டேசென்றுபுக்கதற்பின்
றன்னையுங்காண்கின்றிலேன்சரணம்புயத்தாள்பணிந்த
வென்னையுங்காண்கின்றிலேனென்னமாயம்வெளிப்பட்டதே.

பஞ்சாக்கரத்திருக்குறள்.

ஆனந்தபூரணமேயானேன்சிவாயநம.
உற்றசுகாதீதத்தேயுற்றேன்சிவாயநம.

உண்மைவிளக்கம.

வாழ்ந்தேனருட்கடலேவற்றுப்பவக்கடலில்
வீழ்ந்தேயலையாமன்மேதினியிற்-சூழ்ந்துவிடா
வெண்ணைச்சுவேதவனமெய்கண்டநாதனே
யுண்மைத்தவப்பயனேயுற்று.

இங்ஙனம் பேரின்பாதீகமாய் வாழ்ந்துகொண்டிருப்பையாயின், நின்செயலே தன்செயலாகக்கொண்டு உனது உயிருடலாய் நின்று உண்டும் உறங்கியும் நடந்தும் உனது நாநாவிதபோகங்களையுந் தன்னதாகத் துய்த்துப பிரிவற நின்று, உன்னைத் தானாக்கிக்கொண்டு நீயே தானாய்த் துங்கிநிற்பன்; அப்பேரானந்தச்சொரூபியாகிய பரமசிவனென்று திருவுளம்பற்ற, அங்ஙனமே நின்று வாழ்ந்துகொண்டிருத்தலே தசகாரியத்துட் சிவபோகமென்றதற்குப் பிரமாணம்—

சிவானந்தபோதம்.

அருந்துமானந்தவவசமேலீடு
பொருந்தியநிலைசிவபோகமதாகும்.

உண்மைநெறிவிளக்கம.

பாதகங்கள்செய்திடினுங்கொலைகளவுகள்ளுப்பயின்றிடினுநெறியல்லாநெறிபயிற்றிலறினுஞ், சாதிநெறிதப்பிடினுந்தவறுகள்வந்திடினுந் தனக்கெனவோர்செயலற்றுத்தானதுவாய்நிற்கி, லுதனவனுடலுயிராயுண்டுறங்கிநடந்துநானாபோகங்களையுந்தானாகச்செய்து, பேதமறநின்றிவனைத்தானாக்கிவிடுவன்பெருகுசிவபோகமெனப்பேசுநெறியிதுவே.

## திருவாசகம்.

தந்ததுன்றன்னைக்கொண்டதென்றன்னைச்சங்கராவார்கொலோசதுரர், அந்தமொன்றில்லாவானந்தம்பெற்றேனியாதுநீபெற்றதொன்றென்பாற், சிந்தையேகோயில்கொண்ட வெம்பெருமான்றிருப்பெருந்துறையுறைசிவனே, யெந்தையேயீசாவுடலிடங்கொண்டாயானிதற்கிலனோர்கைம்மாறே.

## அம்பலவாணையாதசகாரியம்.

நின்றிடாவுடறனித்துநீங்கிடவான்மாக்கூடா
வொன்றிடான்சிவனுடற்கணொத்திடுபவராரொன்னிற்
பொன்றிடாதுயிரைத்தன்பாற்புகுத்துவானுடற்குவேறாய்ச்
சென்றிடான்சிவனொத்துநிற்குமாபோலநிற்பன்.

மலவிருளகற்றவாய்த்தசகலைபதுகொடுத்துககன்மப்
பலமுளதருத்தித்தியமறைப்பதுபறித்துஞான
நிலையுளேமடிமையாகநின்றிடுமென்றேயென்றூற்
கலைமுதலுடைமையாகக்கைக்கொளல்வியப்போகாணில்.

## கர்ணாமிர்தம.

கடலிலேகலந்தவாறுகதியிடைப்பின்வந்தாலுங்
கடலினுட்டன்மைகுன்றாக்கதையெனநினைக்கண்டோரு
முடலிடையிருந்துமுண்டுமுறங்கியுமுலாவிநின்றுந்
திடனுடைஞானியன்றோதிருப்புலிவனத்துளானே.

## தேவாரம்.

புலன்களைப்போகநீக்கிப்புந்தியையொருங்கவைத்து
வினங்களைப்போகநின்றுவிரண்டையுநீக்கியொன்றாய்
மலங்களைமாற்றவல்லார்மனத்திடைப்போகமாகிச்
சினங்களைக்களைவர்போலுந்திருப்பயற்றூரனாரோ.

உறுகயிறூசல்போலவொன்றுவிட்டொன்றுபற்றி
மறுகயிறூசல்போலவந்துவந்துலவுநெஞ்சம்
பெறுகயிறூசல்போலப்பிறைபுல்குசடையாய்பாதத்
தறுகயிறூசலானேனதிகைவீரட்டனீரே.

வெள்ளநீர்ச்சடையனார்தாம்வினவுவார்போலவந்தெ
னுள்ளமேபுகுந்துநின்றார்க்குறங்குநான்புடைகள்போந்து
கள்ளரோபுகுந்தீரென்னக்கலந்துதானோக்கிநக்கு
வெள்ளரோமென்றுநின்றார்விளங்கிளம்பிறையனாரே,

## உபதேசமாலை.

நானேசிவன்சிவனேநானென்றுநாடிவெறுந்
தானாகிநின்றநிலைதானன்றோ-வானாப
பவசலதிநீந்திவரும்பண்புடையமானா
சிவபோகமென்றேதெளி.

## சிந்தாநததெரிசனம்.

உவனிவனென்றுன்னாதங்கொன்றாகிப்போதல்
சிவபோகமென்றேதெளி.

## சத்தியஞானபோதம்,

சுகமயமீசன்சொரூபங்காண்ட
லச்சுகமயனையாங்காங்கறித
லவனேதானாயச்சுகத்தழுந்த
லிவனவனாகியின்பமேலிடுத
லுருவந்தெரிசனம்யோகம்போகமே.

## பதிபசுபாசவிளக்கம்.

எங்கணுஞ்சிவனுளானென்றுணர்தலேயிறைவன்ரூப
மங்கவன்றொழிலெங்கணுமறிதலேதெரிசனந்தான்
திங்கள்வேணியனோடொன்றல்சிவயோகமலர்மணம்போற்
புங்கவேயத்தழுந்தல்போகமென்றறையுநூலே,

ஞானசாகரவெண்பா.

உணருமுணர்வுமுணர்த்துமுணர்வு
புணருமுணர்வும்புதைந்து-கணவனுட
னேகமாயன்பகலவின்புறுதனல்லசிவ
போகமாமென்றேபுகல்.

சிவபோகசாரம.

தத்துவத்தைவிட்டறிவிற்றுன்கலந்துதன்னிழப்பின்
மெத்துஞ்சுகத்தின்மிகவழுந்திச்-சுத்தமா
யொன்றுகிநின்றவுணர்வுமொழிந்தக்கா
லன்றேசிவபோகமாம்.

கலசையந்தாதி.

அருவுருவங்கடந்துநிறைந்தானந்தப்பரவெளியாய்
மருவுபெருஞ்சிவபோகவாரிதியிற்றுளைந்தாடி
யிரவுபகலற்றிருக்குமிவ்வாழ்வையெனக்களித்தாய்க்
குருகிமனங்கரைகிலேன்றிருககலசையுத்தமனே.

ஞானவிளக்கம்.

ஆக்கறக்குமன்னேரமம்புவிழுமன்னேர
நோக்கிமைக்குமன்னேரநுணணறிவா-னீக்கமற
நானென்னும்போதநழுவிச்சிவமானுர்க்
கீனபிறபபுண்டோவினி,

இதற்கு மேலாயோர் முத்தியின்று இஃதே முத்தி முடிவென்று தற்குப பிரமாணம்—

துகளறுபோதம்.

உற்றபரமானந்தத்தொன்றுயதிலுறங்கி
முற்றுவதேமுத்திமுடிவென்றுரைக்குங் - குற்றமிலா
வைதிகஞ்சைவம்வழிநூற்புராணமற்றுஞ்
செய்தவன்னூலெல்லாந்தெளி,

அம்பலவாணையாதசகாரியம்.

முத்தியுமிதுவேயாகும்முடிவும்வேறில்லையாகுஞ்
சித்தமுமிதுவேயாகுந்தெளிவுமேலில்லையாகும்
பித்துமின்றொழிவேயாமேற்பேறிசற்கில்லையாகு
மொத்தவிவ்வுடலுமின்றூறுவதுமில்லையாமே.

இங்ஙனம் பேரின்பத்துள் அதீதப்பட்டு பேரின்பாதீதமாய் வாழ்ந்துகொண்டிருத்தலே நின்மலாவத்தை யைந்தனுள் நின்மலதுரியாதீதமென்றதற்குப் பிரமாணம்—

பஞ்சாக்கரப்பஃறொடை.

ஒளிகுணமேயல்லாமலொண்பொருளொன்றன்று
தெளிபருதிச்சேர்விழிபோற்சேர்ந்தே-யொளியென்ன
நில்லென்றானந்தநேயநிலையாக்கியெனை
யில்லென்றேயின்புருவிலேகமாய்ச்-செல்லத்
துரியாதீதபெருமைசொல்லாமற்சொல்லி.

முன்னம் தத்துவசுத்திக்குக்கூறிய பிரமாணத்திலும்—

தத்துவத்தொழிலைக்காண்டல்சடமென்றறன்னைநீக்க
லததினுன்மேலென்றலருளினுன்மேலென்றல்
பத்தனுனருளாய்ச்செய்திபண்ணவேயெண்ணிநீக்கிச்
சித்தருளதுவாய்ப்போதல்சிவத்தினைச்சேர்தறேரே.

முன்ன நின்மலசாக்கிரத்திற்குக் கூறிய பிரமாணத்திலும்—

தன்னைத்தலைவனெனக்கருதல்தலைமையருளேயெனக்கருதல்
பின்னர்ப்புதிதாயருட்செயலைப்பெறவேயெண்ணலதைநீக்கி
மன்னித்திருவருளாய்ப்போதல்மகிழும்பரசிவனைச்சேர்தல்
துன்னிக்கருதுமவத்தையெனச்சொல்லுஞ்சுருதிசிவாகமமே.

சிவானந்தமாலை

தற்காண்டல்சாக்கிரமாந்தற்பரையேசொற்பனமாந்
தற்காணுவெற்றவெறுந்தற்பரையே-நற்சுழுத்தி
ஞானானந்தந்துரியஞானசுகபூரணத்தே
தானானவுண்மையதீதம்.

இங்ஙனங் கூறிவந்த சுத்தாவத்தை யைந்தனுள் நின்மலசாக்கிரத்திற் றத்துவரூப தெரிசனசுத்தி ஆன்மரூபமாகிய நாலும் நாலாய் நிற்கிறதென்றும், நின்மல சொற்பனத்திற் சிவரூப மான்மதெரிசனத டங்கி அவ்வான்மதெரிசனம் ஒன்று மொன்றாய் நிற்கிறதென்றும், நின்மல சுழுத்தியி லருள் செய்யும் பஞ்சகிருத்தியத்தை யான் செய்வே னென்று கருது தன் மாத்திரமே யன்றி அத்தசகாரியத்து ளொருகாரியமு மடங்கி நில்லாதென்றும், நின்மல துரியத்திற் சிவயோகமுஞ் சிவதெரிசனமு மான்ம சுத்தியி லடங்கி அவ்வான்ம சுத்தித் தானொன்று மொன்றாய் நிற்கிறதென்றும், நின்மல துரியாதீதத்திற் சிவபோகமாகிய ஆன்மலாப மொன்று மொன்றாய் நிற்கிறதென்றும், ஆங்காங்குக் காட்டிக கூறிவந்ததனாலை அத்தசகாரியம் பத்துந் தத்துவரூபந் தத்துவ தெரிசனந் தத்துவசுத்தி ஆன்மரூபம் ஆன்மதெரிசனம் ஆன்மசுத்தி ஆன்மலாபமென் றேழுபகுப்பாய் நிற்கிறதென்றதற்குப் பிரமாணம்.—

பஞ்சாக்கரப்பஃறொடை.

பிரியாதவஞ்சவத்தைப்பேசிற்சரியாத்
தசகாரியமேழாய்ச்சேரு-முவமை
வசமாங்கரும்பின்வகைகேணிசமான
சுத்தவத்தையாங்கரும்பின்றோல்கணுவைந்தாகுமுறை
முத்திவருசாக்கிரமுதலாய-பத்து
முழங்காரியமவற்றுண்மூன்றடங்கிப்பங்கேழ்
வழங்குமுறையைவகுக்கி-லொழுங்கான

தத்துவரூபமுடன்றற்காட்சிசுத்தியுயி
ரொத்தவுருபமுயர்காட்சி-சுத்தி
யிலாபமிவையெழிலிலங்குமுயிர்க்காட்சி
நிலாவுசிவரூபநேராக்-குலாவுசுத்தி
தன்னிற்றெரிசனமுஞ்சார்யோகமாமிரண்டு
மன்னுமிவையேழும்வருமுறையிற்-றுன்னுகின்ற
சாக்கிரத்தைந்துதருஞ்சொற்பனமொன்று
நீக்குஞ்சுழுத்திநிறைதுரியத்-தாக்கியிரு
மொன்றாமதீதத்தேயுற்றிடுமொன்றாகுமெனத்
தன்றாளின்பூசையனுட்டான-நன்றான
சுத்திநெறியாமெனவேசொல்லிடமெய்கண்டான்
வைத்தநெறிநூலும்வகுத்துணர்த்திட-பத்தா
குருலிங்கமுண்மையெனக்கூறிரீடின்பந்
தருமன்பையென்சொல்கென்றான்.

முன்னர் தத்துவ சுத்திக்குக் கூறிய பிரமாணமாகிய தத்துவத் தொழிலை காண்டலென்னுஞ் செய்யுண் முழுவது மிக்கருத்தைப் பற்றி வருமதுவுங் கண்டுகொள்க.

இங்ஙனம் பஞ்சபாசங்களை நீங்கிப் பேரின்பமாகிய பரமசிவத்தி லிரண்டறக்கலந்து அப்பரமசிவமேயாய்த் தானென்பதோர் அணுவளவுந்தோன்றாமல் வாழ்ந்துகொண்டிருக்கின்ற பரமுத்தனுக்கு அப்பரமசிவத்தைப்போலச் சர்வஞானமுஞ் சர்வகிருத்தியமு முண்டாகாதோவென்று வினயதற்கும், அதற்குக்கூறிய விடைக்கும் விதப்பு படிக்கிப் பிரமாணம்—

சிவநெறிப்பிரகாசம்.

இருண்மலமுமாயைவினையெல்லாநீங்கிலெவ்வறிவுமெத்தொழிலு மிறைபோலிங்கே, மருவியிடாதேதென்னிலான்மாக்கட்குவரம்பிழந்த சத்தியுளவகைகளையவ்வாறே, கருமலந்தன்சத்திகளாற்றடுத்துநிற்குங் கடவுடனைக்காணாமற்றடுத்தசத்தி, குருவருளானீங்கியிடச்சுவானுபூதி கூடியிடுமற்றவைகள் கூறுங்காலே.

மற்றைய சத்திகளும் விலகிச் சர்வஞானமுஞ் சர்வகிருத்தியமு முண்டாக வேண்டுமேயாகில் மணிமந்திர அவிடதங்கண் முதலிய நானாவித வுபாயங்களினாலு மவைகட்கு நூல்களிற் கூறியபடியே யனுட்டித்துவந்தால் அவைகளும் விலகிச சர்வஞானமுஞ் சர்வகிருத்தியமு மெளிதாகவே யுண்டாமென்றதற்குப் பிரமாணம்—

சிவஞானசித்தியார்.

மந்திரத்தான்மருந்துகளால்வாய்த்தயோகத்தான்மணியிரதகுளி
கையினான்மற்றுமற்றுந், தந்திரததேசொன்னமுறைசெய்யவேத சகல
கலைஞானங்கடிரிகாலஞான, மந்தமிலாவணிமாதிஞானங்களெல்லா ம
டைந்திடுமோசானருளாலடிசேர்ஞானம், வந்திடுமற்றொன்றாலும்வாரா
தாருமற்றவையுமவனருளான்மருவுமன்றே.

சிவநெறிப்பிரகாசம்.

செய்திடுநற் சிவபூசையாதிதொழிலாலுஞ் செப்பரியதவத்தாலுஞ்
செபத்தினாலு, மெய்தருஞ்சிரட்டாங்கயோகத்தாலுமெழிற்றீர்த்தமாடி
யதினாலுமன்பாய்ப், பெய்திடுதானத்தாலும்விரதத்தினாலும்பெயர்ந்தி
டுமாணவசத்திபெயர்ந்துபோந்தடைவே, மெய்தருஞ்சீர்ஞானங்கடொ
ழில்கள்சத்திவிளங்கியிடுமவைசொருபமலவிகற்பமென்னே.

தத்துவராயர்வாக்கியம்.

வானிலேபறக்கமண்ணிலேநுழையவானவர்வணங்கமற்றொருவ
ரூனிலேபுகுதவவரவர்தங்களுளந்தனினினைந்ததுமுரைக்கப்
போனதோருயிரையெழுப்பவெண்சித்திபுகன்றதேலாங்கையில்வரினு
ஞானமேயில்லையாயினன்னவரைநாயினுங்கடையெனநாடே.

அங்ஙன மெளிதாக வுண்டாமாயினு மவைகளனைத்தும் விகற்ப ஞானமேயன்றித் தற்போதம் போய்ச் சுமமாவிருந்து அனுபவிக்கின்ற வின்பாதீதமாகிய .வரிய நிருவிகற்பஞான மாகா தென்றதற்குப் பிர மாணம்—

சிவஞானசித்தியார்.

பரஞானத்தாற்பரத்தைத்தரிசித்தோர்பரமேபார்த்திருப்பர்பதார்த்தங்கள்பாரார்பார்க்க, வருஞானம்பலஞானமஞ்ஞானவிகற்பம்வாச்சியவாசகஞானம்வைந்தவத்தின்கலககந், தருஞானம்போகஞாதிருஞானஞேயந்தங்கியஞானஞ்சங்கற்பனேஞானமாகுந், திருஞானமிவையெலாங்கடந்தசிவஞானமாதலாற்சீவன்முத்தர்சிவமேகண்டிருப்பர்

தாயுமானசுவாமிபாடல.

கந்துகமதக்கரியை வசமாநடத்தலாங்
கரடிவெம்புலிவாயையுங்
கட்டலாமொருசிங்கமுதுகின்மேற்கொள்ளலாங்
கட்செவியெடுத்தாட்டலாம்
வெந்தழலினிரதம்வைத்தைந்துலோகத்தையும்
வேதித்துவிற்றுண்ணலாம்
வேறொருவர்காணாமலுலகத்துலாவலாம்
விண்ணவரையேவல்கொளலாஞ்
சந்ததமுமிளமையோடிருக்கலாமற்றொரு
சரீரத்தினும்புகுதலாஞ்
சலமேனடக்கலாங்கனனமேலிருக்கலாந்
தன்னிகரில்சித்திபெறலாஞ்
சிந்தையயடக்கியேசுமமாவிருக்கின்ற
திறமரிதுசத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்டவறிவானதெய்வமே
தேசோமயானந்தமே.

வருகாலத்திரங்கல்.

இம்மானிலத்திலிருந்தபடியே யிருந்து
சும்மாவருளேதொடருநாளெந்நாளோ.

சிவபோகசாரம்.

தாகமறந்துசதுர்மறந்துதான்மறந்து
தேகமறந்தட்டமாசித்திமறந்-தாகத்தின்
வந்ததறியாதிருந்துமாறாச்சிவானந்தஞ்
சந்ததம்வாழ்வார்க்கார்சரி.

ஞானமணமாலை.

மூலமலந்தன்னிலேமூழ்கிமலமென்னுமற்
சாலவதிலழுந்துந்தன்மைபோற்-சீலமுட
னென்றிரண்டதென்றுதேயொன்றுடனுந்தாக்காதே
நின்றுவிடுமுத்தியிலேநீ

இங்ஙனமாயுள்ள வின்பாதீதமாகிய வரிய நிர்விகற்ப சமாதியி லுறைந்து அச்சிவமேயா யொன்றுபட்டிருக்கின்ற முத்தனுக்கு முப்பொருளு நித்தியமென்று முத்தியினு மூன்றுபொருளு மூன்று முதலாய் நிற்குமென்றுமாகமங்கள் கூறுகின்றதென்றதற்கு பிரமாணம்—

உண்மைவிளக்கம்.

முத்திதனின்மூன்றுமுதலுமொழியக்கேள்
சுத்தவனுபோகத்தைத்துய்த்தலனு-மெத்தவே
யின்பங்கொடுத்தலிறையித்தைவிளைவித்ததன்மல
மன்புடனேகண்டுகொளப்பா.

சிவானந்தமாலை.

மும்முதலுநித்தமெனமொழிந்தேமுத்தியினு
மம்முறையேயாமென்றேமாங்கதுகேள்-மும்மைக்
கழிவின்மைகாணுங்காலாராதவின்ப
மொழிவின்மையேமுதன்மூன்றும்.

அது காண்பானுங் காட்டுவதுங் காண்பதுமா யனுபவிக்கின்ற சிவன் முத்தனுக்குக் கூறியதே யன்றி அத்திரிபுடியும் போய்த் தற்போதமு மடங்கிப் பாவனாதீதப்பட்டு இன்பாதீதமாய் நிற்கின்ற பரமுத்தனுக்குக் கூறியதன்று. அப்பரமுத்தனுக்கு முத்தியினிடத்து அம்மும்முதலு மோர்முதலாய் விளங்கி நிற்குமென்பதே ஆகமசித்தாந்தமென்றதற்குப் பிரமாணம்—

சிவஞானப்பிரகாசவெண்பா.

அர்துவிதமுத்தியளித்தகுருநாதாவென்
பொய்த்துவிதம்போமாறுபோதித்த-கத்தனே
முத்தியிலுமும்முதலுமுண்டென்றுரைப்பதுவுஞ்
சத்தியமோமித்தையோசாற்று.

சைவிலுறுபுண்ணுக்குக்கண்ணாடிவேண்டுமோ
மெய்யுணர்விலுண்டோவிபரீத-மையறிவு
மோரறிவாய்ப்போனவிடத்தோகோகோமும்முதலுஞ்
சோராமனிற்குமோசொல்.

சிவானந்தமாலை.

பற்றியெழுந்தற்போதக்கற்பனையும்பாவனையு
மற்றமனவாசகமுமாண்டொழிந்த-வெற்றவெறு
மாராதவின்பவதீதத்தேமும்முதலுஞ்
சோராமல்வைக்கத்தோடம்.

சிவானுபூதிவிளக்கம்.

பதிபசுபாசப்பரப்பறிந்துபார்க்கப்
பதிபசுபாசப்பரப்பாயிருந்தே.

திருமந்திரம்.

பதிபசுபாசமெனப்பகர்மூன்றிற்
பதியினைப்போற்பசுபாசமனாதி
பதியினைச்சென்றணுகாப்பசுபாசம்
பதியணுகிற்பசுபாசநிலாவே.

இங்ஙனமாயுள்ள முத்தியை நான்காகக்கூறுதலேயன்றிப் பரமுத்தி யைச்சேர்த்து ஐந்தாகக்கூறினரில்லையே, நின்மலாவத்தையை ஐந்தாக

க்கூறுதலேயன்றிப் பரமுத்திக்கோர் அவத்தைகூட்டி யாறுகக்கூறின ரில்லேயேயாகையால், இங்ஙனம் முத்தியென்பதொன்றாயிருக்க, ஈண்டுச் சீவன்முத்தி பரமுத்தியென்று இருவகையாகக் கூறியதென்னையெனில், உறக்கமென்பதொன்றேயாயினுந் தற்போதம்போய் நிர்விகற்பியாய் ஓரமளியிற் கிடந்துறங்குவோன் உறக்கத்திற்கும் நடந்துறங்குவோனுறக்கத்திற்கும்வயல்களினடக்கும்போதோரகிதமுஞ் சமநிலத்தினடக்கும்போதோர்இதமுமாய்த் தற்போதங்கொண்டு விகற்பித்துநின்றதுபோல முத்தியென்பது மொன்றேயாயினுந் தற்போதம்போய் நிர்விகற்பியாய் நின்று அனுபவிக்கின்ற பரமுத்தன் அனுபவத்திற்குஞ் சீவன்முத்தன் அனுபவம் பாசங்களைநீக்கி தன்னோடொன்றுபடுத்திய பரமசிவத்தை இன்று நன்றாய்ப் பூசித்தோமென்றும், நன்றாய்ப் பூசியாமற் போனோமென்றுந் தற்போதங்கொண்டு இதாகிதங்களுற்றுப் போதவிகற்பங்கொண்டு நின்ற சீவன்முத்தனனுபவத்தினைப் பிறித்துக்காட்டுதற்காக ஈண்டிருவகையாகக் கூறியதென்றுங் கண்டுகொள்ளென்றதற்குப் பிரமாணம்—

சிவஞானசித்தியார்.

சன்மார்க்கஞ்சகமார்க்கஞ்சற்புத்திரமார்க்கந்தாதமார்க்கமென்றுஞ் சங்கரனைபடையு, நன்மார்க்கநாலிவைதாஞானயோகக்கிரியாசரியையெனநவிற்றுவதுஞ்செய்வர், சன்மார்க்கமுத்திகள்சாலோக்கியசாமீப்பியசாரூப்பியசாயுச்சியமென்றுசதுர்விதமா, முன்மார்க்கஞானத்தாலெய்துமுத்திமுடிவென்பர்மூன்றினுக்குமுத்திபதமென்பர்.

அமபலவாணையாதசகாரியம.

முத்தியைநான்கதாகமொழிந்தனர்பரமமாகு
முத்தியரடைந்ததாகமொழிந்தனரில்லையாறுய்ச்
சத்தியவவத்தைதன்னைச்சாற்றினரில்லைமுன்னு
ளுத்தமனுரைத்தானெனுமுணருமாறுணர்ந்துகொள்ளே.

சிவனைச்சிவனோடொத்துத்தெளிவுறுமுத்திதன்னைப்
பாவினிற்சீவன்முத்திபகருமேற்பரமமுத்தி
மேவுவனென்றுமந்நூல்விளம்புமால்வியப்பங்கேணீ
யாவதுமிரண்டுமொன்றேயாயினும்விகற்பஞ்சொல்வாம்.

## வயிராக்கியதீபம்.

நடந்துறங்கொருவன்றனைமலரமளிநண்ணுமாபுரியின்மற்றவனுங், கிடந்துறங்குவதைக்குறித்து முன்னுறக்கம்விழித்தவர் கிளக்குதல்போலுந், தொடர்ந்தொருகணமுமிடைவிடாஞானநிட்டைதூயதன்சமாதி, யடைந்தனர்விடுத்தனரொன்பரோகாந்தமவர்க்கனுகூலமாதலினே.

## அம்பலவாணையாதசகாரியம்.

பருமானமலத்தினாலேபடுமுயிரனைத்துந்தம்பான்
மருவிடக்கொணர்ந்தவீசன்வடிவனைத்தினுக்கும்பூசை
யொருவிடிற்றுயரமாகுமுற்றிடின்மகிழ்ச்சியாகுந்
தருமவையிரண்டுநீங்கத்தருதலேபரமமுத்தி.

மேல்முடிவினில் ஈதிங்கொளி ரொருபாவுண்மையுபதேசம் என்று கூறியதென்னையெனில். இதுவரையுங்கூறிய வுண்மை முழுதையுந் தன்னுளடக்கிய விபபாட்டென்பாரொன்றும், இதுபோல உண்மை முழுதையுந் தன்னுளடக்கி யொருபாவாய்நிற்கின்றது வேறொன்று மின்றாய் இஃதொன்றுமே இவ்வுலகத்தின்கண் அரிதாகவுளதாய் நிற்கின்றதென்பார் இங்கென்றும், இயல்புகளிரண்டனுள் இது திரிபதார்த்தங்களின் பொதுவியல்பை பிரகாசிக்கக்கூறுகையால், அப்பிரகாசந் தோன்ற வொளிரொன்றும், இவ்வொருபாவினாலே அனாதிதொடுத்து மோட்சவரையாயுள்ள உண்மைகளனைத்தையும் மாணவகனுக்கு ஆசாரியர் உபதேசிக்கையால் ஒருபாவுண்மையுபதேசமென்றுங் கூறியதெனவறிக.

ஈதிங்ஙனம் இவ்வுலகத்தின்கண் அருமையுடைத்தாயிருக்கின்றதென்கையால் இதனைப் பருவமுற்றிருக்கின்ற பக்குவர்க்கேயல்லது மற்றையர்க்கு உபதேசிக்கலாகாதென்பது கருத்து. இதில் இயல்புகள் இரண்டென்றதற்குப் பிரமாணம்—

அம்பலவாணையாதசகாரியம்.

இயல்பதிரண்டதாகவியம்புமொட்பொருட்கு
மயலதுவன்னியத்தின்மன்னிடல்பொதுவதாகு
மயலதிற்சார்தலின்றிபடங்கறன்னியல்பதாகு
முயலுமுபபொருட்குத்தத்தம்முறைமையைவகுத்துச்சொல்வாம்,

சிவஞானசித்தியார்.

அன்னியசாதியுந்தன்சாதியுமகன்றுநிற்ற
றன்னியல்பன்னியத்தைத்தவிர்ந்துதன்சாதிக்கொத்த
றுன்னியபொதுவியற்கைசொன்னவிவ்விரண்டினுள்ளே
மன்னியபொருள்களியாவுமடங்கிடுமோனமுற்றால்.

ஈதிங்ஙன மிவ்வுலகத்தின்கண் அருமையுடைத்தாயிருக்கின்றதென்கையால், இதனைப் பருவமுற்றிருக்கின்ற பக்குவர்க்கேயல்லது மற்றையர்க்கு உபதேசிக்கலாகாதென்றதற்குப் பிரமாணம்—

பதிபசுபாசவிளக்கம்.

இந்நூலைப்பருவமிலார்க்கியற்கவீந்தக்கான்
முன்னூலைச்சூத்திரர்பால்மொழிந்தகரிசுறுகின்றாய்
நன்மாலைகுரங்கறியாநலம்போலுஞானதனைத்
துன்மார்க்கரறியாததோற்றம்போலுந்துணிந்தே.

யானெனதெனுஞ்செருக்கைபிரித்தொளியாயெறிக்கு
ஞானதேசிகற்குத்தன்னை * நதிரகொடுத்திறைஞ்சாநின்ற
வானமாணுக்கற்கிந்தவனுபவமறையலாகு
மேனையோர்க்குரைப்பினன்றேயிருள்புரைநிரையத்தெய்தும்.

---

* நதிர்-திசைச்சொல்.

### சுருதிசாரவிளக்கம.

ஐபாசையாருசையற்றவறிவுடையோரை
யைடயாணடாயிறுமன்றியாண்டேனுஞ்சோதிக்குப
பொட்யாவிக்நூலை க்குபபோதிககடிகழ்கியின்
பொயடாரும்புலைரிணையம்டருவர்புவியுள்ளளவும

### சிவதருமோத்திரம

உகைகயினையைந்தலையடநாகமெனவஞ்சி
நீக்கினவாக்குருகிநின்மலனவின்ற
வாககைறகமறைறபாதமகககைறயுமந்நா
கெடுத்ரியில்வீழநிடுவாசோந்தவருமாட்ந்தே.

### பரமார்த்ததெரிசனம.

மறானக்குசசொல்லியவிம்மறைப்பொருளமாதவமிலர்கருக
நட அறிவுசதறிவரஞர் நருவதிபாடிலாதயாகருகு
சோறறயனசசழககினாகடியெனைநினையாதநிறதினர்கரு
மறமறத்தெரிந்துரைக்கையடாதென்றேடறிகண்டாய்

### சிவப்பிரகாசம

திருவருள்கொடுத்துமற்றச்சிவப்பிரகாசநன்னூல்
விரிவதுதெளியுமாற்றல்விளம்பியவேதநோக்கிப்
பெருகியவுவமைநாடிகுபெற்றியிற்றயிபபின்முன
றருமலைவொழியகொள்வோன்றன்மையிற்சாற்றலாமே.

இந்நூலி னிடத்து நின்மலாவத்தை ஐந்தனுள் தெளிவதாக விளங்கக் கூறிய சத்திய சத்தமாகிய தசகாரியம் பத்தில் தத்துவரூபந் தத்துவதெரிசனம் தத்துவசுத்தி ஆன்மரூபமாகிய நான்குஞ் சிவஞான போதத்திலுஞ் சிவஞானசித்தியாரிலுங் கூறிய இரண்டாஞ் சூத்திர

மைந்தாஞ் சூத்திர மாறுஞ் சூத்திர மேழாஞ் சூத்திரங்களின் கருத்தைப்பற்றிக் கூறியதெனவும், ஆன்மதெரிசனமுஞ் சிவரூபமுமாகிய இரண்டும் எட்டாஞ் சூத்திரத்தின் கருத்தைப்பற்றிக் கூறியதெனவும், ஆன்மசுத்தியுஞ் சிவதெரிசனமுஞ் சிவயோகமுமாகிய மூன்றும், ஒன்பதாஞ் சூத்திரம் பத்தாஞ் சூத்திரங்களின் கருத்தைப் பற்றிக் கூறியதெனவும், சிவயோகமாகிய வானமலாய மொன்று பதினோராஞ் சூத்திரத்தின் கருத்தைப் பற்றிக் கூறியதெனவுங் கண்டுகொள்க. இதற்குப் பிரமாணம்—

திருவண்ணாமலையாதசகாரியம்.

இரண்டினி னைந்திலாறிலேழினிலெட்டுத்தசகாரி
யிரண்டிரண்டொன்றதாய்த்திகழொன்பானுடனுருகனி
வீர மிலாப்பேறுதனிலிருக்கிடப்பதோர்தொடர்பிற்
றிரண்டெழுமுபதேசங்களிவ்ஞானபோதத்தே

எனவும் எடுத்துக்காட்டிய பிரமாணங்களா [illegible].

---

*வற்றிபோன்மூலமதிலேதெரியுமாக்கை
வற்றிப்போலிவ்வுரையாமற்றிதானு-சிற்றின்பந்தேடா
பொய்த்தவர்க்குப்பொய்யாகும்பொய்ம்மையிலாட் [illegible]
மெய்ந்தவர்க்குமெய்யாய்விடும்.

உற்றதொருமூலக்குறையைமுறையுணர்ந்து
பெற்றவிதப்பும்பெருவிரிப்பிற்-சொற்ற
வுதாரணங்கள்முற்றுமொழியு [illegible]
விதாரணாக்குவியவிளங்கும்.

ஆசையான்மூலத்தையணைத்துமுள்ளடக்கி
யோசையொடுஞ்சேர்த்துணர்ந்துதெளிந்-தேசமிரண்
டென்றுதனிட்டையியையந்தோபிறவியெனுந்
தன்றோய்போய்வீடுறுவர்தாம்.

---

* வற்றி-தீவர்த்தி.

நான்வரையவல்லவனோநாதனுளத்தேயிருந்து
தான்வரைவதல்லாலிக்[illegible]ணியோர்-நான்வரைந்தே
னென்பாரொலாமியற்றுமீசனெனவறியா
வன்பாவிகடாமறந்து.

ஒருபாவொருபஃதுரைக்கிங்குரைத்தவுதாரணமாய்
வருபாவறுநூற்றொன்றாகவழங்குமதனைவகுத்தமெய்நூ
லொருநூற்றிருபானுன்கனைத்துமுறையோடுணர்ந்துதெளிந்தோரே
யருநான்மறையோதின்பவெள்ளத்தழுந்தித்தாம்போய்வாழ்வாரால்.

ஈனனுங்கடைநாயினேற்கெளிதாகவந்தெனதிருளகற்றியே
யானபேரொளிதந்ததற்குணன்றவிருத்தியன்பாகவோங்கிய
மோனமானபேரின்பவாரியின்மூழ்கவைத்தொளிர்முத்திதந்தருண
ஞானபானுவும்வாழியன்னவனூல்விளங்குஞாலங்கள்வாழியே.

## ஒருபாவொருபஃதுரை

முற்றிற்று.

மெய்கண்டதேசிகன் மெல்லடிவாழ்க.

சிவஞானயோகிகள் சேவடிவாழ்க.

திருச்சிற்றம்பலம்.

மகாமகோபாத்யாய, டாக்டர்

உ. வே. சாமி[illegible]